# புதிராய் ஒரு புன்னகை

## 1



அரவிந்தன் அந்தக் கட்டிடத்தை நிமிர்ந்து பார்த்தான்.

''அதோ இரண்டாவது மாடி ஜன்னல் தெரிகிறதே, அந்தக் குடியிருப்புதான்'' என்று நடைபாதை இஸ்திரிக்காரன் சொன்னான்.

அரவிந்தன் அவனுக்கு நன்றி சொல்லிவிட்டு கட்டிடத்தில் நுழைந்தான்.

அவன் இரண்டாவது மாடிக்குப் போய்ச் சேரும்முன், அரவிந்தனைப் பற்றி சில வரிகள் -

**வயது:** முப்பத்தியிரண்டு.

**உயரம்:** ஐந்து அடி, பதினோரு அங்குலம்.

**எடை:** எழுபத்தியிரண்டு கிலோ.

**மார்பு:** தொண்ணூற்றியிரண்டு செ.மீ.

**கண்கள்:** கறுப்பு.

**தொழில்:** இந்த அத்தியாயம் முடிவதற்குள் நீங்களே தெரிந்து கொள்ளப் போகிறீர்கள்!

அரவிந்தன் இப்போது வீட்டுக்கு வீடு பொருட்களைக் கொண்டு விற்பனை செய்யும் விற்பனைப் பிரதிநிதி போல் உடுத்தியிருந்தான்.

கருநீல நிற பேண்ட். வரிகள் ஓடும் முழுக்கைச் சட்டை. கழுத்திலிருந்து மார்பின் குறுக்கே அகலமான டை. இடுப்பில் நவீன பெல்ட். கால்களில் கறுப்பு நிற பளபள ஷூக்கள்.

அவன் கையில் புதிய உருவம் கலையாமல் நான் கைந்து பிளாஸ்டிக் செட்கள்.

இரண்டாவது மாடியில் மூன்று குடியிருப்புகளுக்கான கதவுகள் அவனை எதிர்கொண்டன.

இரண்டு கதவுகள் பூட்டியிருந்தன.

மூன்றாவது கதவின் பக்கத்தில் பொருத்தப்பட்டிருந்த ஸ்விட்சை அவன் அழுத்தினான்.

உள்ளே அழைப்பு மணி ஒலித்தது.

சில நொடிகள் கழித்து கதவு சற்றே திறந்தது. வட்டமான ஒரு பெண் முகம் எட்டிப் பார்த்தது.

''மேடம்... நான் ராயல் பிளாஸ்டிக் கம்பெனியின் பிரதிநிதி. மார்க்கெட்டில் நாங்கள் புதிதாய் அறிமுகப்



படுத்தும் டப்பா செட்களைக் கொண்டு வந்திருக்கிறேன். அறிமுக விலை என்று அறுபது சதவீதம் தள்ளுபடி விலையில் உங்களுக்குக் கிடைக்கும். ஒன்றின் விலை...''

அந்தப் பெண் அவனைக் கோபமாகப் பார்த்தாள்.

''எந்த பொருளும் எங்களுக்கு வேண்டாம்'' என்றாள். கதவைச் சாத்த முனைந்தாள். ஆனால் மூட இயலவில்லை. கதவை எதுவோ தடுக்கிறது என்று புரிந்து குனிந்து பார்த்தாள்.

அரவிந்தனின் ஒற்றைக் கால் குறுக்கே வைக்கப்பட்டிருந்தது.

''என்ன இது?''

''மேடம்... நான் சொல்வதைக் கேளுங்கள். குழந்தைகளுக்கான உணவுப் பொருட்களை இந்த டப்பாக்களில் வைத்தால், வெகுகாலத்திற்குக் கெட்டுப்போகாமல் இருக்கும். உங்கள் வீட்டில் நிறைய குழந்தைகள் இருப்பதாய்க் கேள்விப்பட்டேன்...''

''முதலில் காலை எடு...'' என்று அந்தப் பெண் உறுமினாள்.

அரவிந்தன் தோளால் கதவை அழுத்த, அந்தப் பெண்ணின் முயற்சியையும் மீறி கதவு சடாரென்று திறந்தது.

அந்தப் பெண் அலறினாள்: ''காசி... இங்கே வாயேன்...''

காசி என்று அழைக்கப்பட்டவன் உள்ளறையிலிருந்து பரபரவென்று வெளிப்பட்டான்.

உயரமாய், அகலமாய், கொடிய முகத்துடன் இருந்தான்.

கேள்விகள் கேட்காமல் அவன் அரவிந்தன் மேல் பாய்ந்தான்.

அரவிந்தன் கையிலிருந்த பொருட்களைக் கீழே வீசினான். காசியை எதிர்கொண்டான். காசியின் பாதையி லிருந்து சற்றே நகர்ந்தான்.

அரவிந்தனை நோக்கி காசி பாய்ந்த வேகத்தில், அர விந்தன் வெகு திடீரென்று நகர்ந்ததும், காசி தடுமாறி னான். அரவிந்தனை தாண்டி ஓரடி அவன் பாய்ந்துவிட, அரவிந்தன் தன் காலை உயர்த்தி காசியின் முதுகில் உதைத்தான்.

காசி உந்தித் தள்ளப்பட்டவனாய் அங்கிருந்த தொலைக் காட்சிப் பெட்டியின் மீது மோதி அதையும் சரித்துக் கொண்டு கீழே விழுந்தான். விழுந்த வேகத்தில் கீழே யிருந்த ஒரு கனத்த புத்தகத்தை எடுத்து அரவிந்தன் மீது வீசினான்.

அரவிந்தன் முகத்தை நகர்த்தி அந்தப் புத்தகத்தைத் தவிர்த்தான்.

அந்தப் பெண் பின்னாலிருந்து அரவிந்தன் முதுகில் ஒரு மேஜை விளக்கை இறக்கினாள்.

அரவிந்தன் சற்றே வலியில் முகம் சுளித்தான். ஒற்றைக் கையால் அந்தப் பெண்ணை உந்தித் தள்ளினான்.

"நிறுத்து" என்று அதிகாரமான குரல் கேட்டது.

அரவிந்தன் திரும்பினான்.

உள்ளறையிலிருந்து இப்போது இன்னொரு ஆசாமி அங்கு வந்து நின்றிருந்தான். அவன் கையில் ஒரு சிறு துப்பாக்கி.

அந்த ஆசாமியின் தோற்றம் வினோதமாயிருந்தது.

அப்போதுதான் பூஜையிலிருந்து எழுந்து வருவது போல் சட்டையில்லாத மார்பில் திருநீறுப் பட்டைகள்.



காது மடலில் செருகப்பட்ட துளசி இலை. சதுரமான உயர்ரக மூக்குக் கண்ணாடி, சட்டை அணிவித்து, பேண்ட் போட்டால் மிக கண்ணியமான தோற்றம் தரக் கூடிய உருவம். ஆனால் இப்போது கையில் சிறு துப்பாக்கி.

அரவிந்தன் துப்பாக்கியைப் பார்த்ததும் நிமிர்ந்தான். கைகள் இரண்டையும் மேலே உயர்த்தி எழுந்தான்.

காசி அவனைப் பின்னாலிருந்து இப்போது தைரியமாக உதைத்தான். ஆனால், அரவிந்தன் அதற்காகத்தான் காத்திருந்தான்.

அந்த உதையில் சற்று அதிகப்படியாகவே உந்தித் தள்ளப்பட்டவன் போல அரவிந்தன் முழு வேகத்துடன் பாய்ந்து துப்பாக்கி பிடித்திருந்தவனை மோதினான்.

மோதிய வேகத்தில் அவனைக் கீழே தள்ளினான்.

இருவரும் இரண்டுமுறை சேர்ந்து புரண்டு எழுந்த போது - துப்பாக்கி அரவிந்தனின் கைக்கு மாறியிருந்தது.

அரவிந்தன் புன்னகைத்தான்.

''நண்பரே... உங்கள் பெயர்தான் சத்யமூர்த்தியா? என்ன ஒரு சிறப்பான பெயரை வைத்துக்கொண்டு, என்ன ஒரு இழிவான செயலைச் செய்கிறீர்கள்?''

அரவிந்தன் சொன்னதைக் கேட்டதும் அந்த ஆசாமி திகைத்துப்போய் அவனைப் பார்த்தார். ''யார் நீ?'' என்றார்.

''என் பெயர் அரவிந்தன். துப்பாக்கிகளைப் பற்றித் தெரிந்தவன். துப்பாக்கிகளைப் போலவே உங்களைப் போன்ற ஆட்களைப் பற்றியும் தெரிந்தவன்...''

''யார் நீ என்று கேட்டேன்...''

“சென்னை காவல்துறையைச் சேர்ந்தவன்... இன்ஸ்பெக்டர் அரவிந்தன்... உங்களையெல்லாம் கைது செய்ய வந்திருப்பவன்...”

சத்யமூர்த்தி சற்று ஆவேசமாகி, “எதற்காகக் கைது? என்ன தப்பு செய்தோம், நாங்கள்?”

“இந்தத் துப்பாக்கிக்கு முறையான உரிமம் இருக்கிறதா உங்களிடம்? இருக்காது. துப்பாக்கி வைத்திருக்கிறீர்கள் என்று எனக்கு சொல்லப்பட்டது. அதை வெளியே கொண்டு வரத்தான் நான் அத்துமீறி நுழைந்தவன் போல் செயல்பட்டேன்... சத்யமூர்த்தி... உங்களைப் பற்றி மற்ற விபரங்களை நான் சொல்லும் முன், இதே மாடியில் இன்னும் இரண்டு குடியிருப்புகள் பூட்டி இருக்கின்றனவே, அவற்றைத் திறந்து விடுங்கள்...”

“எ... என்ன பேத்தல்? மற்றவர்களுடைய குடியிருப்புகளை நான் எப்படித் திறக்க முடியும்?”

“அய்யா நண்பரே, இங்கே வரும்முன் எல்லா விபரங்களையும் நான் வாங்கி அலசிவிட்டுத்தான் வந்தேன். மூன்று குடியிருப்புகளையும் நீங்கள்தான் வாடகைக்கு மொத்தமாக எடுத்திருக்கிறீர்கள்... நீங்களாக சாவி போட்டுத் திறக்கவில்லை என்றால் இதே துப்பாக்கியால் அந்தப் பூட்டுகளை தகர்த்துத் திறக்க வேண்டியிருக்கும்...”

காசி ஆவேசமுற்று அரவிந்தனை நோக்கி ஓரடி எடுத்து வைக்க, அரவிந்தன் துப்பாக்கியை உயர்த்தி அவனைத் தடுத்தான்.

“உங்கள் ஆட்டம் எல்லாம் முடிந்து விட்டது. இந்தக் கட்டிடத்தைச் சுற்றி முக்கியமான இடங்களில் போலீஸ் நிறுத்தப்பட்டிருக்கிறது. யாரும் தப்பித்து ஓடி விட



முடியாது... ஒழுங்காக சரணடைவதே மேல்... உங்கள் மூவரின் லீலைகள் எல்லாம் எங்களுக்குத் தெரியும்...”

சத்யமூர்த்தியும், அந்தப் பெண்மணியும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டனர்.

“வீட்டை விட்டு ஓடிவரும் பெண்கள், தனியாக ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து சேரும் பெண்கள்... இவர்களையெல்லாம் அன்பான வார்த்தைகள் சொல்லி மடக்கி அழைத்துவர இந்தப் பெண்மணி... இவள் பெயர் புனிதா. செய்வது என்னவோ புனிதமற்ற காரியம். அப்படி ஏமாந்து வந்த பெண்களை போதை மருந்துக்கு அடிமையாக்கி ஆபாசப் படங்கள் எடுத்து வெளிநாட்டுக்கு அனுப்பும் கூட்டத்தின் முக்கியமான மூன்று புள்ளிகள் நீங்கள்...”

“இல்லை, பொய்...” என்று அந்தப் பெண்மணி கத்தினாள்.

“சினிமாவில் நடிக்கும் ஆசையுடன் வந்து சேரும் பெண்களையும், காதல் என்ற பெயர் சொல்லி கல்லூரிப் பெண்களை மயக்கவும், மடக்கவும் ஒரு இளைஞர் படையே வைத்திருக்கிறீர்கள். அந்த இளைஞர்களையெல்லாம் போலீஸ் மடக்கிப் பிடித்துவிட்டது. அவர்களிடமிருந்து கிடைத்த வாக்குமூலங்களை வைத்துத்தான் நான் இங்கே வந்திருக்கிறேன்...”

“காசி... என்னடா இது?” புனிதா அலறினாள்.

“பெண்களை மடக்கத் தனித்தனியே செயல்படும் நீங்கள் இன்னொரு கீழ்த்தரமான, கேவலமான செயலிலும் ஈடுபட்டிருக்கிறீர்கள்... சத்யமூர்த்தி, புனிதா இருவரும் குழந்தைகள் அற்ற தம்பதிகள் போல கண்ணியமான

உடை அணிந்து குழந்தைகள் இல்லத்திற்குப் போவீர் கள்... பெண் குழந்தைகளை தத்து எடுப்பதாகச் சொல்லி அந்த இல்லத்திற்கு நன்கொடை கொடுத்து அழைத்து வருவீர்கள். அந்தப் பெண் குழந்தைகளை சில வெளி நாட்டு ஏஜன்சிகளிடம் நல்ல விலைக்கு விற்று விடுவீர்கள்... அந்தக் குழந்தைகள் வெளிநாடுகளில் எவ்வளவு கீழ்த்தரமான காமக் களியாட்டங்களுக்குப் பழக்கப்படுத்தப்படுகிறார்கள் என்று தெரிந்தும், இரக்க மின்றி குழந்தை வியாபாரமும் செய்து வருகிறீர்கள்...''

காசி ஆத்திரமுற்று அரவிந்தன் மீது பாய்ந்தான். அரவிந்தன் சற்றே நகர்ந்து துப்பாக்கியின் பின்புறத்தால் காசியின் மண்டையில் ஓங்கி அடித்தான்.

காசி கீழே விழுந்து அடங்கினான்.

''அந்தக் கதவுகளைத் திறங்கள்...'' என்று உறுமினான், அரவிந்தன். அவன் ஒரு விசில் ஒலித்ததும் இன்னும் பல காவல்துறையினர் வந்து சூழ்ந்தனர்.

2



''அப்புறம்?'' என்றாள், இந்திரா, இமைகளைப் படபடத்து.

அரவிந்தன் அட்டைப் பெட்டியிலிருந்து ஒரு இனிப்பை எடுத்து அவள் வாயில் திணித்தான்.



''அப்புறம் என்ன? அந்த இரண்டு குடியிருப்புகளின் கதவுகளையும் உடைத்துத் திறந்தோம்... சொன்னால் நம்ப மாட்டாய்... வலதுபுறம் இருந்த குடியிருப்பில் பன்னிரண்டு பெண்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர். பத்து பேர் அரை மயக்கத்தில் இருந்தார்கள். இருவர் மயக்கத்திலிருந்து அப்போதுதான் விடுபட்டுக் கொண் டிருந்தார்கள்... அவர்கள் தப்பித்துப் போகக்கூடாது என்பதற்காக, பன்னிரண்டு இளம் பெண்களும் முற் றிலும் நிர்வாணமாகவே அடைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களுக்கு எந்தத் துணிகளும் கொடுக்கப்படுவ தில்லையாம்... உணவு நேரத்தில் மட்டும்தான் வெளி யாள் உள்ளே வருவார்களாம்... அந்தப் பெண்களில் பெரும்பாலானவர்களுக்கு உணர்ச்சிகள் எல்லாம் மரத்துப் போய் வெட்கமற்று இருந்தார்கள்...''

அவன் சொல்லச் சொல்ல இந்திராவின் உடல் நடுங் கியது. வாயில் இருந்த இனிப்பைப் போய்த் துப்பிவிட்டு வந்தாள்.

''ஏன் இந்திரா?''

''என்னால் இனிப்பை ரசிக்க முடியவில்லை, அரவிந்த். பெண்களுக்கு இப்படிக்கூட கொடுமை இழைப்பார்களா?''

''அப்படி சதி செய்த கூட்டத்தில் இரண்டு பெண் களும் முக்கியமான கூட்டாளிகள், இந்திரா...''

''எப்படி அரவிந்த் உங்களால் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு பேச முடிகிறது? கேட்டாலே என் உடல் நடுங்குகிறதே!''

''நான் இருப்பது காவல்துறை உத்தியோகத்தில். ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு உணர்ச்சிகள் மரத்துப்

போகும். சின்னச் சின்ன விஷயங்கள் பாதிப்பு ஏற்படுத் தாது... இன்னொரு குடியிருப்பின் உள்ளே நான் என்ன பார்த்தேன் என்று சொன்னால் நீ இன்னும் பதறிப் போவாய்...'' என்றான், அரவிந்த். அவள் கூந்தலை வருடி.

''அப்படி என்ன அரவிந்த் பார்த்தாய்?''

''குழந்தைகள்... ஒன்றரை வயது முதல் ஆறு வயது வரை எட்டுக் குழந்தைகள்... எல்லாம் அநாதை இல்லங் களிலிருந்து தத்து எடுப்பதாகச் சொல்லி எடுத்துவரப் பட்ட குழந்தைகள். தங்களை வைத்து வியாபாரம் பேசப் பட்டிருப்பதோ, இன்னும் சிறிது நாட்களில் எங்கோ கண் காணாத தேசத்தில் மிக மோசமான காமப் பயிற்சிகளில் இந்த வயது முதலே ஈடுபடுத்தப்படுவோம் என்பதோ கூடத் தெரியாமல் அப்பாவிகளாக கொடுக்கப்பட்ட பொம்மைகளை வைத்து அவை கள்ளமில்லாமல் விளை யாடிக் கொண்டிருந்தன. அந்தக் காட்சியைப் பார்த்தபோது என் இதயம்கூட ஆடிப்போய்விட்டது...''

''ஐயோ... சொல்லாதீர்கள்...'' இந்திரா அவன் வாயைத் தன் கையால் பொத்தினாள். அவள் கண்களில் நீர் துளிர்த்து விட்டது.

''திருமணமாகி ஆறு வருடங்களாகியும் ஒரு குழந்தை இல்லையே என்று நான் எப்படி ஏங்கிக் கொண்டிருக் கிறேன்! குழந்தைகளுக்கு இழைக்கப்படும் அநீதி பற்றிக் கேள்விப்பட்டால் என் உடல் பதறுகிறது...'' என்றவள், அரவிந்தின் கையில் இருந்து இனிப்புப் பெட்டியைப் பறித்து தள்ளி வைத்தாள். ''இத்தனை மோசமான சேதிகள் சொல்வதற்கா இனிப்பு வாங்கி வந்தீர்கள்?''

அரவிந்தன் சிரித்தான். ''முட்டாள்... அந்த அயோக் கியக் கூட்டத்தை நாங்கள் வளைத்துப் பிடித்து விட்டோம்...



அதில் முக்கிய பங்கு வகித்ததற்காக போலீஸ் கமிஷனர் என்னைக் கூப்பிட்டு வெகுவாகப் பாராட்டினார் தெரியுமா? அந்த மகிழ்ச்சியை உன்னோடு பகிர்ந்து கொள்வதற் காகத்தானே நான் இனிப்பு வாங்கி வந்தேன்?''

அரவிந்தன் இந்திராவை தன்னோடு நெருக்கி அணைத்துக் கொண்டான்.

அவர்கள் இருந்தது அந்த சிறிய வீட்டின் ஹால் பகுதியில்.

''நான் இன்றைக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறேன், இந்து... குற்றங்கள் செய்தவர்களைப் பிடித்த மகிழ்ச்சி... என் மூத்த அதிகாரியிடமிருந்து கிடைத்த பாராட்டு தந்த மகிழ்ச்சி... நாம் கொண்டாடுவோம், இந்து...''

''ராத்திரி ஒன்பது மணிக்கு வீட்டுக்கு வந்துவிட்டு கொண்டாட்டமாம், கொண்டாட்டம்... மாலையிலேயே வந்திருந்தால் ஏதாவது சினிமாவிற்குப் போயிருக் கலாமில்லையா?'' இந்திரா சிணுங்கினாள்.

''சினிமாவா? இந்தப் பெண்களுக்கு ஏன்தான் சினிமா வின் மீது மோகம் இருக்கிறதோ? சினிமா என்பது எப்படி கொண்டாட்டமாகும், இந்து? நாம் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்ளாமல் இருட்டில் உட் கார்ந்து யாரோ ஆடுவதையும், பாடுவதையும் வேடிக்கை பார்ப்பதா கொண்டாட்டம்?''

''சரி... அப்படியானால் கடற்கரைக்காவது கூட்டிப் போங்கள்...''

''அதுதான் புத்திசாலித்தனம்... வா... இருவரும் கடற்கரைக்குப் போவோம்... நீ கார் ஓட்டு... நான் பக்கத்தில் உட்கார்ந்து உன்னை வேடிக்கை பார்த்துக் கொண்டே வருவேனாம்...''

கடற்கரையில் சந்திக்கப் போகும் நபர் பற்றி முன் கூட்டியே தெரிந்திருந்தால், அரவிந்தன் அவளை அவள் ஆசைப்பட்டபடி சினிமாவிற்கே அழைத்துப் போயிருப் பான்.

## 3



பெசன்ட் நகர் கடற்கரை.

தாயிடம் பால் குடிக்கும் பன்றிக் குட்டிகள் போல நடை பாதையை முத்தமிட்டு வரிசையாக கார்கள்.

இளைஞிகளை முதுகில் ஒட்ட வைத்துக்கொண்டு மோட்டார் சைக்கிள்களில் சீறும் இளைஞர்கள். வெண் குழல் விளக்குகளைப் போட்டுக் கொண்டு முச்சக்கர சைக்கிள்களில் ஐஸ்கிரீம் விற்க முயற்சி செய்யும் வியா பாரிகள். பயன்படுத்தியபின் தூக்கிப்போடும் கோப்பை களில் கோலா வகைகளை சுமந்து நுனி நாக்கில் ஆங் கிலம் துப்பும் வாலிபர்கள், யாரைப்பற்றியும் கவலைப் படாது கடற்கரையை அசுத்தப்படுத்திக் கொண்டு, படுத்திருக்கும், சண்டையிடும் மாடுகள்.

'இரவு. ஒன்பது மணிக்கு மேல் கூட கடற்கரையில் இவ்வளவு கூட்டமா' என்று இந்திரா ஆச்சரியப்பட்டாள்.

அரவிந்தன் ஜீன்ஸ் பேண்ட்டும், தளர்வான ஒரு பருத்திச் சட்டையும் அணிந்திருந்தான்.



காரை இடம் தேடி நிறுத்தினாள், இந்திரா.

மது வகைகளை பொது இடத்திற்குக் கொண்டு வரு பவர்களையும், பாதசாரிகளைப் பற்றிக் கவலையின்றி அசுர வேகத்தில் வாகனம் ஓட்டுபவர்களையும் கட்டுப் படுத்த அடையார் பிரிவிலிருந்து சில காவலர்கள் நடமாடிக் கொண்டிருந்தனர். அரவிந்தனைப் பார்த்ததும் அவர்கள் சல்யூட் வைத்தனர்.

அரவிந்தன் பதில் வணக்கம் சொல்லி, ''என் மனைவி யுடன் வந்திருக்கிறேன். என்னை இன்ஸ்பெக்டராகப் பார்க்காதீர்கள். அவள் வருத்தப்படுவாள், சிணுங்குவாள்'' என்று சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு நகர்ந்தான்.

பாவாடை கிழிந்த ஒரு சிறுமி அகலமான தட்டில் மலர்ந்த மல்லிகைச் சரத்துடன் இந்திராவைத் துரத்தினாள்.

இரக்கப்பட்டு இந்திரா இரண்டு முழம் பூ வாங்கினாள்.

சிதிலமடைந்த சவுக்குமரத்தைத் தாண்டி மணல் வெளியில் அவர்கள் அமர்ந்தனர்.

வெகு உயரத்துக்கு கோபுரத்திலிருந்து அடர்ந்த வெளிச் சத்தை அசுர விளக்குகள் பரப்பிக் கொண்டிருந்தன.

கடற்காற்று உடலுக்கும், மனதிற்கும் இதயமாய் வீசி, வருடிச் சென்றது.

''எவ்வளவு நாட்களாயிற்று நாம் சேர்ந்து கடற்கரைக்கு வந்து!'' என்றான், அரவிந்தன்.

''நாட்களல்ல, மாதங்கள்...'' என்று திருத்தினாள், இந்திரா. ''போலீஸ் வேலையைக் கல்யாணம் செய்து கொண்ட பிறகுதானே என்னை இரண்டாந்தாரமாக ஏற் றுக்கொண்டீர்கள். இப்போதும் உங்கள் முதல் மனைவி உங்கள் இன்ஸ்பெக்டர் தொழில்தானே?''

அரவிந்தன் சிரித்தான். "நான் இன்ஸ்பெக்டர் உடுப்பை வீட்டிலேயே விட்டுவிட்டு வந்தாலும், நீ விட மாட்டேன் என்கிறாயே..."

"எனக்கு ஒரு விஷயம் ஆச்சரியமாக இருக்கிறது" என்றாள், இந்திரா. "பெண்களை ஏமாற்றி அழைத்துப் போகும் ஆண்களைப் பற்றியெல்லாம் நீங்கள் சொன்னீர்கள். ஆனாலும் இந்த இரவு நேரத்திலும் இங்கே பல பெண்கள் தனியாகக் கூட வருகிறார்களே..."

"யாரைச் சொல்கிறாய்?"

"அங்கே பாருங்கள்... நான்கு பெண்கள் ஐஸ்கிரீம் சுவைத்துக் கொண்டு, ஆர்ப்பாட்டமாக சிரித்துக் கொண்டு ஆண் துணையின்றி வந்திருக்கிறார்கள்..."

"எல்லா பெண்களும் முட்டாள்களல்ல, இந்து."

"அங்கே பாருங்கள். பெரியவர்கள் துணை இல்லாமல், ஆண்களிடம் கெக்கே பிக்கே என்று இளித்துக் கொண்டு இரண்டு பெண்கள். இந்நேரத்தில் எப்படி இவர்கள் தைரியமாக ஆண்களுடன் வெளியே வருகிறார்கள்?"

"எல்லா ஆண்களும் மோசமானவர்களில்லை, இந்து."

"ஏன் மோசமில்லை? அதோ உட்கார்ந்திருக்கிறானே ஒருத்தன்... சிகப்புச் சட்டை போட்டுக் கொண்டு... அவன் சற்றும் கண்ணியமின்றி நம்மையே முறைத்துக் கொண்டிருக்கிறான்."

"அழகான பெண்ணைப் பார்த்தால் எனக்குக்கூட கண்கள் மாட்டிக்கொள்ளும் இந்து..."

"சிரிக்காதீர்கள்... அதற்காகக் கண் கொட்டாமல் இங்கேயேவா பார்ப்பார்கள்?"



"அவ்வளவுதானே, அவனை விரட்டி விட்டுவிட்டு வருகிறேன்... இரு..."

"வேண்டாம், வேண்டாம்... என்னை தனியாக விட்டு விட்டுப் போகாதீர்கள்..."

"பயப்படாதே, இந்து... உன் கண் பார்வையை விட்டு நான் போய்விட மாட்டேன்..."

அரவிந்தன் ஒரு சிகரெட்டை எடுத்து தன் உதடுகளில் பொருத்திக் கொண்டான்.

மணலில் கையூன்றி எழுந்தான்.

இந்திரா குறிப்பிட்ட ஆளை நோக்கி நடந்தான்.

இந்திரா படபடக்கும் நெஞ்சுடன் பார்த்தாள்.

அரவிந்தன் கோபமுற்று அந்த ஆசாமியுடன் சண்டைக்குப் போகப் போகிறானா? அவர்களுக்குள் சண்டை வர அவள் காரணமாகிவிட்டாளா?

அரவிந்தன் அந்த சிகப்புச் சட்டைக்காரனை நெருங்க, நெருங்க, அந்த ஆள் உட்கார்ந்திருந்த நிலையிலிருந்து சற்று நிமிர்ந்தான்.

அரவிந்தன் அவன் அருகில் போய்க் குனிந்து, "சிகரெட்டிற்கு நெருப்பு இருக்கிறதா?" என்று கேட்டான். சிகரெட்டிற்கு நெருப்பு வாங்கிக் கொண்டு அவனிடம் வெளிப்படையாக, 'பிரதர், எங்களை முறைத்துப் பார்க்காதீர்கள். என் மனைவி ரொம்பக் கூச்சப்படுகிறாள்' என்று சிரித்தபடியே சொல்லிவிடலாம் என்று எண்ணமிட்டிருந்தான்.

ஆனால் அந்த ஆள் தன் பாக்கெட்டிலிருந்து தீப்பெட்டி எடுத்து நீட்டிவிட்டு, "நீங்கள்... நீ... அரவிந்த்தானே?" என்றான்.

அரவிந்த் ஆச்சரியமானான்.

அந்தப் பகுதியில் விழுந்த வெளிச்சத்தில் அந்த ஆளின் முகம் புலப்பட்டவரையில் அது அரவிந்திற்கு பழக்கமில்லாத முகமாகத் தோன்றியது. தன்னைத் தெரிந்து வைத்திருப்பது யார்?

அரவிந்தன் சிகரெட்டைப் பற்ற வைத்தான்.

''ஆமாம்... நான் அரவிந்த்தான்...'' என்றான். ''நீங்கள்?''

''டேய், என்னைத் தெரியவில்லையா, அரவிந்த்? அவ்வளவு சுலபமாக மறந்து விட்டாயா?'' அந்த ஆளின் குரல் வெகு உற்சாகமாக ஒலித்தது.

அரவிந்த் தன் நினைவுகளைக் கசக்கினான். இவனை எங்கோ பார்த்திருக்கிறோம். இந்த சாயலில் யாருடனோ பழகியிருக்கிறோம் என்று மட்டும் மனது குரல் கொடுத்ததே தவிர, எங்கே, எப்போது என்று விளக்கம் கிடைக்கவேயில்லை.

''இந்த வெளிச்சத்தில் எனக்கு அடையாளம் புரியவில்லை...'' என்றான், தயக்கத்துடன்.

''இதே வெளிச்சத்தில்தானே உன்னை நான் அடையாளம் கண்டு கொண்டேன்... என்னை நீ எப்போதும் ஸ்டோன்மேல் என்று அழைப்பாய் என்பதைச் சொன்னால் நினைவுக்கு வருகிறதா?''

ஸ்டோன் - கல். மேல் - ஆண், கல் ஆண்!

''கல்யாண்?'' அரவிந்தன் உற்சாக மிகுதியில் சத்தமாகவே சொன்னான். ''கல்யாண், நீயா?''

''நானேதான். ஆனாலும் நீ ரொம்ப மோசம்... பன்னிரண்டு வருடங்களில் ஆளையே மறந்து விட்டாயே...''



''கல்யாண்... கல்யாண்...'' அரவிந்தன் சட்டென்று முகத்தைத் திருப்பினான். மனைவியைப் பார்க்கும் சாக்கில் முகத்தைத் திருப்பினான். அப்படி செய்யாது போயிருந்தால் அவன் முகத்தில் ஏற்பட்ட மாற்றத்தை கல்யாண் கவனித்திருப்பான்!

''அது உன்...''

''மனைவி...'' என்றான், அரவிந்தன், முகத்தை பழைய படி இயல்பாக்கிக் கொண்டு.

''நீயும், உன் மனைவியும் வந்து உட்கார்ந்ததிலிருந்தே - சொல்லப்போனால் மணலில் நடந்துவர ஆரம்பத்திலிருந்தே உங்களை நான் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன். நீ அரவிந்த்தான் என்று எனக்கு நிச்சயமாய்த் தெரிந்துவிட்டது. ஆனாலும் எப்படி உங்களை அணுகுவது, எப்படிக் கேட்பது என்று யோசித்துக் கொண்டிருந்தேன்... நல்லவேளை நீயே என்னைத் தேடி வந்து விட்டாய்... சிகரெட் வாழ்க!''

''எப்படியிருக்கிறாய், கல்யாண்?''

''இங்கேயே பேசி என்னைத் திருப்பி அனுப்பிவிடப் போகிறாயா? உன் மனைவியை அறிமுகம் செய்து வைக்க மாட்டாயா?''

அரவிந்தன் புன்னகைத்தான். 'உன்னை இப்படியே அனுப்ப முடியாது, நண்பா... அப்புறம் நான் உண்மையான போலீஸ்காரன் இல்லை' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

''வா... வா... அறிமுகம் செய்கிறேன்'' என்று சொல்லி கையை நீட்டினான்.

அந்தக் கையைப் பற்றி கல்யாண் எழுந்தான்.

அரவிந்தனின் இதயம் எரிமலைக் குழம்பு போல் கொதித்துக் கொண்டிருந்தது.

ஏன், ஏன் இந்த சந்திப்பு நிகழ்ந்தது? இப்போது நான் என்ன செய்யப் போகிறேன்?

இருவருமாக இந்திரா அமர்ந்திருந்த இடம் நோக்கி நடந்தார்கள்.

தன்பொருட்டு அரவிந்தன் அந்த ஆளுடன் சண்டை பிடிக்கப் போகிறான் என்று பார்த்துக் கொண்டிருந்தால், அவனை எழுப்பி, அவன் தோளில் கை போட்டு நட்பாக அழைத்து வருகிறானே கணவன் என்று புரியாமல் இந்திரா பார்த்தாள்.

அவர்கள் நெருங்கி வந்து அவளுக்கு எதிரில் அமர்ந்தார்கள்.

''இந்து, இவன் யார் தெரியுமா? கல்யாண்... என் நெருக்கமான கல்லூரி நண்பன்... பன்னிரெண்டு வருடங்களுக்குப் பிறகு சந்திக்கிறோம்!''

''வணக்கம்'' என்று புன்னகைத்தாள், இந்திரா. ''உங்களைப் பற்றி அரவிந்த் நிறைய சொல்லியிருக்கிறார்...''

''எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறாயா, அரவிந்த்?'' என்று குறும்பாகக் கேட்டு ஆரவாரமாய் சிரித்தான், கல்யாண்.

அரவிந்தனும் அந்த சிரிப்பில் கலந்து கொண்டான்.

''கல்யாண்... ஆனால் பன்னிரண்டு வருடங்களில் நீ நிறைய மாறி விட்டாய்... அதனால்தான் சட்டென்று அடையாளம் புரியவில்லை... நீயாக அறிமுகம் செய்து



கொள்ளவில்லை என்றால் உன்னை எனக்கு அடையாளமே புரிந்திருக்காது. கல்லூரி நாட்களில் கருகரு வென்றிருந்த அடர்ந்த முடியெல்லாம் எங்கே? இப்படி பௌர்ணமி நிலா போல தலை பளபளவென்று வழுக்கையாகிவிட்டதே!''

''இயற்கைக்கு என் தலைமுடி பிடிக்கவில்லை...''

''முகத்தில் கூட மாற்றம் இருக்கிறது. கண்களுக்குக் கீழ் கொஞ்சம் கறுப்பாக இருக்கும். இப்போது காணோம்... இடது கன்னத்தில் ஒரு மச்சம் மிளகு அளவிற்கு இருந்தது. அதைக் காணவில்லை...''

''ஒரு விபத்தில் என் முகம் கொஞ்சம் சிதைந்து போய் விட்டது. அதனால் பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொண்டேன். அதனால் என் முகத் தோற்றம் மாறியிருக்கும்...'' என்றான், கல்யாண், புன்னகைத்து, ''அப்புறம் உன்னைப் பற்றிச் சொல்... என்ன செய்கிறாய்?''

''நானா? ஒரு தனியார் கம்பெனியில் முதலாளியின் செயலாளராக இருக்கிறேன்...'' என்றான், அரவிந்தன்.

இந்திரா திடுக்கிட்டாள். நெருக்கமான நண்பன் என்று சொல்லிவிட்டு நண்பனிடம் தன் உண்மையான தொழிலை சொல்லாமல் பொய் சொல்கிறானே கணவன் - ஏன்? போலீஸ் இன்ஸ்பெக்டர் என்று அவன் தன்னை அறிமுகம் செய்து கொள்ளாததற்கு நிச்சயம் காரணம் ஏதாவது இருக்கும் என்றும் அவளுக்குத் தோன்றியது. மணலை கைவிரல்களால் புரட்டுவது போல் முகத்தைக் குனிந்து கொண்டாள்.

''எப்பொழுது கல்யாணம் ஆயிற்று?''

''ஆறு வருடங்களுக்கு முன்னால்...'' என்றான், அரவிந்தன்.

''குழந்தைகள்?''

''இதுவரை இல்லை... உன்னைப் பற்றிச் சொல், கல்யாண்.''

கல்யாண் மணலை எடுத்து விரல் இடுக்குகள் வழியே வழிய விட்டான்.

''என்னைப் பற்றி என்ன சொல்ல?'' - வானை வெறித்தான். கடலை வெறித்தான். அவன் முகத்தில் சோகத்தின் நிழல் படர்ந்தது. ''கல்லூரிப் படிப்பு முடிந்ததும் வேலைகளுக்கு விண்ணப்பித்தேன். பாட்னாவில் ஒரு இங்க் தொழிற்சாலையில் வேலை கிடைத்து அங்கே போனேன். அப்புறம் வெவ்வேறு தொழில்கள்... வெவ்வேறு ஊர்கள்...''

''இப்போது?'' என்றான், அரவிந்தன்.

''இப்போது இந்தியாவை விட்டு வெளியே போகத் திட்டமிட்டிருக்கிறேன்.''

''ஏன்?''

''துபாயில் எனக்கொரு வேலை கிடைத்திருக்கிறது. அங்கே போகிறேன்.''

''மனைவி?''

கல்யாண் உதடுகளைக் கடித்துக் கொண்டான்.

''காதலித்து கல்யாணம் செய்து கொண்டேன். இரண்டரை வயதில் ஒரு குழந்தை கூட இருந்தது...'' - அவன் கண்களில் கண்ணீர் சேர்ந்தது.

''இருந்தது என்றால் இப்போது இல்லையா?''

''என் ஆசை மனைவி ஒரு ரயில் விபத்தில் சிக்கி இறந்து போனாள்.''



''ஐயையோ...'' என்றாள், இந்திரா.

''அந்த விபத்தில் என் குழந்தை தப்பியது. ஆனால் விதியின் விளையாட்டால், அதே சமயம் எனக்கு இன்னொரு விபத்து நேர்ந்து நான் மூச்சு பேச்சின்றி வேறொரு இடத்தில் படுத்துக் கிடந்தேன்... ஒரு மருத்துவமனையில் சுய நினைவின்றி ஆறு வாரங்கள் கிடந்தேன்... அந்த சமயத்தில் குழந்தைக்கு ஆதரவு இல்லாததால் அதை அநாதை என்று நினைத்து யாரோ அநாதை இல்லத்தில் சேர்த்து விட்டார்கள்...''

''என்ன கொடுமை!'' இந்திரா நெஞ்சை அழுத்திக் கொண்டாள்.

''அந்தக் குழந்தையை அப்புறம் போய் மீட்டாயா, இல்லையா?'' என்றான், அரவிந்தன்.

''அங்கேயும் விதி விளையாடிவிட்டது, அரவிந்த்... உன்னைப் பார்த்ததும் எனக்கு நம்பிக்கை வந்துவிட்டது. என் குழந்தையை மீட்க நீயும், சகோதரியும் உதவி செய்வீர்கள் என்ற நம்பிக்கை வந்துவிட்டது...''

''நீ சொல்வது புரியவில்லை...''

''என் குழந்தையைத் தேடித்தான் நான் சென்னை வந்திருக்கிறேன், அரவிந்த்... அதை நீதான் என்னிடம் மீட்டுத் தரப்போகிறாய்...''

இந்தப் பேச்சு இந்திராவிற்குக் குழப்பமாய் இருந்தது. அரவிந்தன் தன்னை போலீஸ் இன்ஸ்பெக்டர் என்று அறிமுகப்படுத்திக் கொள்ளவில்லை. அப்படியிருக்க குழந்தையை மீட்டுத்தர வேண்டும் என்று அவனிடமே கோரிக்கை வைக்கிறான் என்றால், கல்யாணுக்கு அரவிந்தின் தொழில் பற்றி ஏற்கெனவே தெரிந்துவிட்டதா?

"எங்கே தங்கியிருக்கிறாய், கல்யாண்?"

"ஒரு லாட்ஜ் விடுதியில்..."

"சாப்பிட்டாயிற்றா?"

"இனிமேல்தான்..."

"சரி வா... நாம் வீட்டுக்குப் போவோம்... இந்திரா அட்ட காசமாக சமைப்பாள்... அங்கே நிதானமாகப் பேசுவோம்."

"சகோதரிக்கு என்னால் எதற்கு தொந்தரவு?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை... அரவிந்தின் பழைய நண்பர் நீங்கள்... எங்கள் வீட்டிற்கு வந்தால் சந்தோஷப் படுவேன்..."

"எனக்கு இன்றைக்கு நல்ல உணவு கிடைக்க வேண் டும் என்ற அதிர்ஷ்டம் இருக்கிறது. சென்னை ஹோட் டல்களின் சுண்ணாம்பு கலந்த உணவைத் தாங்காமல் வயிறு தொந்தரவு செய்து கொண்டிருந்தது..."

"வா போகலாம்..." என்று எழுந்தான், அரவிந்தன்.

## 4



இந்திராதான் காரை செலுத்தினாள்.

"வசதியான வேலை போலிருக்கிறது... காரெல்லாம் இருக்கிறது" என்றான், கல்யாண்.

"நீ வேறு! இந்தக் கார் இந்திராவின் மாமா அவளுக்கு மலிவாகக் கொடுத்தது. அவர் வெளிநாடு போகும்போது



காரை இவளுக்குக் கொடுத்தார். காருக்கான பணத்தைக் கூட பத்து தவணைகளில்தான் தருவதாக ஒப்புக் கொண்டிருக்கிறேன்" என்றான், அரவிந்தன்.

"தவணை புத்தி உன்னை விட்டுப் போகவில்லையா?" என்றான், கல்யாண். இருவரும் சிரித்தார்கள்.

இருவரும் ஏதோ ஒரு பழைய நிகழ்ச்சியைக் குறித்துப் பேசுகிறார்கள் என்று இந்திராவிற்குப் புரிந்தது.

நண்பர்கள் தங்களுக்குள் ஏதேதோ குசுகுசுவென்று பேசுவதும், ஆர்ப்பரித்துச் சிரிப்பதும் இந்திராவிற்குப் பிடித்திருந்தது.

அரவிந்தன் இன்ஸ்பெக்டர் தொழிலில் நாள் முழு வதும் போராடிக் களைத்துவிட்டு வீடு திரும்பும் வேளை களில் இதைப் போன்ற உற்சாகத்திற்கு வாய்ப்பே இருந்ததில்லை... அவன் மனம்விட்டு இப்படி உரக்கச் சிரித்துக் கேட்டு எத்தனை காலம் ஆயிற்று! அவனுடைய ஆனந்தம் அவளுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. ஆனால் ஒரு விஷயம் மட்டும் அவளை உறுத்திக் கொண்டேயிருந்தது.

அரவிந்தன் தன் நண்பனிடம் தன்னை போலீஸ் இன்ஸ்பெக்டர் என்று ஏன் சொல்லிக்கொள்ளத் தயங் கினான்?

"சகோதரி... காரை அந்தக் கடை வாசலில் கொஞ்சம் நிறுத்துங்கள்... சிகரெட் வாங்க வேண்டும்..." என்றான், கல்யாண்.

காரை குறிப்பிட்ட இடத்தில் நிறுத்தினான், இந்திரா.

"நீ வாங்கி வா கல்யாண்..." என்றான், அரவிந்தன்.

அவன் காரிலிருந்து இறங்கிப் போனதும், மனைவியின் தோளைத் தொட்டான். குரலைக் குறைத்து கிசுகிசுத்தான்.

"இதோ பார், வீட்டிற்குப் போனதும் ஏதாவது காரணம் சொல்லி ஒரு ஐந்து நிமிடம் அவனை எங்காவது அழைத்துப் போகிறேன்... நாங்கள் திரும்பி வருவதற்குள் என் போலீஸ் உடுப்பை எல்லாம் அலமாரிக்குள் ஒளித்து விடு... நான் காவல்துறையைச் சேர்ந்தவன் என்பதற்கு எந்த ஒரு அடையாளமும் அங்கே இருக்கக்கூடாது..."

"ஏன் அரவிந்த்?"

"கல்யாணுக்கு நான் இன்ஸ்பெக்டர் என்பது தெரியக் கூடாது..."

"அதுதான் ஏன் என்று கேட்கிறேன்..."

"ஏன் என்றால், கல்யாண் கொலைகள் செய்துவிட்டு போலீஸிடமிருந்து தப்பித்து தலைமறைவாய் இருப்பவன்..."

இந்திரா திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

"இதோ பார், அவன் திரும்பி வருகிறான்... நீ எதுவும் தெரிந்ததாகக் காட்டிக்கொள்ளாத வரை எனக்கு ஆபத்தில்லை... இயல்பாகவே இரு... யாருடனும் அவசரப்பட்டு தொடர்பு கொள்ளாதே... சரியான சந்தர்ப்பத்தில் எல்லா விபரங்களையும் நானே சொல்கிறேன்... வா கல்யாண்... உன் சிகரெட் கிடைத்ததா?"

"கிடைத்தது" என்று கல்யாண் காருக்குள் ஏறி அமர்ந்தான்.

இந்திராவின் உடல் மெலிதாக நடுங்கியது.



கல்யாண் கொலைகள் செய்தவனா?

தலைமறைவாய் இருப்பவனா?

அவனை வீட்டிற்குள் அழைத்துப் போவது ஆபத்தில்லையா?

அரவிந்தன் எல்லாவற்றையும் யோசித்திருப்பான்.

இந்திரா தன்னை நிதானப்படுத்திக் கொண்டாள். காரைக் கிளப்பினாள்.

வீட்டை அடைந்ததும், "இந்து... நானும் கல்யாணும் போய் கொஞ்சம் பழங்கள் வாங்கி வந்துவிடுகிறோம்... நீ சமைக்க ஆரம்பி..." என்றான், அரவிந்தன்.

இந்திரா தலையசைத்துவிட்டு அவசரமாக வீட்டிற்குள் பூட்டு திறந்து நுழைந்தாள்.

அவர்கள் திரும்பி வருவதற்குள், அரவிந்தனின் போலீஸ் சீருடைகளை எல்லாம் அவள் மறைத்தாக வேண்டும். பரபரப்பாக இயங்கினாள்.

கொலைக் குற்றம் செய்துவிட்டு தலைமறைவாய் இருக்கும் ஒரு குற்றவாளி தன் நண்பன் என்று ஏன் இதுவரை அரவிந்தன் அவளிடம் சொல்லவில்லை? அவளுக்குப் புரியவில்லை.

ஐந்து நிமிடம் என்று இந்திராவிடம் சொல்லியிருந்தாலும், கிட்டத்தட்ட பதினைந்து நிமிடங்களுக்குமேல் கடைத்தெருவில் செலவு செய்துவிட்டுத்தான் அரவிந்தன் கல்யாணுடன் வீடு திரும்பினான்.

வீட்டிற்குள் நுழையும்போதே அவன் பார்வை அங்கும் இங்குமாக அலை பாய்ந்தது.

செருப்புகள் வைக்கும் இடத்தில் அவனுடைய போலீஸ் பூட்ஸ்கள் இல்லை. பால்கனிக் கொடியில்

காயப்போட்டிருந்த காக்கிச்சட்டை அங்கே இல்லை. ஆணியில் மாட்டி வைக்கும் போலீஸ் பெல்ட் அத னிடத்தில் இல்லை. சுவர் ஹாங்கரில் மாட்டி வைக்கும் தொப்பியும் அவ்விடத்தில் இல்லை.

இந்திரா சுறுசுறுப்பாகத்தான் செயல்பட்டிருக்கிறாள்!

அரவிந்தனுக்கு அவன் மீதே கோபம் வந்தது.

பாவம், இந்திரா. அவளிடம் அரைகுறையாக விஷ யத்தைச் சொன்னதில் மிரண்டு போயிருப்பாள்.

கொலைகாரன் தலைமறைவானவன் என்று மொட்டை யாக மட்டும்தான் அவளிடம் அவன் சொல்ல முடிந்தது. கல்யாணை கடற்கரையில் சந்திக்க வேண்டி வரும் என்று தெரிந்திருந்தால் அவனைப் பற்றி தனக்குத் தெரிந்ததை யெல்லாம் அவளுக்கு முன்கூட்டி சொல்லியிருக்கலாம்.

கல்யாண்!

எவ்வளவு வருடங்கள் கழித்து இந்த சந்திப்பு நிகழ் கிறது. ஆனால் நண்பனுக்கே துரோகியாய் மாறச் சொல்லி காக்கி உடுப்பு கட்டளை இடுகிறதே!

கல்லூரி தேர்தலில் அரவிந்தன் நின்றபோது, இரவு முழுவதும் விழித்து அவனுக்கு சுவரொட்டி எழுதித் தந்தானே, பேருந்துப் படிக்கட்டிலிருந்து அரவிந்தன் தவறி விழ இருந்தபோது தன் வாட்ச் அறுந்து தெருவோடு போனதையும் பொருட்படுத்தாது அவனை அணைத்துத் தாங்கிக் காப்பாற்றினானே, ராதிகா என்ற மாணவிக்கு காதல் கடிதம் எழுதி அது கல்லூரி முதல்வர் வரை போனபோது, நண்பனுக்கு பக்கபலமாக நின்று கடைசி வரை ஆதரவு தந்தானே - இன்னும் எத்தனை எத் தனையோ செய்த அந்த நண்பன் கல்யாணுக்கு இவன் காட்டும் நன்றி இதுதானா?



கல்யாண், நீ ஏன் என்னை அழைத்தாய்? உன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாய்? இல்லாவிட்டால் இந்த போலீஸ்காரனிடமிருந்தும் நீ தப்பித்திருக்கலாமே!

கல்யாண் ஹால் சோபாவில் அமர்ந்து தொலைக் காட்சியைப் பார்க்கத் தொடங்கினான்.

அரவிந்தன் வெகு இயல்பாக அவனுடைய பிரத்யேக மேஜை இழுப்பறையைத் திறந்து அதனுள் வைத்திருந்த கோப்பை வெளியே எடுக்காமல் புரட்டினான்.

ஆறேழு வாரங்களுக்கு முன் முதல் சுற்றறிக்கை வந்தது. வழக்கமாக மாதத்திற்கு ஒன்றிரண்டு தடவை வெளி மாநிலங்களிலிருந்து வரும் சுற்றறிக்கை.

பஞ்சாப், ஹரியானா காவல்துறையிலிருந்து வந்த அந்த சுற்றறிக்கையில் ஒரு இன்ஸ்பெக்டரை கொலை செய்து கைதான கல்யாண் என்ற குற்றவாளி போலீஸ் காவலில் இருந்து தப்பித்து விட்டதாக தகவல் வந் திருந்தது. போலீசின் மோசமான புகைப்படப் பிரதிகளில் சிறைப்பட்டிருந்த கல்யாணைப் பார்த்து அரவிந்தன் அன்று அதிர்ந்தான்.

இந்தக் கல்யாண் அவனுடைய கல்லூரி நண்பனல் லவா?

கன்னத்தில் ஒரு வெட்டுத் தழும்பு இருக்கும் என்ற குறிப்பு. இன்ஸ்பெக்டரைத் தவிர டேவிட் என்பவனையும் அவன் கொலை செய்துவிட்டு தலைமறைவாகிவிட்டான் என்று அந்தக் குறிப்பு சொன்னது. அவன் ஒருவேளை தமிழ்நாட்டிற்குள் பிரவேசித்தால் அவனை மடக்கி பஞ்சாப் போலீஸிடம் ஒப்படைக்குமாறு அந்த சுற்ற றிக்கை கோரியிருந்தது.

ஆனால் புகைப்படத்தில் பார்த்த கல்யாணிற்கும், நேரில் பார்க்கும் இந்த கல்யாணிற்கும் ஏகப்பட்ட வித்தியாசங்கள் இருந்தன.

அவன் சொன்னது போல கல்யாணாக வந்து அறிமுகம் செய்து கொள்ளாமல் போயிருந்தால், அவனைக் கண்டு பிடித்திருக்கவே முடியாது.

''அரவிந்த்... என்ன ரொம்ப யோசிக்கிறாய்?'' என்று கல்யாணின் குரல் வந்ததும், அரவிந்தன் திடுக்கிட்டு இழுப்பறையை மூடினான்.

முகத்தை இயல்பாக வைத்துக்கொண்டு புன்னகைத்தான்.

''நாம் கல்லூரியில் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் இருக்கிறதா என்று பார்த்தேன்'' பொய் சொன்னான்.

கல்யாணிற்கு எதிரில் வந்து அமர்ந்தான். வெளியில் உதட்டளவில் கல்லூரியைப் பற்றி, புரொபசரைப் பற்றி என்று பேச்சு போனாலும், அரவிந்தன் அடி மனதில் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று கடுமையாக யோசித்துக் கொண்டேயிருந்தான்.



## 5

கடற்கரையில் கல்யாணை சந்தித்தபோதே அவனை மடக்கியிருக்கலாம். அங்கிருந்த போலீஸ்காரர்களை



அழைத்து ஒப்படைத்திருக்கலாம்... ஆனால் அரவிந்தன் செய்யவில்லை.

மூன்று காரணங்கள்.

அவன் சந்தேகப்பட்டது போல் இதே நண்பன்தான் அந்தக் குற்றவாளியா என்பதை கோப்பில் இருக்கும் புகைப்படம் பார்த்து உறுதி செய்துகொள்ள வேண்டும்.

கடற்கரை போன்ற பொது இடத்தில் பரபரப்பு ஏற்படுத்தினால் அங்கு போலீஸிற்கும், கல்யாணிற்கும் இடையில் சண்டை வந்தால் பொதுமக்கள் பீதிக்குள்ளாகி கலாட்டா நடக்கலாம்.

கல்யாணிடம் ஏதாவது ஆயுதம் இருக்கிறதா என்று தெரியாமல் அவனை அணுகினால், அவசியம் வந்தால் கல்யாண் ஆயுதத்தை எடுத்தால் அவ்வளவு பறந்த திறந்த வெளியில் கல்யாண் தப்பிப்பது சுலபம்.

அதனால்தான் அவனை வீட்டிற்கு அழைத்து வந்து விட்டான்.

இப்போது அவன் தன் மேலதிகாரிக்கு எப்படியாவது கல்யாண் பற்றி தகவல் கொடுத்தாக வேண்டும். அதற்கு முன், கல்யாணை இயல்பாக்க வேண்டும்.

"கல்யாண்... வேறு உடை தரட்டுமா? மாற்றிக் கொண்டு சாப்பிட்டு விட்டு இங்கேயே நீ இரவு தங்கி விடலாம். நாம் பேசி எத்தனை நாட்களாயிற்று! காலையில் உன்னை லாட்ஜில் கொண்டு விடுகிறேன்..."

கல்யாண் தன்னிடமிருந்த ரிமோட் மூலம் தொலைக் காட்சியை அணைத்தான். எழுந்தான்.

''மாற்றுடை எல்லாம் வேண்டாம் அரவிந்த்'' என்று புன்னகைத்தான். ''சிறியதாக இருந்தாலும், வீட்டை

எவ்வளவு துப்புரவாக வைத்திருக்கிறாள் உன் மனைவி... அவளைப் பாராட்ட வேண்டும்...'' என்றான். ''நான் கிச்சனுக்குப் போய் அந்த சமையல் வேலையை சற்று நேரம் வேடிக்கை பார்க்கலாமா?''

''தாராளமாக'' என்றான், அரவிந்தன். கல்யாணை சமை யலறைக்குள் அனுப்பிவிட்டு, அவசரமாக தன் மேலதி காரியைத் தொடர்பு கொள்ளத் தீர்மானித்தான்.

கல்யாண் சமையலறைக்குள் நுழைந்ததும், அரவிந்தன் தன் கார்டுலஸ் தொலைபேசியை எடுத்துக் கொண்டு உள் அறைக்கு நகர்ந்தான். எண்களை டயல் செய்தான்.

அதற்குள் ''அரவிந்த்!'' என்று இந்திராவின் குரல் அலறியது.

அரவிந்தன் பதறி தொலைபேசியை அணைத்து விட்டு அறையை விட்டு வெளியே ஓடிவந்தான்.

சமையலறையிலிருந்து இந்திரா வெளிப்பட்டிருந்தாள். அவளுடைய அழகான திருத்தமான முகம் மிக வியர்த் திருந்தது.

அவளை மிக நெருக்கமாக அணைத்தபடி அவள் நெற்றி யில் சிறு துப்பாக்கி பதித்திருந்தான், கல்யாண். அவன் முகத்தில் கோணலாக ஒரு புன்னகை.

''என் நண்பனே... உன் உயர் அதிகாரிகளுக்கு போன் செய்து கூப்பிடப் போகிறாயா? என்னைக் கைது செய்து அழைத்துப் போவதாய் இருந்தால், உன் ஆசை மனை வியைப் பிணமாகப் பார்க்க வேண்டும் என்பதை மறந்து விடாதே!''

அரவிந்தன் பதறினான்.



அவன் வீரத்தைக் காட்ட இது சரியான சந்தர்ப்பம் அல்ல. விவேகமாக நடந்து கொள்ளாவிட்டால், அவ னுடைய அன்பு மனைவியின் உயிருக்கே ஆபத்து.

கைகளை உயரத் தூக்கினான். ''கல்யாண்... நான் உன்னைக் காட்டிக் கொடுக்க மாட்டேன்... என்னை நம்பு... இந்துவை எதுவும் செய்து விடாதே...''

கல்யாண் சிரித்தான். ''உன்னை நல்ல நண்பனாக நினைத்துத்தான் உன்னுடன் வந்தேன். ஆனால், நீ ஒரு அற்பமான போலீஸ்காரனாகத்தான் நடந்துகொள்ள நினைத்தாய். நீ புத்திசாலித்தனமாக எதுவும் முயற்சிக்காத வரை உனக்கு ஆபத்தில்லை. உன் மனைவிக்கும் ஆபத்தில்லை.... நான் சொல்வதை ஒவ்வொன்றாக செய்... அந்தத் தொலைபேசித் தொடர்பை முதலில் அறுத் தெறி... இங்கிருந்து யாருடனும் போன் பேசக்கூடாது... வெளியேயிருந்து யார் முயற்சி செய்தாலும் பேச முடியாது என்ற நிலைமை வேண்டும்.''

அரவிந்தன் வேறு வழியின்றி வீட்டுத் தொலைபேசி இணைப்பை அறுத்தான்.

''உன்னிடம் உள்ள செல்லுலார் போனை எடுத்து மேஜை மீது வை...''

''எனக்கு செல் போன் கிடையாது.''

''பொய் சொன்னால், உன் மனைவி மூளை சிதறி விடும்...''

''வைக்கிறேன்...''

அரவிந்தன் தன் செல் போனை மேஜை மீது வைத் தான்.

"வீட்டை உட்புறமாகப் பூட்டி சாவியை என்னிடத்தில் தா."

அரவிந்தன் கீழ்ப்பணிந்தான்.

"அந்த நாற்காலியில் உட்கார்... உன் கைகளையும், கால்களையும் நாற்காலியுடன் சேர்த்து துப்பாக்கி முனையில் உன் மனைவி பிணைக்கப் போகிறாள்... உட்கார்..."

அரவிந்தன் உட்கார்ந்தான்.

கல்யாண் துப்பாக்கியை இன்னும் கொஞ்சம் அழுத்தினான். "இதோ பார், கணவன் தப்பிக்க வேண்டும் என்று கட்டுகளைத் தளர்வாய் விட்டுவிடாதே... இறுக்கமாகக் கட்டியிருக்கிறாயா என்று நான் சோதனை செய்து பார்ப்பேன்... அப்படி இறுக்கமாக இல்லாவிட்டால் அவனால் ஆபத்து வரும் என்பதால், அந்தக் கைகளைப் பயன்படுத்த முடியாத அளவிற்கு சுட்டு விடுவேன்..."

"ஐயோ... வேண்டாம்..." என்று அலறினாள், இந்திரா. அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது.

நைலான் கயிறு கொண்டு தன் கணவனை நாற்காலியுடன் அவள் பிணைத்தாள்.

கட்டுகளை இழுத்துப் பார்த்தான், கல்யாண். திருப்தி அடைந்தான்.

"நீ அப்படி உட்கார்..." என்று இந்திராவிற்கு ஒரு நாற்காலி காட்டினான்.

இந்திரா அமர்ந்ததும் அவளை ஒட்டி இன்னொரு நாற்காலியில் உட்கார்ந்தான். துப்பாக்கி இப்போதும் அவளை சுடுவதற்குத் தயாரான நிலையில் இருந்தது.

"அரவிந்த்... தனியார் கம்பெனியில் வேலை செய்வதாக ஏன் என்னிடம் பொய் சொன்னாய்? நாம் வீட்டிற்குள் வருவதற்குள், உன் போலீஸ் உடுப்புகளை ஒளித்து வைக்கச் சொல்லி மனைவியிடம் சொன்னாய் போலிருக்கிறது. எல்லாம் புத்திசாலித்தனமாக செய்தாய். ஆனால் ஒரு விஷயத்தை மறந்துவிட்டாய். என்னைத் தொலைக் காட்சி பார்க்க நீ அனுமதிக்கக்கூடாது.



ஒலியை மிகக் குறைத்து வைத்திருந்ததால் செய்தி அறிக்கையை நீ கவனித்திருக்க மாட்டாய். உன் மேஜை இழுப்பறையில் வேறு எதையோ - ஒருவேளை என்னைப் பற்றிய குறிப்பாகக் கூட இருக்கலாம். தேடிக்கொண்டிருந்த வேளையில் தொலைக்காட்சி செய்தி அறிக்கையில் உன் புகைப்படத்தைக் காட்டினார்கள். இன்ஸ்பெக்டர் அரவிந்தனாக உடுப்பு அணிந்து இருந்த புகைப்படம். ஒரு சதிகாரக் கூட்டத்தை நீ மடக்கியது பற்றி சொன்னார்கள்.

என்னைப் பற்றி உனக்குத் தகவல் தெரிந்திருக்காவிட்டால் நீ என்னிடம் இன்ஸ்பெக்டர் என்ற உண்மையை மறைத்திருக்க மாட்டாய். ஆக நீ என்னைக் குற்றவாளி என்று தீர்மானித்து விட்டாய் என்பது புரிந்தது. வீட்டிற்கு அழைத்து வந்து, நான் அயர்ந்திருக்கும் நேரம் என்னை மடக்கத் திட்டமிட்டிருக்கிறாய் என்று புரிந்தது. உன்னை அவசரமாக நிறுத்த வேண்டிய சூழ்நிலை... அதனால் தான் நண்பனின் மனைவி என்றும் பார்க்காமல், இவள் தலையில் துப்பாக்கி வைத்தேன்."

கல்யாண் இருவரையும் துப்பாக்கியால் மாறி மாறி குறிபார்த்துக் கொண்டே எழுந்தான்.

"மேஜை இழுப்பறையில் என்ன வைத்திருக்கிறாய்? போலீஸ் துப்பாக்கியா?"

இழுப்பறை திறந்தான். "போலீஸ் கோப்பு..." என்று சிரித்தான்.

"யமுனா என்ற இளம்பெண், பஞ்சாப் போலீஸ் இன்ஸ்பெக்டர், டேவிட்... மூன்று கொலைகளில் தொடர் புள்ளவன்... ஆகா என்னைப் பற்றிய வரலாறே இருக்கிறதா உன்னிடம்?"

"கல்யாண்... கல்லூரி நாட்களில் உன்னைத் தெரியும். மிக நன்றாகவே எனக்குத் தெரியும். நீ அமைதியானவன். யாருக்கும் தீங்கு நினைக்காதவன். நீ... நீ... எப்படி இந்தக் கொலைகளில்..." என்றான், அரவிந்தன்.

"இது நண்பனுக்கு அடையாளம்" என்று புன்னகைத் தான், கல்யாண். "இதை முதலிலேயே நீ செய்திருக் கலாம்... என்னைக் குற்றவாளி என்று தீர்மானிக்கும் முன் என் தரப்பு உண்மைகளை நீ கேட்டுத் தெரிந்திருக் கலாம்..."

கல்யாண் வந்து நாற்காலியில் அமர்ந்தான்.

"சொல்கிறேன்... எல்லாவற்றையும் சொல்கிறேன்... ஒரு எழுத்துகூட பொய் சேர்க்காமல் நடந்தது நடந்தபடி எனக்கு நிகழ்ந்ததைச் சொல்கிறேன்... நான் குற்றவாளியா இல்லையா என்பதை நீ முடிவு செய்துகொள்...

வடநாட்டில் ஒரு தனியார் கம்பெனியில் கம்ப்யூட்டர் பிரிவில் நான் வேலை செய்து கொண்டிருந்த நேரம்... நண்பனையே காட்டிக் கொடுக்க நீ தயாராகி விட்டாயே... அங்கே என் நண்பனுக்காக... நான் என்னென்ன அவதி களில் சிக்கிக் கொண்டேன் என்பதைச் சொல்கிறேன்... கேள்..."

கல்யாண் தன் குரலைத் தழைத்துக் கொண்டு சொல்ல ஆரம்பித்தான்:

எல்லாம் ஒரு அமைதியான இரவில் ஆரம்பித்தது.



மிக மெலிதான சங்கீதம் ஸ்டீரியோவில் கசிந்து கொண் டிருந்தது.

"அப்புறம் அந்த பூதம் திரும்பி வரவேயில்லை..." என்று கதையின் கடைசி வரியைச் சொல்லி குழந்தையின் முதுகில் தட்டிக் கொடுத்தேன். அவள் லேசாக சிணுங்கி விட்டு, என் மார்பில் தன் பொட்டு மூக்கைத் தேய்ச்சி விட்டு கண்களை மூடினாள். அவளுடைய தலைமுடி காற்றில் பறந்து ஒன்றிரண்டு என் மூக்கை உரசி சிலிர்ப் பேற்படுத்தியது. ஆனாலும் நான் அசையவில்லை.

"ரெண்டரை வயசு குழந்தைக்கு பூதக்கதையெல்லாம் ஏன் சொல்றீங்க?" என்று சசிகலா கோபமாகக் கேட்டாள். செல்லக் கோபம். "அவளைக் கீழ போட்டு தூங்க வைங் கன்னு எவ்வளவு தரம் சொல்றது? அப்பா மார்ல படுத் தாத்தான் தூங்குவேன்னு அடம் பிடிக்குது."

"பொறாமையா சசி?" என்றேன். "உன் இடத்தை குழந்தை பிடிச்சிருச்சேன்னு பொறாமையா?" அப்படியே முகத்தை நிமிர்த்தி குழந்தையின் உச்சந்தலையில் முத்த மிட்டேன். "சாருக்குட்டி தூங்கினப்புறம்தான் உனக்கு இடம்" என்றேன்.

சசிகலா என்னை இடுப்பில் முழங்கையால் இடித்து விட்டுத் திரும்பிப் படுத்தாள்.

சாருக்குட்டியின் கன்னத்தை, முதுகை, பின் தொடையை அன்பாக வருடிக் கொடுத்தேன். குழந்தையின் மூச்சு சீரானது. அதன் நெஞ்சு, வீங்கி வீங்கி அடங்குவதை என் மார்பில் உணர முடிந்தது.

எவ்வளவு சந்தோஷமான வாழ்க்கை! காதல் மனைவி. கல்கண்டு போல மகள். கடவுளுக்கு நன்றி சொன்னேன்.

கதவு தட்டப்பட்டது.

தடதடதடதட...

சசிகலா புரண்டாள். "இந்நேரத்துக்கு யாருங்க?" என்று கட்டிலிலிருந்து இறங்க முற்பட்டாள்.

"நீ போகாதே" என்றேன். "இராத்திரி நேரத்தில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்."

குழந்தையை கசங்காமல் அப்படியே படுக்கைக்கு இறக்கிப் படுக்க வைத்தேன்.

விளக்கைப் போடாமல் படுக்கையறைக் கதவைத் தாண்டி வெளியே வந்தேன். அதற்குள் மறுபடியும் தடதடவென்று கதவு தட்டப்பட்டது. பொறுமையற்ற யாரோ தட்டுவது எனக்கு எரிச்சலாக வந்தது.

வாசலை நான் அடையும்முன் கதவு தட்டப்படுவதில் அவசரம் அதிகமானது.

கதவைத் திறந்ததும், தட்டியவன் மூக்கிலேயே ஓங்கிக் குத்த வேண்டும் என்று ஆத்திரம் கூடியது.

கதவைத் திறந்தவன் அதிர்ந்தேன்.

நான் குத்த வேண்டிய அவசியம் இல்லை.

மூக்கு உடைபட்டு, மேலுதட்டில் இரத்தம் கசிய நின்றிருந்தான் வெங்கட். வலதுகண் கறுத்திருந்தது. கன்னத்தில் ஒரு கீறலில் இரத்தம் பூத்திருந்தது.

"வெங்கட் என்ன ஆயிற்று?" என்றேன்.

தடால் என்று என் கால்களைப் பிடித்துக் கொண்டான்.

"கல்யாண்... நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்..."



நிமிர்த்தினேன். எழுப்பினேன். "யார் உன்னை அடித்தது? உள்ளே வா... முதலில் சுத்தம் செய்து..."

"இல்லை... நான் உள்ளே வரவில்லை... நீதான் என்னுடன் வெளியே வரவேண்டும்..." அவன் கண்களும், குரலும் கெஞ்சின.

"இந்த நேரத்திலா? எங்கே? என்ன விஷயம்? முதலில் உட்கார்... உட்கார்ந்து சொல்..."

தோள்களை அழுத்தி நாற்காலியில் உட்கார வைத்தேன்.

கண்ணாடித் தம்ளர் தண்ணீரை மடக் மடக் என்று சரித்துக் கொண்டான். கைவிரல்கள் கட்டுப்பாடின்றி நடுங்கின. கால்கள் உதறின.

"கல்யாண்... என் பெண்டாட்டியை பிரசவத்திற்காக ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறேன். தொப்புள்கொடி குழந்தையின் கழுத்தைச் சுற்றிக் கொண்டிருக்கிறதாம்... சிக்கலான பிரசவம்... சிஸேரியன் பண்ண வேண்டும்... எங்கேயும் போய்விடாதே என்று டாக்டர் என்னிடம் சொல்லிவிட்டார்... ஆனால் டேவிட் புரிந்துகொள்ள மறுக்கிறான்..."

"யாரது டேவிட்?"

"கேம்லானி மார்க்கெட்டில் கார் பழுது பார்க்கும் கடை வைத்திருக்கிறானே, அவன்..."

"அவன் பெரிய பேட்டை ரவுடி என்றல்லவா சொல்வார்கள்?" என்றேன்.

"ரவுடிதான்... இதைப் பார்த்தாலே தெரியவில்லை?" என்று வெங்கட் தன் உடைந்த மூக்கையும், கிழிந்த உதட்டையும் காண்பித்தான்.

"தெரியாத்தனமாக அவனிடம் கை நீட்டி பணம் வாங்கி விட்டேன்... அதனால் வந்தது வினை..."

"தெளிவாகச் சொல்..."

"போனவாரம் ஆயிரம் ரூபாய் கொடுத்தான். இன்றைக்கு இரவு அவன் சொல்லும் காரை ஓட்டிக் கொண்டு போய் சண்டிகரில் விடவேண்டும் என்பது பேச்சு... பணத்தை வாங்கி செலவு செய்து விட்டேன். பெண்டாட்டி ஆஸ்பத்திரியில் அட்மிட் ஆகியிருக்கிறாள் என்று எவ்வளவோ கெஞ்சினேன். பணத்தை எப்படியாவது திரட்டித் திருப்பித் தந்துவிடுகிறேன் என்று கூட சொன்னேன். அப்படிச் சொன்னதும் அவனுக்குக் கோபம் தலைக்கேறி அடித்த அடிதான் இது."

"நான் என்ன செய்ய முடியும், வெங்கட்? டேவிட்டை எதிர்க்கும் அளவு என் உடம்பில் தெம்பு கிடையாது."

"யார் உன்னை சண்டை போடக் கூப்பிட்டார்கள்?"

"பின்னே?"

"அவனுக்கு என்ன வேண்டும்? அவன் சொல்லும் காரை சொல்கிற இடத்தில் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். எனக்கு பதிலாக என் நண்பன் காரை ஓட்டிப் போவான் என்று சொல்லிக் கெஞ்சி அவனை சமாதானம் செய்துவிட்டு வந்திருக்கிறேன். எனக்காக நீ கார் ஓட்டிப் போவாயா, கல்யாண்?"

"இந்த நேரத்திலா? எப்படி முடியும் வெங்கட்?"

"பிளீஸ்... காரில் ஒரு ஆளைக் கொண்டு போய் சொல்கிற இடத்தில் இறக்கி விட்டு விட்டு வர வேண்டும். போக ஒரு மணி நேரம்... திரும்பி வர ஒரு மணி நேரம்...



இரண்டு - அதிகபட்சம் - மூன்று மணி நேர வேலை தான். கல்யாண்.. நீ போகவில்லையென்றால், என் கழுத்தை அவன் வெட்டிவிடுவான்... ப்ளீஸ்..."

அவன் மறுபடியும் என் கால்களில் விழுந்தான்.

பிரசவ நேரத்தில் மனைவியை விட்டுப் போவதா? குழந்தை பிறந்தவுடன் கையில் ஏந்தி முகர்ந்து பார்க்கும் ஆனந்தத்தை அவன் இழப்பதா? என் நெஞ்சம் நெகிழ்ந்தது.

"மூன்று மணி நேரத்திற்கு மேல் ஆகாதே?" என்றேன்.

"சத்தியமாக!" - நான் ஒப்புக் கொண்டு விட்டேன் என்ற சந்தோஷம் அவன் கண்களில் மினுக்கியது.

"கல்யாண்!" - உள்ளேயிருந்து குரல் வந்தது.

"என் மனைவி!" என்றேன். "நீ இங்கேயே இரு. அவளிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வந்துவிடுகிறேன்."

"யார் வந்திருப்பது?" என்றாள், சசிகலா.

"என் பழைய நண்பன்... நான் கொஞ்சம் அவசரமாக வெளியே போக வேண்டும், சசி. மூன்று மணி நேரத்தில் வந்துவிடுவேன்."

சசிகலாவிற்கு இஷ்டமேயில்லை. அவள் வெளியே வந்து வெங்கட்டின் முகத்தையும், அதில் வழியும் இரத்தத்தையும் பார்த்துவிட்டால், நிச்சயம் என்னை அனுமதிக்க மாட்டாள் என்று தோன்றியது. அதனால் அவர்களைச் சந்திக்க விடாமலேயே நான் வெங்கட்டுடன் புறப்பட்டேன்.

நான் செய்த முதல் தவறு அதுதான்.

"என் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தோம்.

வழியில் எல்லாம் வெங்கட் மறுபடி மறுபடி என் தோள்களை அழுத்தி நன்றிகளை உதிர்த்துக் கொண்டே இருந்தான்.

மார்க்கெட் பகுதியை அடைந்தோம்.

மார்க்கெட் என்பது ஒரு பெரிய திறந்தவெளி மைதானத்தில் சின்னச்சின்ன தகரக் கூடாரங்களால் ஆனது. அந்த நள்ளிரவு நேரத்தில் எல்லாத் தகரக் கதவுகளும் இழுத்து மூடப்பட்டு விட்டன.

காலை நேரத்தில் இங்கே வந்தால் டிரான்சிஸ்டர், டெலிவிஷனில் இருந்து, கார் லாரிக்கான உதிரி பாகங்கள் வரை என்னென்னவோ கிடைக்கும். பெரும்பாலும் பஞ்சாபி வியாபாரிகள். அவர்கள் போலவே இந்தியைக் கொஞ்சம் இழுத்துப் பேசி பேரம் செய்து பொருட்களை வாங்க வேண்டும்.

யமுனாபுரி மார்க்கெட் என்று கேட்டால் ஹரியானாவிலும், பஞ்சாபிலும் அவ்வளவு பிரசித்தம்.

அந்த மார்க்கெட்டில் பொருள்கள் மலிவாகக் கிடைப்பதை எண்ணி தில்லி, ராஜஸ்தானிலிருந்தெல்லாம் ஆட்கள் வந்து போவதுண்டு.

மார்க்கெட்டின் வியாபாரம் பெருகப் பெருக பணப் புழுக்கம் அதிகமாக அதிகமாக, வன்முறையான ஆட்களுக்கு என்று ஒரு ஆட்சி அமைந்துவிட்டது. ரவுடிகளின் அட்டகாசம் பெருகிவிட்டது. அவர்களுக்கெல்லாம் தலைவனாக டேவிட் என்பவன் செயல்பட்டு வந்ததாக நிறையத் தகவல்கள் பரவியிருந்தன.

மார்க்கெட் மைதானத்தில் வடகோடியில் ஒரு பெரிய கார் பழுது பார்க்கும் கடை இருந்தது.



தகரப் பலகைகள் நிற்க வைத்த நான்கு சுவர்களுக்குள் அந்த பட்டறை. அங்கே மட்டும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வண்டியை அங்கே விடச் சொன்னான் வெங்கட்.

அந்த இடத்தை நெருங்கும்போதே ஒலியும், ஓசையும் மாறிவிட்டன. ஒரு காரின் பிளந்த வாய்க்குள் விளக்கடித்து அதன் இன்ஜினை நோண்டிக் கொண்டிருந்த இருவர் எங்கள் வண்டிச் சத்தம் கேட்டதும் தலையை மட்டும் நிமிர்த்திப் பார்த்தனர்.

''டேவிட்... வெங்கட் வந்திருக்கிறான்'' என்று குரல் கொடுத்தனர்.

இரண்டு டயர்களை ஒன்றன் மீது ஒன்றாக வைத்து அதையே இருக்கையாகப் பயன்படுத்தி உட்கார்ந்திருந்தவன் எழுந்தான்.

''அவன்தான் டேவிட்'' என்று வெங்கட் அவசரமாகச் சொன்னான்.

டேவிட் ஆறடி உயரமிருந்தான். தலை கலைந்திருந்தது. காக்கி உடுப்புகள் அணிந்து, மேலே கறுப்பு நிறத்தில் ஒரு மேலங்கி அணிந்திருந்தான். அந்த அங்கிக்கு கைகள் கிடையாது. நான்கு பாக்கெட்கள் இருந்தன.

இரண்டில் டேவிட் கை நுழைத்து நின்றான்.

கண்கள் விஷம் கக்கின. மேல் பற்களில் இரண்டு கறுப்பாக இருந்தன. இடது காதில் வளையம் மாட்டியிருந்தான். உதடுகளால் பிடித்திருந்த பீடியைக் கீழே துப்பி விட்டு எங்களை நோக்கி வந்தான்.

ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்தான். எங்களை நெருங்கியதும், வெங்கட்டின் வலது தோளில் பளீரென்று தட்டினான். வெங்கட் அதிர்ந்து பின் நகர்ந்தான்.

இந்தியில் ஒரு கெட்டவார்த்தை சொல்லி, ''இவன் தான் உங்கள் நண்பனா?'' என்றான்.

''ஆமாம்'' வெங்கட்டின் குரல் நடுங்கியது. ''இவன் பெயர் கல்யாண்... எனக்கு பதிலாக சண்டிகருக்கு காரை ஓட்டிப் போக இவன் சம்மதித்துள்ளான்.''

டேவிட்டின் பார்வை இப்போது என் பக்கம் திரும்பியது.

''உன்னிடம் டிரைவிங் லைசன்ஸ் இருக்கிறதா?''

''இருக்கிறது, முதலாளி'' என்று வெங்கட் குறுக்கிட்டான்.

''நீ பேசாமல் இரு... இவன் பதில் சொல்லட்டும். லைசன்ஸ் இருக்கிறதா?''

''இருக்கிறது'' என்றேன். என் லைசன்ஸை எடுத்து உள்ளங்கையில் வைத்து அவனிடம் காட்டினேன்.

''காரை பத்திரமாக ஓட்டிப்போ... அதிக அவசரம் வேண்டாம்.''

''சரி...''

''முக்கியமாய் நீ போலீசைத் தவிர்த்துவிட வேண்டும்...''

ஏன் என்று நான் கேட்கவில்லை.

''வா...'' என்றான். அங்கே பல கார்கள் பழுது பார்க்கப்பட காத்திருந்தன. அந்த வரிசையில் கடைசியாக நின்றிருந்த கார் அருகே அழைத்துப் போனான்.

அது அரக்கு நிறக் கார். வெளிநாட்டு தயாரிப்பு. அழகான கார். வசதியான இருக்கைகள். ஓட்டுவதற்கு மிக மகிழ்ச்சி தரும் கார்.



காரின் பின் இருக்கையில் ஒரு ஆள் ஏற்கனவே உட்கார்ந்திருந்தான். உட்கார்ந்திருந்தான் என்பதை விட சரிந்திருந்தான் என்பதுதான் பொருத்தமான வர்ணனை.

டேவிட் அவன் தோளில் தட்டினான். சரிந்திருந்த மண்டையை நிமிர்த்தி, ''டேய், கபூர்... எழுந்து உட்கார்... அழைத்துப் போக ஆள் வந்துவிட்டது'' என்றான்.

கபூர் என்றழைக்கப்பட்டவன் ஒற்றைக்கண்ணை மட்டும் கஷ்டப்பட்டுத் திறந்து என்னைப் பார்த்தான்.

''இவரா?'' என்று குழறினான்.

அவனிடம் மலிவான சாராய வாடை அடித்தது.

''இவன் பெயர் கல்யாண். இவன்தான் உன்னை சண்டிகருக்கு அழைத்துப் போகிறான். அங்கு 23-வது செக்டரில் உன்னை இறக்கி விட்டு விட்டு இவன் அங்கிருந்து அடுத்த கார் எடுத்துக் கொண்டு திரும்பி வந்து விடுவான்...''

''சரி...'' என்று கண்ணை மூடிக் கொண்டான், கபூர்.

''மூச்சு முட்டக் குடித்துவிட்டு இப்போது பார், மலைப் பாம்பு போல சுருண்டு கிடக்கிறான்'' என்றான், டேவிட்.

''புரியவில்லை'' என்றேன். ''இவரைக் கொண்டு போய் சண்டிகரில் இறக்கி விட்டு நான் திரும்ப வேண்டும், அவ்வளவுதானே?''

''அவ்வளவுதான் - ஆனால் போகும்போது இந்தக் கார்... திரும்பி வருவதற்கு அங்கு வேறொரு கார் உனக்காகக் காத்திருக்கும்... அதை எடுத்து வந்துவிடு...''

''சரி...''

"உன் பெயர், முகவரி எல்லாம் அந்தக் காகிதத்தில் எழுதிக் கொடுத்துவிட்டு நீ புறப்படு... இந்தா, இதுதான் நீ சண்டிகரில் போய்ச் சேரவேண்டிய முகவரி..."

அவன் நீட்டிய தாளை வாங்கி பாக்கெட்டில் செருகிக் கொண்டு, என் முகவரியை எழுதிக் கொடுத்துவிட்டு, காரின் ஓட்டுநர் இருக்கையில் ஏறினேன்.

"வெங்கட், நீ என் மோட்டார் சைக்கிளை எடுத்துப்போ... உன் மனைவியை கவனி..." என்றேன்.

வெங்கட் கண்ணீரைப் பெருக்கினான்.

"நன்றி... கல்யாண்... நான் உனக்கு எப்படி...?"

"நன்றி சொன்னது போதும். உன் மனைவி அங்கே உனக்காகக் காத்திருப்பாள். ஓடு..." என்றேன்.

அவன் மோட்டார் சைக்கிளை எடுத்துப் புறப்பட்டான்.

"டேவிட்..." என்று அழைத்தேன்.

டேவிட் வந்தான். சரேலெனக் குனிந்து என் கன்னத்தில் அறைந்தான். "இது என்னை பேர் சொல்லிக் கூப்பிட்டதற்கு" என்றான்.

அவன் அடித்த அடியில் தலைக்குள் சகல பொருள்களும் இடம் மாறின. விண்ணென்று மூக்குக்குப் பக்கத்தில் ஒரு விமானமே பறந்தாற் போலிருந்தது.

"என்ன?"

"நான் திரும்பி வரும்போதும் இந்தக் கபூரை அழைத்து வரவேண்டுமா?"

"வேண்டாம். போ... காரோடு இவனை அந்த முகவரியில் இறக்கு. அங்கே என் ஆள் இருப்பான். வேறொரு கார் சாவி தருவான். அம்பாஸிடர் கார். அதை ஓட்டி வந்துவிடு.



இதோ பார்... உன் வேலை சுலபமானது. போக வேண்டியது. வரவேண்டியது அவ்வளவுதான். இடையில் கபூரிடம் பேச்சுக் கொடுப்பதோ, கேள்விகள் கேட்பதோ கூடாது..."

"என்னிடம் கேள்விகள் இல்லை" என்றேன்.

கபூரிடமிருந்து மெலிதான குறட்டை ஒலி வரத் துவங்கி விட்டது.

சண்டிகர் நோக்கி, விதி எனக்கு எதிராக விரித்த சதி வலை பற்றி ஏதும் அறியாமல் புறப்பட்டேன்.

கார் வெண்ணெய் போல் ஓடியது. அற்புதமான இன்ஜின். காலின் ஒரு சின்ன அழுத்தத்தில் வேகம் கூடியது. சாலையும் சிறப்பாக இருந்ததால், வேகத்தின் அதிர்வுகள் எதுவும் தெரியவில்லை.

பாஸி என்ற ஊரை நெருங்கிக் கொண்டிருந்தோம்.

கபூர் சுகமாகத் தூங்கிப் போயிருந்தான்.

நானும் இப்படித் தூங்கியிருக்க வேண்டியவன்தான். மனைவியின் கதகதப்பும், மகளின் பிஞ்சு அரவணைப்பும் இந்நேரம் அனுபவித்துக் கொண்டிருக்க வேண்டியவன்தான். ஆனால் எல்லாவற்றையும் துறந்துவிட்டு நண்பனுக்காக இந்தப் பயணம்.

இந்த வேகத்தில் போனால் ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே நான் சண்டிகர் போய்ச் சேர்ந்துவிட முடியும் என்று நான் நினைத்துப் பார்த்த நேரத்தில், அந்த குறுக்கீடு வந்தது.

சாலையின் மத்தியில் ஒரு டார்ச் வெளிச்சம். வெளிச்சத்தை மேலும் கீழும் அசைத்து காரை நிறுத்தச் சொல்லி

சைகை செய்தார்கள், சாலையின் குறுக்கே நின்ற மூன்று பேர்.

காரின் வெளிச்சம் அவர்கள் மீது பாய்ந்தபோது அதிர்ந்தேன்.

மூவரும் காவல்துறையினர். காக்கி உடுப்புகள் அணிந்து, கைகளில் துப்பாக்கிகள் ஏந்தியிருந்தனர்.

டேவிட் சொன்னது நினைவுக்கு வந்தது. போலீஸைத் தவிர்க்கச் சொன்னானே...

ஆனால் இந்தக் கட்டத்தில் அவர்கள் நிறுத்தச் சொல்லும்போது நிறுத்தாமல் நான் காரை திசை திருப்பினால், நிச்சயம் அவர்களுக்குக் கோபம் வரும். சந்தேகம் வரும். துப்பாக்கிகளை பயன்படுத்தினால், காரின் டயர்கள் பொத்தலாகும். காரையே கவிழ்த்துவிடும்.

"நிறுத்தட்டுமா?" என்றேன், கபூரிடம்.

குறட்டைதான் பதிலாக வந்தது.

அதற்குள் கார் காவலர்களை நெருங்கிவிட்டது.

எனக்கென்ன பயம்?

என்னிடம் கார் ஓட்டுவதற்கு உண்மையான லைசன்ஸ் இருக்கிறது. எந்த சிக்னலையும் நான் மதிக்காமல் தாண்டவில்லை. நெடுஞ்சாலையில் ஓட்டக்கூடிய வேக வரம்பைத் தாண்டி காரை ஓட்டவில்லை. போலீஸாரின் கேள்விகளுக்கு என்னால் பதில் சொல்ல முடியும்.

எனவே காரை சட்டென்று வேகம் குறைத்து காவலரிடமிருந்து ஐந்தடி தூரத்தில் நிறுத்தத்திற்குக் கொண்டு வந்தேன்.



கிளை நூலகம்

பின் இருக்கையைத் திரும்பிப் பார்த்தேன்.

"கபூர்... போலீஸ்...!" என்றேன். ரகசியமான அழுத்தமான குரல்.

கபூர் சற்றே அசைந்துவிட்டு சாய்ந்துவிட்டான். தூக்கம் அவனுக்குத் தெளியவில்லை.

இன்ஸ்பெக்டர் தன் கழியால் என் பக்கம் கண்ணாடியைத் தட்டினார். கதவைத் திறக்கச் சொல்லி சைகை செய்தார்.

திறந்தேன்.

காருக்குள் எட்டிப் பார்த்தார்.

"கார் எங்கே போகிறது?" என்று உறுமினார்.

"சண்டிகர்..." என்றேன். "பின்னால் உட்கார்ந்திருப்பவரை சண்டிகரில் இறக்கிவிட்டு வரப்போகிறது..."

"யார் அது?"

"கபூர் என்று பெயர் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரை ஒரு பயணி..." என்று புன்னகைத்தேன்.

"காரில் வேறு யாரும் இல்லையே?"

"யாரும் இல்லை!"

"டிக்கியைத் திறந்து காட்டு..."

25278

சாவியை எடுத்துக்கொண்டு இறங்கினேன். "கபூர்..." என்று இன்னொருமுறை அழுத்தமாகக் கூப்பிட்டுப் பார்த்தேன்.

அவன் மெலிதாக அசைந்துவிட்டு மறுபடி கண்களை மூடினான்.

டிக்கியில் என்ன இருக்கிறது என்று நான் கேட்டுக் கொள்ளவில்லை. என்ன இருந்துவிடப் போகிறது? பழைய டயர்கள், காரின் உதிரிபாகங்கள், வேறு கருவிகள்... அதிகபட்சம் ஏதாவது கடத்தல் பொருட்கள். எதற்கும் நான் பொறுப்பில்லையே...

எனவே சாவி நுழைத்து டிக்கியைத் திறந்தேன்.

திறந்த வேகத்தில் ஓரடி பின்வாங்கினேன்.

என் வாழ்நாளில் அப்படி ஒரு அதிர்ச்சியை நான் சந்தித்ததே யில்லை. காரின் பின்புற டிக்கியில் -

ஓர் இளம்பெண்.

மடக்கி வைக்கப்பட்டிருந்தாள். முழங்கால்கள் இரண் டும் மார்பில் அழுந்த தலை அந்த கால்களில் புதைந் திருக்க - இரண்டு கண்களும் திறந்தபடி வெறித்துக் கொண்டிருந்தன. அவளுடைய உடையின் பல பகுதி களில் சிகப்பாய் இரத்தக் கறை...

பத்தடி தூரத்திலிருந்தே சொல்ல முடியும் - அவள் சத்தியமாக இறந்து போயிருந்தாள்.

நான் இரண்டடி பின்வாங்கியது போலவே அந்தப் பிணத்தைப் பார்த்து அதிர்ந்து இன்ஸ்பெக்டரும் பின் வாங்கினார். கான்ஸ்டபிள்கள் என் புஜங்களைப் பிடித் தனர்.

''காரில் வேறு யாரும் இல்லை என்றாய். இதற்கு என்ன அர்த்தம்?''



''இதுதான் அர்த்தம்'' என்று குரல் வந்தது. திரும்பி னோம்.

கபூர்!

இவன் எப்போது காருக்கு வெளியே வந்தான்? இன் னும் போதை தீராமல் காரைப் பிடித்துக் கொண்டுதான் நின்றான். ஆனால்...

அவன் கையில் ஒரு துப்பாக்கி.

''அவனை விடுங்கள்'' என்று துப்பாக்கியால் மிரட் டினான்.

அதிர்ந்தேன்.

இதென்னடா புது வம்பு? என் இத்தனை வருட சர்வீஸில் எந்த போலீஸையும் நான் எதிர்த்துக் கொண்ட தில்லை.

இன்ஸ்பெக்டர் கோபமுற்று தன் துப்பாக்கியை எடுக்க இடுப்பருகே கையைக் கொண்டு போனார். அவ்வளவு தான் -

கபூர் கண்மூடித்தனமாக சுட்டான்.

தோட்டா இன்ஸ்பெக்டரைப் பின்னால் தூக்கி அடித்தது.

அவ்வளவு போதையிலும் மிகச் சரியாக குறி பார்த்து சுட்டிருக்கிறான். இன்ஸ்பெக்டரின் நெஞ்சில் குபீரென்று இரத்தம் பூத்தது.

கான்ஸ்டபிள்கள் பதறினார்கள்.

''வா... உன் பேர் என்ன? கல்யாண்... வா... வந்து உடனே வண்டியை எடு...'' என்று கபூர் மிரட்டினான்.

அவனுடைய குரல் அதிகாரமாக ஒலித்தது. அந்தக் குரலால் செலுத்தப்பட்டு சற்றும் புத்திசாலித்தனமின்றி நான் செயல்பட்டேன்.

இரண்டு கான்ஸ்டபிள்களையும் உந்தித் தள்ளினேன். ஏற்கெனவே இன்ஸ்பெக்டர் சுடப்பட்ட, அச்சத்தில் அவர்கள் நிலையிழந்திருக்க, நான் தள்ளிய தள்ளலில் இருவரும் என் புஜங்களை விடுத்தனர்.

ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து முன் இருக்கையில் அமர்ந் தேன்.

கபூர் தடுமாறிய பின் கதவு திறந்து ஏறி அமர்ந்தான்.

என் கை கால்கள் நடுங்கிக் கொண்டிருந்தன.

தள்ளப்பட்ட காவலர்கள் இருவரும் ஓங்கிய குரலில் ஏதோ கத்தினார்கள்.

உடனே... உடனே காரை எடுக்க வேண்டிய பரபரப்பு என் இரத்தத்தில் வேகம் கலந்தது.

கியரைப் பொருத்தி, க்ளட்சை விடுவித்ததில் கார் தன் டயர்களைத் தேய்த்து ஒரு ஓசை எழுப்பி சீறிப் பாய்ந்து புறப்பட்டது.

என் உடலில் ஏற்பட்டிருந்த நடுக்கமா, என் மனதில் ஏற்பட்டிருந்த கலக்கமா - எது காரணம் என்று தெரியாது. கார் என் கட்டுப்பாட்டிலிருந்து எகிறியது.

ஸ்டியரிங்கை நான் சீர்ப்படுத்தும் முன் கார் அந்த நெடுஞ்சாலையிலிருந்து திசைமாறியது. துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட தோட்டா போலப் பாய்ந்து இடதுபுறம் இருந்த கோதுமை வயலை நோக்கி விரைந்தது.



காரை நேர்ப்படுத்த நான் ஸ்டியரிங்கை வளைத்த வேகத்தில் கார் கதறித் திரும்பி தொப்பென்று சாலையோர மரத்தில் மோதியது.

நினைவு தப்பும்முன் என் மார்பின் மீது ஸ்டியரிங் வட்டம் மோதுவதை மட்டுமே உணர்ந்தேன்.

கண் விழித்தபோது என் முகத்தில் இரண்டு இடங் களில் முழங்கையில், மார்பில் என்று பிளாஸ்திரிகள் ஒட்டப்பட்டிருந்தன. நசநசவென்ற இரத்தத்தின் பிசு பிசுப்பையும் உடலில் அங்கங்கே உணர்ந்தேன்.

என்னைச் சுற்றி காக்கி உடுப்புகளாக இருந்தனர்.

"விழித்துவிட்டான், பார்" என்றார், ஒரு காவல் அதிகாரி.

என் முடியைக் கொத்தாகப் பற்றி நிமிர்த்தினார்கள்.

கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் மயக்கத்தில் இருந்திருக்கிறேன்.

"ஏண்டா... போலீசையே சுடுகிறாயா?"

"ஐயோ... நான் இல்லை..." என்று அலறினேன். "இன்ஸ் பெக்டரை சுட்டது கபூர்..."

"அப்புறம் ஏன் கான்ஸ்டபிளைத் தள்ளிவிட்டு காரில் தப்பிக்கப் பார்த்தாய்?"

பொட்டில் அறைவது போன்ற கேள்வி. என்னை நானே சபித்துக் கொண்டேன்.

"ஐயோ... தெரியாமல்..." என் விழிகள் அலைபாய்ந்தன. "கபூர் எங்கே?"

"நீ காரை மோதியதும் போலீஸ் உங்களைச் சூழ்ந்தது. ரொம்ப வீரத்தனமாக கபூர் மறுபடி துப்பாக்கி எடுத்து

சுட்டான்... நாங்கள் என்ன நாயைக் குளிப்பாட்டவா இத்தனை பயிற்சிகள் தாண்டி வந்திருக்கிறோம்? எங்களிடம் துப்பாக்கிகள் இல்லையா, எங்களுக்கு கூடத் தெரியாதா? பன்றியை சுடுவது போல் சுட்டுத் தள்ளி விட்டோம், அவனை. இப்போது உயிருடன் இருக்கும் கூட்டாளி நீ ஒருத்தன்தான்...''

''ஐயோ... நான் கூட்டாளி இல்லை. வெறும் ஓட்டுனர். அவ்வளவுதான்... காரை ஓட்ட பணம் கொடுத்தார்கள்... ஓட்டினேன், அவ்வளவுதான்...'' என்று கதறினேன்.

என் தலைமுடியைப் பிடித்திருந்தவர் அதை உலுக்கு உலுக்கினார். என் சர்வ நரம்புகளும் வலியில் துடித்தன.

''அப்படியானால் யமுனாவை ஏன் கடத்தினீர்கள் என்று நீ விளக்கம் தரமாட்டாய்?'' அவர் உறுமினார்.

''யமுனாவா, யாரது?''

''அவளைக் கடத்தி, அவள் அப்பனிடம் பணமும் வசூல் செய்து விட்டு, பெண்ணைத் திருப்பித் தராமல் கொலை செய்து டிக்கியிலும் எடுத்துப் போய்விட்டு, இப்போது யமுனா யார் என்றா கேட்கிறாய்?''

''டிக்கியில் ஒரு பெண் இருந்ததே சத்தியமாக எனக்குத் தெரியாது. என்னை நம்புங்கள்... எனக்கும் கபூருக்கும் எந்த உறவும் இல்லை... நான் அப்பாவி...''

அப்போது அந்த அறைக்குள் வெள்ளை உடுப்பு அணிந்த மருத்துவர் நுழைந்தார்.

''டாக்டர், இவனை நாங்கள் கைது செய்து அழைத்துப் போகிறோம்'' என்றார், ஒரு இன்ஸ்பெக்டர்.



''அமைதியான முறையில் கேட்டால் சிலர் பதில் சொல்வதில்லை... அவர்களுக்காகவே சிறப்பான போலீஸ் விசாரணை முறைகள் இருக்கின்றன. எங்கள் வழியில் 'விசாரித்து'க் கொள்கிறோம்'' என்றார் அந்த காவல் அதிகாரி.

மருத்துவர் தலையசைத்து அவர்களுடன் என்னை அனுப்பினார்.

அவர்கள் என்னை நரகத்திற்கு அழைத்துப் போனார்கள்.

தெரியாமல் கேட்கிறேன்... போலீஸ்காரர்கள் என்றால், அவர்களுக்கு ஒரு வரைமுறையே கிடையாதா? அவர்கள் என்னைக் கையாண்டவிதத்தை நீங்கள் பார்த்திருந்தால் இரத்தக் கண்ணீர் விட்டிருப்பீர்கள்.

என்னை நிற்க வைத்து கைகளை உயரமாகத் தூக்கச் சொன்னார்கள். அப்படியே இடுப்பை பின்புறமாய் வளைத்து கைகளைத் தரைக்குக் கொண்டு போகச் சொன்னார்கள். நான் என்ன கழைக் கூத்தாடியா, அல்லது சர்க்கஸில் வேலை செய்பவனா? என் உடம்பு அப்படி மடங்க மறுத்தபோது என் கைகளைப் பிடித்து ஒரு காவலர் மளுக்கென்று பின்னால் இழுத்தார். வலியில் அலறினேன்.

உட்காரக்கூடாது என்று முழங்காலில் அடித்தார்கள். பின்னால் கொண்டு போன என் கைகளை கால்களுடன் சேர்த்துக் கட்டினார்கள்.

துடித்துப்போனேன். இழுபட முடியாமல் என் வயிறு கிழிந்துவிடும் போல் இருந்தது.

''சொல், யமுனாவை ஏன் கடத்தினீர்கள்? யார் யார் கூட்டாளி?''

''ஐயோ... சத்தியமாகத் தெரியாது...''

என்னை அடைத்திருந்த கூடத்திற்கு வெளியே விடியல் வெளிச்சம் வந்துவிட்டது.

என் மனைவியும் குழந்தையும் இரவு முழுவதும் நான் திரும்பாததால் எவ்வளவு தூரம் தவித்துப் போயிருப்பார்கள்? இந்த அவலத்தை நான் இன்னும் எத்தனை நேரம் தான் அனுபவிப்பது?

என்னை தனக்கு பதிலாக கார் ஓட்டச் சொன்னானே, வெங்கட் - அவனும் இந்தக் கடத்தலில் கூட்டாளியா?

இருக்காது. எனக்கு வெங்கட்டை தெரியும். அவன் நிச்சயம் இதுபோன்ற கீழ்த்தரமான செயல்களில் ஈடுபட்டிருக்க மாட்டான். அவனுக்கும் கார் டிக்கியில் ஒரு பெண்ணின் பிணம் இருப்பது தெரிந்திருக்காது...

இப்போது அவன் பெயரைச் சொன்னால் போலீஸ் அவனை இழுத்து வரும். என்னைப் போலவே அவனையும் கட்டி வைத்து அடிக்கும். உதைக்கும். பாவம், புதிதாக குழந்தையை ஈன்று முடித்து பிரசவ அயர்ச்சியிலிருந்து கூட அவன் மனைவி விடுபட்டிருக்க மாட்டாள்.

வேண்டாம், வெங்கட்டை மாட்டிவிட வேண்டாம் என முடிவு செய்தேன். டேவிட்டைப் பற்றிச் சொல்வதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை.

''எனக்குத் தெரிந்த உண்மைகளையெல்லாம் சொல்லி விடுகிறேன்'' என்று அலறினேன்.

சித்ரவதையை நிறுத்தினார்கள். ''சொல்'' என்றார்கள்.



டேவிட் என்னை கார் ஓட்ட அழைத்தான் என்றேன். சண்டிகர் முகவரி கொடுத்து அங்கு கொண்டு போய் கபூரை இறக்கிவிடச் சொன்னான், அங்கிருந்து இன்னொரு காரை எடுத்து வரச் சொன்னான் என்று சொன்னான்.

''டேவிட்டா?''

''ஆம், டேவிட்தான்...''

''இவன் கட்டுகளை அவிழுங்கள்... இவனை ஜீப்பில் ஏற்றுங்கள்...'' என்றார் இன்ஸ்பெக்டர்.

கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்த டேவிட்டின் அருகே காவல்துறையின் ஜீப் போய் பிரேக் அடித்தது.

''இவனா?''

''இவன்தான்'' என்றேன்.

டேவிட் எழுப்பப்பட்டான். சூரிய வெளிச்சத்தின் தீவிரம் தாங்காமல் கண்களைக் கசக்கி விழிகளைத் திறந்தவன், எதிரே காவலர்களின் தலைகளைப் பார்த்ததும் பதறி எழுந்தான்.

என்னைப் பார்த்தான். அவன் கண்களில் ஒரு கணம் காழ்ப்பும், ஆத்திரமும் தோன்றி மறைந்தன. கபூர் சுடப்பட்டது அவனுக்குத் தெரியாமல் இருக்கலாம். நான் அவர்களை போலீசில் மாட்டிக் கொடுத்துவிட்டேன் என்று என் மீது ஆத்திரம் வந்திருக்க வேண்டும்.

என்னை ஜீப்பிலிருந்து இறக்கவில்லை.

இன்ஸ்பெக்டர் அவனைத் தனியே அழைத்துப் போய் என்னென்னவோ கேட்பதும், அவன் தீவிரமாகத் தலை

யசைத்து பதில் சொல்வதும் எனக்குத் தெரிந்ததே தவிர அவர்களுக்குள் என்ன பேச்சு நடந்தது என்று எனக்குத் தெரியாது.

ஆனால் தொலைவிலிருந்தே ஒரு விசயம் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிந்தது.

டேவிட் என் மீது அதீத கோபத்தில் இருந்தான்.

போலீஸ் வரவைப் பார்த்து மார்க்கெட்டில் அங்கங்கே படுத்து எழுந்தவர்கள் எல்லாம் நிமிடமாய் அங்கு கூடி விட்டார்கள்.

இன்ஸ்பெக்டர் டேவிட்டை அழைத்து வந்தார்.

என்னை அவனிடம் சுட்டிக் காட்டினார்.

"இவனா?" என்றார்.

"இவன்தான்... இவன் பெயர் கல்யாண் என்று நினைக்கிறேன்... என்னிடம் வேலை கேட்டு சென்ற மாதம் வந்தான். ஏதோ ஒரு ஆபத்தில் மாட்டியிருப்ப தாகவும் உடனே பணம் தேவை என்றும் சொன்னான். என் பட்டறையில் வேலை என்று சொல்லி அனுப்பிவிட் டேன்..."

"பொய்!" என்று கத்தினேன். "சண்டிகருக்குப் போகச் சொல்லி இவன் கொடுத்த முகவரி டேவிட்டின் கையெழுத்தி லேயே என்னிடம் இருக்கிறது..."

"இருக்கலாம்... அதில் என்ன தவறு?" என்றான், டேவிட். "இவனைப் பார்த்தால் பாவமாய் இருந்தது. இங்கு வேலை இல்லை. சண்டிகரில் இருக்கும் என் நண் பனைப் போய்ப் பார் என்று முகவரி எழுதிக் கொடுத்தது



என்னவோ உண்மைதான்... அதற்காக என் பட்டறையி லிருந்து காரைக்கூட திருடிக்கொண்டு போவான் என்று நான் எப்படி எதிர்பார்க்க முடியும்?"

"டேவிட்... என் முகத்தைப் பார்த்துச் சொல். ஏன் இப்படிப் பொய் சொல்கிறாய்? கபூர் உன் நண்பனா, இல்லை கூட்டாளியா?" என்று அலறினேன்.

"பாருங்கள்... இவன் திசை திருப்பப் பார்க்கிறான். புதிதாய் கபூர் என்று ஒரு பாத்திரத்தை கதையில் நுழைக்கிறான். கபூர் யார் என்று எனக்குத் தெரியாது..."

"அடப்பாவி..."

"இன்ஸ்பெக்டர்... உங்கள் முன்னிலையில் இந்த விசாரணை நடப்பதால் இவனைச் சும்மா விடுகிறேன்... இல்லாவிட்டால் இவனைத் திருகித் தூக்கிப் போட்டிருப் பேன்..." என்று உறுமினான், டேவிட் "இவன் வீட்டிற்குப் போய் சோதனை போட்டால் ஒருவேளை கடத்தலில் இவனுக்குக் கிடைத்த பணம் உங்கள் கையில் மாட்டலாம்."

"டேவிட்... என்ன இது! என் வீட்டை ஏன் இழுக் கிறாய்?" அலறினேன்.

"ஏறு ஜீப்பில்" என்றார், இன்ஸ்பெக்டர்.

நான் போலீசுடன் வந்து இறங்குவேன் என்று என் மனைவி கொஞ்சமும் எதிர்பார்த்திருக்கவில்லை. கதவைத் திறந்தவள் உச்சக்கட்ட அதிர்ச்சிக்குள்ளானாள்.

சாருக் குட்டி தூக்கம் கலைந்து கட்டிலில் எழுந்து உட்கார்ந்து திருதிருவென்று பார்த்தது.

"என்னங்க... என்ன ஆச்சு? இவங்க எதுக்கு வந்திருக் காங்க?" - என் மனைவி அதிர்ச்சியில் அழ ஆரம்பித்தாள்.

"சசி... இவர்கள் தவறு செய்கிறார்கள்... செய்யாத ஒரு குற்றத்தை நான் செய்ததாக சந்தேகப்பட்டு வந்திருக் கிறார்கள்... நான் நிரபராதி என்பது நிரூபணமாகும்! அதுவரை எனக்கு சின்னச் சின்ன தொந்தரவுகள் தரு வார்கள். நீ கவலைப்படாதே..."

"உன் பேர் என்ன சசியா? இவன் நேற்றிரவு எங்கே போவதாக சொன்னான்?" என்று இன்ஸ்பெக்டர் உறுமினார்.

"இன்ஸ்பெக்டர், என் மனைவியை மிரட்டாதீர்கள்" என்றேன். அப்படிச் சொன்னதற்காக என் முதுகில் ஓங்கி அடித்தார். அவர் அடித்த அடியில் என் மனைவியின் கண்களில் கண்ணீர் புரண்டு புறப்பட்டது.

"அவரை அடிக்காதீர்கள்" என்று அழுதாள். "உங்கள் கேள்விகளுக்கெல்லாம் நான் பதில் சொல்கிறேன்..."

"இவன் நேற்றிரவு எங்கே போனான்?"

"தெரியாது. இரவு பதினோரு மணிக்குமேல் இருக்கும். குழந்தையுடன் விளையாடி - கதை சொல்லி தூங்கப் பண்ணினார். யாரோ அவசரம் அவசரமாக கதவைத் தட்டி னார்கள்... போய்த் திறந்தார்... வந்த ஆளுடன் பேசினார்..."

"வந்தது யார்?"

"நான் படுக்கையறையிலேயே இருந்தேன். எனக்குத் தெரியாது. வந்தவன் என்ன சொன்னான் என்பதுகூட எனக்குத் தெரியாது. இரண்டு அல்லது மூன்று மணி நேரத்தில் வந்து விடுவதாகச் சொல்லிவிட்டுப் புறப்



பட்டுப் போனார்... இரவு முழுவதும் இவர் திரும்பி வராத தால் நான் தூக்கமின்றி தவித்துக் கொண்டிருந்தேன்... இரவு போனவர் இதோ இப்போதுதான் உங்களுடன் வீடு திரும்பியிருக்கிறார்."

"எங்கே போவதாக சொல்லிப் போனான்?"

"பழைய நண்பர் வந்திருப்பதாகச் சொன்னார். அவசர மாக வெளியே போவதாகச் சொன்னார். வேறு எந்த விவரமும் தரவில்லை..."

"யமுனா என்ற பெண்ணைக் கடத்தியவர்களில் இவனும் ஒருத்தன் என்று உன்னிடம் எப்போதாவது சொல்லியிருக்கிறானா?"

"ஐயோ இன்ஸ்பெக்டர்... யமுனாவை நான் கடத்த வில்லை" என்று துடித்தேன்.

"நீ குறுக்கில் பேசாதே... உன் மனைவி பதில் சொல்லட்டும்..."

என் மனைவி என்னை அதிர்ந்து பார்த்தாள்.

"கடத்தலா? இவரா? என்ன சொல்கிறீர்கள்?"

"ஒரு சேட்ஜியின் இளம் மகள் யமுனாவை இவனும், இவன் கூட்டாளியும் கடத்தி, சேட்ஜியை மிரட்டி இரண்டு லட்ச ரூபாய் பறித்திருக்கிறார்கள்... பணம் கிடைத்த பின், அவள் அடையாளம் காட்டிக் கொடுப்பாள் என்று பயந்து கொன்று விட்டார்கள் போல் இருக்கிறது. மகள் திரும்பக் கிடைக்காததும், சேட்ஜி எங்களிடம் வந்தார். வெளியூர் போகும் பாதைகளை எல்லாம் அடைத்து வாகனங்களை சோதனை செய்ய ஆரம்பித்தோம்... அதில் ஒரு கார் உன்

கணவன் ஓட்டி வந்த கார் - டேவிட் என்பவனின் பழுது பார்க்கும் பட்டறையிலிருந்து திருடப்பட்ட கார்...''

''இன்ஸ்பெக்டர், டேவிட் சொன்னதெல்லாம் பச்சைப் பொய்.''

''குறுக்கே பேசாதே என்று உன்னை ஏற்கனவே சொன்னேன்...'' என்றார், இன்ஸ்பெக்டர். ''மடக்கப்பட்ட காரின் டிக்கியில் யமுனாவின் பிணம் இருந்தது. காரை ஓட்டியவர் யார் தெரியுமா? உன் புருஷன்... காரில் அவனுடன் இருந்த கபூர் ஏற்கனவே பல குற்றங்களைச் செய்தவன். குடித்திருந்தான். எங்கள் இன்ஸ்பெக்டர் ஒருத்தரை சுட்டுக் கொன்றான். உண்மையானவனாக இருந்தால் உன் புருஷன் என்ன செய்திருக்க வேண்டும்? போலீஸிடம் அப்போதே உண்மைகளை சொல்லியிருக்க வேண்டும்... ஆனால் போலீஸை உந்தித் தள்ளிவிட்டு கூட்டாளியுடன் காரில் தப்பித்து ஓடப் பார்த்தான். எங்களிடம் மாட்டிக் கொண்டான்...''

இன்ஸ்பெக்டர் சொல்லி முடித்ததும் என் மனைவி என்னை ஒரு கண்ணகி பார்வை பார்த்தாள்.

''கல்யாண்... நீங்கள் இப்படியெல்லாம் செய்வீர்கள் என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை...''

''சசி... யமுனா யார் என்றே எனக்குத் தெரியாது. நான் நண்பனுக்காக கார் ஓட்டியது உண்மை. அந்தக் காரின் டிக்கியில் பிணம் இருந்தது எனக்கு சத்தியமாகத் தெரியாது...''

''போலீஸ் இன்ஸ்பெக்டர் சுடப்பட்டபோது ஏன் தப்பித்துப் போகப் பார்த்தீர்கள்?''



''அதுதான் - அது ஒன்றுதான் நான் செய்த மாபெரும் தவறு. அந்த பரபரப்பில் கபூர் கையில் இருந்த துப்பாக்கியைப் பார்த்து என் புத்தி வேலை நிறுத்தம் செய்து விட்டது'' என்றேன்.

''இன்ஸ்பெக்டர்... இந்த வீட்டில் எனக்குத் தெரிந்து இவர் பணம் எதையும் பதுக்கி வைக்கவில்லை. இருந்தாலும் நீங்கள் சோதனை போட்டுப் பார்த்துக் கொள்ளலாம்...'' என்றாள், என் மனைவி முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டு.

போலீஸ் என் வீட்டை என் கண் முன்னே தலைகீழாகப் புரட்டியதுகூட எனக்கு வலிக்கவில்லை.

என் இனிய காதல் மனைவிக்கு என் மீது சந்தேகம் வந்து விட்டதே என்பதுதான் நெருப்பாய் சுட்டது.

என் வீட்டைப் புரட்டிப் போட்டுவிட்டு, காவல் துறையினர் கையை விரித்தனர். ''வீட்டில் வைக்காமல் வேறெங்கோ பணத்தை ஒளித்து வைத்திருக்கிறான்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

என் மனைவியையும், குழந்தையையும் ஏக்கத்துடன் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே நான் போலீஸ் ஜீப்பில் ஏறியதை அந்தத் தெருவே வேடிக்கை பார்த்தது.

என் மனைவி அழுகையுடன் கதவை அறைந்து சாத்தினாள்.

காவல் நிலையத்தில் களைத்துப் படுத்திருந்தேன்.

என்னிடம் இல்லாத பதிலைத் தேடி இன்ஸ்பெக்டர் கேள்விகளால் துருவித் துருவி சலித்துவிட்டார் அவரும்

ஓய்வெடுக்கிறார் என்று நினைத்தேன். அவருடன் பேசும் குரலைக் கேட்டதும் திடுக்கிட்டேன்.

வெங்கட்! இவன் எங்கு வந்தான்?

செவியைத் தீட்டிக் கொண்டு கேட்டேன்.

"மிஸ்டர் வெங்கட்... ஒருமுறை சொன்னால் உங்களுக்குப் புரியாதா? உங்கள் நண்பரை ஜாமீனில் விட முடியாது. ஜாமீனில் விடக்கூடாது என்பதற்காக நீதிமன்றத்திலேயே உத்தரவு வாங்கி விட்டோம்... இன்னும் சற்று நேரத்தில் கல்யாணை சப்ஜெயிலுக்கு மாற்றப் போகிறோம்..."

வெங்கட் மறுபடியும் கெஞ்சினான்.

இன்ஸ்பெக்டர் வெகு கோபமாக பதில் சொன்னார்.

கடைசியில் வெங்கட் தணிந்த குரலில், "அவனைப் பார்த்து நான்கு வார்த்தை பேசவாவது அனுமதிப்பீர்களா, இன்ஸ்பெக்டர்?" என்று கேட்டான்.

"அதுகூட அனுமதிக்கக்கூடாது... போய் சுருக்கமாகப் பேசிவிட்டு நூறு எண்ணுவதற்குள் திரும்பி வந்து விடுங்கள்."

வெங்கட் என்னை அடைத்திருந்த இடத்திற்கு வந்தான். சிறைக் கம்பிகளைப் பிடித்தான். அவன் கண்களிலிருந்து கண்ணீர் கரகரவென்று கொட்டியது.

"உஷ்..." என்று அடக்கினேன். "நான் உன்னைப் பற்றி எதுவும் சொல்லவில்லை... நீயாக எதுவும் பேசி மாட்டிக் கொள்ளாதே" என்றேன், குரல் ஒலியை இறக்கி.



"கல்யாண்... என்னை மன்னித்துவிடு... காரை ஓட்டும் வேலை என்று மட்டும்தான் நானும் நினைத்திருந்தேன்... நான் ஓட்டிப் போயிருந்தால் நான் மாட்டியிருப்பேன்... எனக்கு பதிலாக நீ மாட்டிக் கொண்டாய்..."

"வெங்கட்... மெதுவாகப் பேசு... அந்த டேவிட்டிடம் நீ அதிகவனமாக இருக்க வேண்டும்... அத்தனை வேலைகளையும் செய்துவிட்டு வெகு இயல்பான குரலில் என்னையும், கபூரையும் கூட்டாளிகள் என்பது போல் அவன் சொல்லிவிட்டான் தெரியுமா?"

"டேவிட்டிற்குச் செல்வாக்கு இருக்கிறது, கல்யாண்... போலீசும் அவனுக்கு உடந்தையாக இருக்கிறது..."

"அதைவிடு... உன் மனைவி எப்படி இருக்கிறாள்? பிறந்தது ஆணா, பெண்ணா?" என்றேன்.

"பெண் குழந்தை. ரொம்ப அழகா இருக்கிறது... நீ மட்டும் எனக்கு உதவியிருக்கா விட்டால்..."

"பேசாதே... காவல் நிலையத்தில் சுவர்களுக்குக் கூட காது இருக்கும்... நீ போய்விடு வெங்கட். நான் கடவுள் அறிய நிரபராதி... அதனால் எப்படியும் எனக்கு நீதி கிடைக்கும்... அதிக நேரம் பேசிக் கொண்டிருந்தால் இன்ஸ்பெக்டர் உன்னையும் சந்தேகப்படப் போகிறார்..."

பிரிய மனமில்லாமல் வெங்கட் கண்ணீருடனேயே புறப்பட்டுப் போனான்.

அன்று மாலையே அவனைப் பற்றி சேதி வந்தது.

"உனக்கு ரொம்ப அதிர்ஷ்ட ராசிப்பா" என்றார் இன்ஸ்பெக்டர் கிண்டலாக. "உன்னை காலையில் வந்து பார்த்

தானே வெங்கட்... அவனை லாரி அரைத்து விட்டு போய்விட்டது...''

பதறி எழுந்தேன். "இன்ஸ்பெக்டர்! அது விபத்தில்லை... நிச்சயம் டேவிட் செய்த சதியாகத்தான் இருக்கும்...''

''நீ செய்த சதிக்கே இன்னும் விளக்கம் கொடுக்க வில்லை... இன்னொரு சம்பவத்தைப் பற்றி உனக்கென்ன சந்தேகம்?''

மவுனமாகக் கண்ணீர் விட்டேன்.

வெங்கட்... என்னைப் பார்த்துவிட்டுப் போனதால் உனக்கு ஆபத்து நேர்ந்துவிட்டதா? ஐயோ, எப்பேர்ப்பட்ட ராசியில்லாதவன் நான்!

காவல்துறையும், டேவிட்டும் சேர்ந்து என்னை பலி கடா ஆக்கப் பார்க்கிறார்கள் என்று எனக்குத் தோன்றியது.

சும்மா இருந்துவிட்டால் நான் பேடி அல்லவா?

எதிர்க்க வேண்டாமா?

தனியொரு மனிதன் இந்த அராஜகத்தை எப்படி எதிர்க்க முடியும்? பேசாமல் என் குடும்பத்தோடு நான் எங்காவது தலைமறைவாகி விட்டால்? கள்ளத் தோணி ஏறி வேறு நாட்டிற்குப் போய் விட்டால் ஆயிற்று!

இந்த எண்ணம் தோன்றியதிலிருந்து எப்படியாவது போலீஸிலிருந்து தப்பிக்க வேண்டும் என்று தீர்மானித் தேன்.

மறுநாள் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்துப் போக சிறைச் சாலைக்கு போலீஸ் ஜீப் வந்தது.

ஜீப்பில் இரண்டு காவலர்களுக்கிடையில் நான் உட்கார வைக்கப்பட்டிருந்தேன்.



வாய்ப்புக்காகக் காத்திருந்தேன்.

வாய்ப்பு வழுக்கிக் கொண்டு வந்தது.

நீதிமன்றம் போகும் வழியில் சிவப்பு விளக்கை மதித்து ஒரு நாற்சந்தியில் நின்றிருந்தபோது, எதிர்ப் புறத்திலிருந்து தாறுமாறாக வந்த ஒரு வேன் எங்கள் ஜீப்பை மோதியது. ஜீப்புக்குள் இருந்தவர்கள் குலுக்கப் பட்டோம். அந்தச் செயலில் காவலர்கள் தடுமாறி விழுந்தார்கள். என் மீது வைத்திருந்த பிடிப்பு நழுவிப் போனது மட்டும் அல்லாது, அத்தனை காவலரும் மோதிய வேன் டிரைவருடன் சச்சரவில் இறங்கி கவனம் பிசகியிருக்க -

ஜீப்பிலிருந்து குதித்து இறங்கினார்கள்.

தடதடவென்று ஓட ஆரம்பித்தேன்.

காவலர்கள் அதை சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. அவர்கள் சுதாரித்து என்னைப் பின் தொடர முடிவு செய்யும் முன், அந்தத் தெருவின் திருப்பத்திற்குப் போய் விட்டேன்.

அங்கேதான் என் துர் - ராவி மறுபடி வேலை செய்தது.

காவலர்களைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே ஓடியதில் திருப்பத்தில் சடாரென்று வந்து சேர்ந்த காரை நான் பார்க்கத் தவறி விட்டேன்.

நான் தவறு உணரும்முன், அந்தக் காரின் டிரைவர் தவறு உணரும்முன், கார் மீது நான் மோதினேன். என் மீது கார் மோதியது.

மோதிய வேகத்தில் நான் சுழன்று எழுந்து காரின் கண்ணாடிகளை உடைத்துக் கொண்டு வீழ்ந்தேனே.

கார்க் கண்ணாடி கிழித்த பகுதிகளில் இரத்தம் குபுகுபு வென்று கொட்ட ஆரம்பித்தது. அதுகூடப் பரவாயில்லை. கண்ணாடிக் குவியலிலிருந்து நான் எழுந்தபோது, என் மீது தாவி அழுத்திப் பிடிக்க காவலர்கள் வந்து சேர்ந்து விட்டனர்!

இரண்டு முறை நான் தப்பிக்கப் பார்த்ததை நீதிபதி மிகவும் கண்டித்தார். என்னை பலத்த காவலில் வைக்க உத்தரவிட்டார்.

வெங்கட் வந்து கதவைத் தட்டிய அந்த இராத்திரிப் பொழுதிலிருந்து என் வாழ்க்கையே எப்படித் தடம் புரண்டு விட்டது?

கார்க் கண்ணாடி தாறுமாறாகக் கிழித்த கன்னப் பகுதி யில் பதின்மூன்று தையல் போட வேண்டியிருந்தது. அந்தத் தையல் அடையாளம் அப்படியே உருட்டையாய் ஒரு மரவட்டைப் புழு போல தங்கி விட்டது.

சேட்ஜி செல்வாக்குள்ளவர் போலிருக்கிறது. தினம் தினம் அவர் மகள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சேதி தினசரிகளில் பரபரப்பாகப் பேசப்பட்டது. என் புகைப்படம் மறுபடி மறுபடி வெளியானது.

என் மனைவி குழந்தையுடன் ஒரே ஒருமுறை சிறைச் சாலைக்கு வந்திருந்தாள். என்னைப் பார்த்ததும் வெடித்து அழுதாள். சற்று நேரம் அழுதபின் முகம் இறுக்கமானாள்.

''என்னால் தலை நிமிர்ந்து வெளியே நடக்க முடியல... கொலைகாரன் பொண்டாட்டின்னு ஊரே என் முதுகுல பேசுது... நான் போட்டிருக்கிற நகை, கட்டியிருக்கற



சேலை எல்லாமே நீங்க சேட்ஜிக்கிட்ட அடாவடித்தனமா வாங்கின பணத்துல வாங்கினதான்னு என் காதுபட பேசிக்கறாங்க... இனிமேலும் இந்த ஊர்ல என்னால தங்க முடியாது. நானும், குழந்தையும் போறோம்...''

''சசி... நீ சொல்றது சரிதான்... குழந்தையை எடுத்துக் கிட்டு பேசாம உங்கப்பா வீட்டுக்குப் போயிடு...''

''எங்கப்பா வீட்டுக்கா? எப்படிப் போக முடியும்? எந்த மூஞ்சியை வைச்சுக்கிட்டுப் போவேன்? உங்களைக் காதலிச்சபோது, அப்பா வேணாம், அம்மா வேணாம்னு அத்தனை உறவைட்யும் தூக்கி எறிஞ்சிட்டில்ல வந்தேன்? உங்ககூட வாழ்நாள் பூரா சந்தோஷமா இருக்கப் போறேன்னு நெனைச்சில்ல எல்லாரையும் உதறிட்டு வந்தேன்... எங்கே போகணும்னு எனக்குத் தெரியுங்க...'' என்று ஆவேசமாக கண்ணீரோடு சொல்லிவிட்டு அவள் போய் விட்டாள்.

என் மனதை ஒரு அரக்கக் கை பிசைந்தது. நான் செய்த தவறுக்கு என் மனைவியும், பிஞ்சுக் குழந்தையும் கூட அவமானப்பட்டு அசிங்கப்பட்டு.. ஐயோ... அவர்களை யாராவது தேற்றக்கூடாதா?

எங்கே போகணும்னு எனக்குத் தெரியும் என்று சசிகலா சொன்னாளே, என்ன அர்த்தம்?

என்ன அர்த்தம் என்று அன்று மத்தியானமே தெரிந்தது.

சிறைக் காவலர் என் அறைக்கு வந்தார்.

''உன்னை ஜெயிலர் கூட்டி வரச் சொன்னார்'' என்று அழைத்துப் போனார்.

எனக்கு விடுதலை தரப் போகிறார்களா?

ஜெயிலர் என்னைப் பார்த்த பார்வையிலேயே ஏதோ விபரீதம் நடந்து விட்டது என்று எனக்குப் புரிந்தது.

''உனக்கு மனைவியாக வாய்த்த பாவத்திற்காக, அவமானம் தாங்காமல் உன் மனைவி குழந்தையுடன் ரெயிலுக்கு முன் பாய்ந்து விட்டாள்.''

''ஐயோ!'' என்று அலறினேன்.

''போ... அரசாங்க மருத்துவமனையில் அவள் உடல் அடையாளம் காட்டப் போய்விட்டு வா...''

கதறினேன். 'நானும், குழந்தையும் போறோம்' என்றாயே, 'எங்கே போக வேண்டும் என்று எனக்குத் தெரியும்' என்றாயே, அதற்கெல்லாம் இதுதான் அர்த்தமா?

சசி, சசி, சசி...

மருத்துவமனையில் வெள்ளைத் துணி விலக்கி என் சசியின் சிதறுண்ட உடலைக் காட்டியபோது, எனக்குள் பூகம்பம் வெடித்தது.

ஆசை ஆசையாக நான் துரத்தித் துரத்திக் காதலித்த முகம் சின்னாபின்னமாகியிருந்தது. பார்த்தாலே எனக்குள் கிளர்ச்சி ஏற்படுத்தும் என் காதல் மனைவி இரத்தமும், சதையுமாக சிதைந்து போயிருந்தாள்.

''குழந்தை... என் குழந்தை எங்கே?'' என்றேன். என் மார்பில் போட்டுத் தூங்கப் பண்ணும் சாருக்குட்டியையும் இதே போல்தான் பார்க்க வேண்டுமா?

''குழந்தை அதிர்ஷ்டக் குழந்தை'' என்றார், அங்கிருந்த காவலர். ''தாயும் குழந்தையுமாக ரெயிலுக்கு முன் பாய்ந்



தாலும், குழந்தை தப்பி விட்டது. அதன் உடலில் ஒரு சிறு கீறல் கூட இல்லை... அம்மா செத்ததைப் பார்த்த அதிர்ச்சியிலிருந்துதான் அது இன்னும் மீளவில்லை.''

''எங்கே? என் குழந்தை எங்கே? அதை நான் உடனே பார்க்க வேண்டும்'' என்று துடித்தேன்.

''வேண்டாம்...'' என்றார், மருத்துவர். ''ஏற்கெனவே அம்மா செத்துப்போன அதிர்ச்சியில் இருக்கிறது குழந்தை. இப் போது உங்களைப் பார்த்தால், உங்களால்தான் அம்மா வுக்கு இந்த நிலைமை என்று நினைத்து விட்டால் அதற்கு அதிர்ச்சி அதிகமாகிவிடும்... வேண்டாம்...''

நெருக்கத்திற்குப் போகாமல் தொலைவிலிருந்தே பார்க்கிறேன் என்று கெஞ்சினேன்.

அனுமதித்தார்கள்.

என் சாருக்குட்டியை மருத்துவக் கட்டிலில் படுக்க வைக்கப்பட்டிருந்தது. கண்களை மூடியிருந்தது. திடீ ரென்று தூக்கி வாரிப் போட்டு அதன் உடல் நடுங்கியது.

கண்கள் எனக்குக் குளமாயின. சாரு... சாருக்குட்டி...!

''போகலாம்'' என்றேன்.

மருத்துவமனை விட்டு வெளியே வரும்போது, என்னுடன் வந்த காவலர் திடீரென்று நின்றார். மருத்துவ மனையில் பணிபுரிந்த ஒரு துப்புரவுப் பெண்ணிடம் பேசத் தொடங்கினார்.

அவர்களுக்குள் ஏற்கெனவே பழக்கம் இருக்க வேண் டும். அந்தப் பெண்ணின் கண்களில் தெரிந்த ஏக்

கமும், வெட்கமும், அந்தக் காவலர் கண்களில் தெரிந்த காமமும்...

எதுவானால் என்ன? அவர் கவனம் சிதறியிருந்தது.

இதைவிட ஒரு அருமையான வாய்ப்பு எனக்கு மறுபடி கிடைக்குமா என்ன?

சடாரென்று அவரிடமிருந்து விடுபட்டேன். ஓடினேன். எதிரில் வந்த டாக்டர்களை, நர்ஸ்களை எல்லாம் தள்ளி விட்டு ஓடி, காம்பவுண்டு சுவரை ஒரே முயற்சியில் தாண்டி...

தப்பித்துவிட்டேன்.

ஆம், தப்பித்தேவிட்டேன்.

காவல்துறையினர் என்னைத் துரத்தித் தேடி ஏமாந்து திரும்புவதை, பரபரப்பாவதையெல்லாம், நான் ஒளிந் திருந்த இடத்திலிருந்து பார்த்தேன்.

இப்பொழுது எனக்கு ஒரே ஒரு குறிக்கோள்தான்.

என் சாருக்குட்டியை எப்படியாவது கவர்ந்து எடுத்து, என்னுடன் எடுத்துப் போய்விட வேண்டும்.

நான் நினைத்த அளவிற்கு அது சுலபமான வேலையாக இருக்கவில்லை. தலைமறைவாய் இருந்து கொண்டு அவளை எப்படி நெருங்குவது? நான் எப்படியும் என் மகளைத் தேடிவருவேன் என்று எதிர்பார்த்து அவளைச் சுற்றி எப்போதும் காவல் இருந்தார்கள். அவளை என்னால் நெருங்கவே முடியவில்லை.

மூன்று நாட்களுக்குப் பிறகு மருத்துவமனைக்கு நான் போனபோது ஒரு மருத்துவரின் உடையில் நுழைந்தேன்.



என் முகத்தில் பெரிய மீசை ஒட்டி, அறுவை சிகிச்சை செய்பவர்களுக்குரிய பச்சை குல்லா போட்டு, முகமூடித் துணியை அவிழ்த்து விட்டபடி போனேன். என்னை யாருக்கும் அடையாளம் புரியவில்லை.

காவலர்களைக்கூட ஏமாற்றிவிட்டு என் மகள் இருந்த அறைப்பக்கம் போனேன்.

கட்டில் காலியாக இருந்தது.

என் படபடப்பை அடக்கிக்கொண்டு அங்கு வந்த நர்ஸிடம் இயல்பான குரலில் விசாரித்தேன்.

''ஓ... அந்தப் பெண்ணா? அவளுக்கென்ன மூன்று வயதுக்குள் இருக்குமா? அதற்குள் அம்மாவும் இறந்து விட்டாள். அப்பனும் போலீஸுக்கு பயந்து ஓடிவிட்டான்.''

''அப்புறம் அந்தப் பெண் குழந்தையை என்ன பண் ணினார்கள்?'' என் குரலில் இயல்பு குறைந்து படபடப்பு எட்டிப் பார்த்தது.

''இவளைப்போல அநாதரவாக விடப்படும் பெண் குழந்தைகளை எடுத்து பராமரிப்பதற்காகவே இங்கு ஒரு பெண்கள் இல்லம் இருக்கிறதே... தெரஸா இல்லம் என்று! அதில் அந்தக் குழந்தையை சேர்த்து விட்டார்கள்.''

நன்றி சொல்லிவிட்டு நகர்ந்தேன்.

யோசித்தேன். சாருக்குட்டி அநாதையாய் நடுத்தெரு வுக்கு வந்துவிடவில்லை. பொறுப்பான கைகளிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறாள். அவள் அங்கு இருப்பது தான் நல்லது. காவல்துறைக்கு பயந்து ஓடிக் கொண் டிருக்கும் என்னுடன் அவளை எடுத்துப் போனால் அவள்

எதிர்காலம் பாழாகும். அவள் இங்கேயே இந்த தெரஸா இல்லத்திலேயே வளரட்டும். முதலில் 'என்னை நிலைப் படுத்திக்கொண்டு அதற்குப் பின் அவளை மீட்டுப் போகலாம் என்று முடிவு செய்தேன்.

மகளையும் சேர்த்து சுமக்க வேண்டாம் என்று சுதந் திரம் கிடைத்ததும் என்னுள் வேறொரு எண்ணம் முளை விட்டது.

என் அற்புதமான குடும்பம் அழிந்து சிதறிப் போவதற்கு யார் காரணம்? என் நண்பன் வெங்கட் நடுச்சாலையில் லாரியில் அரைபட்டு இறப்பதற்கு யார் காரணம்? என் மனைவி ரெயில் முன் விழுந்து தற்கொலை செய்து கொள்ள யார் மூலகாரணம்?

எல்லாக் கேள்விகளுக்கும் ஒரே பதில்தான்:

டேவிட்!

டேவிட், நீ அரக்கனாய் இருக்கலாம். ஆனால் அரக் கர்களையும் அழித்து உலகிற்கு நல்லது புரிய புதிய அவதாரங்கள் தோன்றுவதுண்டு.

உன்னை அழிப்பதற்காக அவதாரம் எடுத்துள்ளவன் இந்த கல்யாண்!

சந்திக்கிறேன்... விரைவிலேயே உன்னை சந்திக் கிறேன்!

என்னைப் பற்றி தொலைக்காட்சியிலும், செய்தித் தாள்களிலும் செய்திகள் வந்துகொண்டேயிருந்தன.

என் புகைப்படங்களிலும், என்னைப் பற்றிய அடை யாளங்களிலும் என் முகத்தில் உருவாகிவிட்ட பெரிய



மருத்துவத் தையலை மறக்காமல் குறிப்பிட்டார்கள். இன்ஸ்பெக்டர் கொலை வழக்கில் தேடப்படும் குற்ற வாளி, இவரைப் பற்றிய தகவல் கொடுத்தால் இத்தனை ஆயிரம் பரிசு என்றெல்லாம் அறிவிப்பு செய்தார்கள்.

என் நடமாட்டத்தைக் குறைத்துக் கொண்டேன்.

டேவிட்டின் அன்றாடங்களை மட்டும் தவறாமல் கவனித்தேன்.

அவனுடைய பலவீனத்தைப் புரிந்து கொண்டேன்.

தினமும் மாலை வேளையில் அவன் தன் பட்டரையி லிருந்து புதிய கார் ஒன்றை எடுத்துக் கொண்டு ஏரிக் கரைக்குத் தனியாக வருவது வழக்கம். ஏரிக்கரையில் அடர்ந்த மரங்களுக்குக் கீழ் தன் காரை நிறுத்திவிட்டு மரங்களுக்கிடையில் காணாமல் போய்விடுவான்.

மரங்களின் மறைவில் நின்று அவன் பைனாக்குலரால் அந்தப் பரந்த ஏரியின் இன்னொரு கோடி மூலையை கவனிக்கிறான் என்பதை அறிந்தேன். ஒரு தொலை நோக்குக் கருவியை நானும் பயன்படுத்தியபோது ஏரியின் மறுகோடியில் ஆழம் குறைந்த பகுதியில் அந்நேரத்தில் பெண்கள் பலர் இடுப்பில் மட்டும் துணி கட்டிக் குளிப் பதை கவனிக்க முடிந்தது.

அவனுடைய வக்கிர புத்தியே அவனுக்கு எமனாகப் போகிறது என்று தெரியாமல் அவன் அங்கு ஒவ்வொரு மாலையிலும் துணையின்றி தனியாகவே வந்தான். பெண்களைக் கண்டு ரசித்தான்.

ஒரு நவீன இறக்குமதிக் காரை அவன் எடுத்து வந்த தினத்தில் செயல்பட்டேன்.

பைனாக்குலரில் ஒய்யாரமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த டேவிட் திடீரென்று பின்புறமிருந்து கழுத்தில் ஒரு துணி வளையம் விழுந்ததும் அதிர்ந்து திரும்பினான்.

கையில் தயாராய் வைத்திருந்த மருந்தை அவன் முகத்தில் பீய்ச்சி அடித்தேன்.

மிக சக்தி வாய்ந்த மயக்க மருந்து.

அதன் நெடியை சுவாசித்து விடாமல் இருக்க என் மூக்கை மறைத்து துணி கட்டியிருந்தேன்.

டேவிட் கண்கள் அகலமாயின. என்னைத் திடுக்கிட்ட பார்வை பார்த்துக் கொண்டே கீழே சரிந்தான்.

மண்டியிட்டு அமர்ந்தேன். அவன் காலணிகளைக் கழற்றினேன். என் கால்களில் அணிந்து கொண்டேன்.

மயக்கப் புகை தவிர, ஒரு ஊசியும் கொண்டு வந்திருந்தேன். அந்த ஊசியில் இருந்த மருந்து சற்று வலிமையான தூக்க மருந்து.

வலிமிகுந்த அறுவை சிகிச்சைகளுக்குப் பிறகு நோயாளிகளுக்குப் போடுவது. அந்த ஊசியை அவன் புஜத்தில் செருகி, மருந்தை அவன் இரத்தக் குழாய்க்குள் செலுத்தினேன்.

இனி பூகம்பமே வெடித்தாலும் அடுத்த சில மணி நேரங்களுக்கு அவன் கண் திறக்கமாட்டான். கண் திறந்தாலும், மூளை சோம்பலாய் மரத்துப் போயிருக்கும். எந்த அங்கமும் செயல்படாது.

அவனைத் தரையோடு இழுத்தால் அது ஒரு அடையாளம் விட்டு வைக்கும் என்பதால் அந்த ஆறடி



உடலை மிகுந்த சிரமத்துடன் கைகளில் தூக்கிக் கொண்டேன்.

ஏரிக்கரையின் விளிம்பிற்கு நடந்தேன்.

அங்கு அவனை நிமிர்த்தி நிற்க வைத்தேன். காரை விளிம்பில் சற்றே ஈரம் பூந்த மண்ணில் அவனுடைய காலணிகள் அழுத்தமாக அடையாளம் பதிக்கும்படி அழுத்தினேன். அந்த காலணிகளை அவனுக்கு மாட்டி ஏரிக்கரையில் சரிவில் அவனைத் தேய்த்து உருட்டினேன்.

ஏரித் தண்ணீருக்குள் அவன் வழுக்கிக்கொண்டு கவிழ்ந்தான். அவனுக்கு நீச்சல் தெரிந்திருந்தாலும், மயக்கத்தின் ஆதிக்கத்தில் அவன் கைகள், கால்கள் இயங்காது.

போலீசைப் பொறுத்தவரை, காலடித் தடங்களை வைத்து ஏரிக்கரை விளிம்புவரை அவன் நடந்து வந்தான். விளிம்பில் கால் சறுக்கி ஏரியில் விழுந்து விட்டான் என்று நினைப்பார்கள்.

டேவிட்... என் நண்பன் லாரி முன் விழுந்தான். என் மனைவி ரெயில் முன் விழுந்தாள். நீ ஏரியில் மூழ்கி அதற்கு பதில் சொல்லப் போகிறாய்.

குட்பை டேவிட்!

மரங்களுக்கு இடையில் நின்றிருந்த காரை அப்போது தான் கவனித்தேன்.

அந்த நவீன இறக்குமதிக் காரின் மதிப்பு சுமார் பன்னிரண்டு லட்சம்!

இவ்வளவு மதிப்புள்ள பொருளை இங்கே அநாதையாக நிறுத்தி விட்டுப் போவதா?

காரிலேயே அதை இயக்கும் சாவி இருந்தது.

காரை ஒய்யாரமாக ஓட்டிப் போனேன்.

திருட்டுக் கார்களை வாங்கிப் பிரித்து உதிரி பாகங் களாக கொழுத்த லாபத்திற்கு விற்கும் சிலரை எனக்குத் தெரியும்.

அதில் ஒருவனைத் தேர்ந்தெடுத்தேன். கார் கைமாறியது. இரண்டு லட்சம் என் கைக்கு வந்தது.

என் அடுத்த இருப்பிடம் மும்பை.

கள்ள பாஸ்போர்ட்களும், கள்ள விசாக்களும், கள்ளப் பணமும் கள்வர்களும் பெரிதும் புழங்கும் மாநகரம்.

அங்கு சுலபமாய் காணாமல் போனேன்.

நாற்பதாயிரம் ரூபாய்க்கு ஒரு டாக்டரை விலை பேசி னேன். திறமையுள்ள காஸ்மடிக் சர்ஜன்.

அழகு அறுவை சிகிச்சை நிபுணர். என் பணத்திற்கு வாங்கப்பட்டது - அவர் திறமை.

என் முகத்தில், தூரத்திலிருந்து பார்த்தாலே காட்டிக் கொடுக்கக் கூடிய அடையாளம் அந்த மருத்துவ தையல்.

அதை நீக்கச் சொன்னேன். அது தவிர என் மூக்கின் வடிவத்தையும் சற்று மாற்றி என் முகத் தோற்றத்தையே மாற்றச் சொன்னேன்.

மும்பையின் இரண்டாம்தர நடிகைகளுக்கு அறுவை சிகிச்சை செய்து பழக்கப்பட்ட நிபுணர் அவர். என் முகத் தோற்றத்தை நிறைய மாற்றிக் கொடுத்தார்.

கிட்டத்தட்ட நான்கு வாரங்களுக்குமேல் இந்த காரி யத்திற்காக செலவாயிற்று.



அப்புறம் இன்னும் கொஞ்சம் பணம் செலவு செய் ததும், எனக்கு ஒரு போலி பாஸ்போர்ட் புதிய முகத்துடன் கிடைத்தது.

துபாயில் நான் போய் செட்டிலாகிவிட ஒரு ஏஜண்ட் மூலம் ஏற்பாடு செய்துகொண்டேன்.

நேரா தெரஸா இல்லத்திற்குப் போய் என் மகளை மீட்டுக் கொண்டு நான் வெளிநாடு புறப்பட வேண்டியது தான் பாக்கி.

மீண்டும் யமுனாபுரிக்குப் பயணமானேன்.

கல்யாண் என்ற என் பெயரை உதிர்த்து விட்டேன். இப்போது நான் சூர்யகுமார்.

யமுனாபுரியில் இன்னும் என்னைப் பற்றிய பேச்சு நடமாடிக் கொண்டிருந்தது. யமுனா என்ற பெண்ணை கடத்திக் கொன்றவன், இன்ஸ்பெக்டரைக் கொன்றவன்... டேவிட்டை ஏரியில் தள்ளியவன் என்று மூன்று குற்றங் களுக்காக நான் தேடப்படுவதாக அறிந்ததும் அதிர்ந்தேன்.

டேவிட் இறந்தது ஒரு விபத்து போல் தோற்றமளிக்கும் என்று நினைத்தேனே, அவன் மரணத்தில் எனக்குள்ள தொடர்பு எப்படி வெளியாயிற்று? நான் நினைத்ததை விட போலீஸ் புத்திசாலித்தனமானது என்று புரிந்து கொண் டேன்.

தெரஸா இல்லத்தில் இருக்கும் அநாதரவான குழந்தை களை, குழந்தைப் பேறு இல்லாதவர்கள் வந்து தத்தெடுத்துப் போவதுண்டு.

சூரியகுமாராக அங்கு போய் துபாய் செல்ல விருப் பத்தை சொல்லி ஒரு குழந்தையை தத்தெடுத்துக் கொள்ள

விரும்புவதாகச் சொன்னேன். எல்லாக் குழந்தைகளையும் பார்வையிட்டுவிட்டு, வெகு இயல்பாக எதேச்சையாக என் மகள் சாருக்குட்டியைத் தேர்வு செய்வதாகக் காட்டிக் கொள்ளத் திட்டமிட்டிருந்தேன்.

குழந்தைகளை ஒவ்வொன்றாகப் பார்வையிட்டேன்.

என் கண்கள் பரபரப்பாகத் தேடின.

எங்கே? எங்கே? என் சாருக்குட்டி?

அந்தக் குழந்தைகள் மத்தியில் என் செல்லக்குட்டியைக் காணவில்லை.

அவளைப் பற்றிக் குறிப்பிட்டு கேட்டால் நான் மாட்டிக் கொள்வேன்.

ஒருவேளை எனக்கு வலை விரிப்பதற்காக அவளை ஒளித்து வைத்திருக்கிறார்களோ?

''இவ்வளவு குழந்தைகள்தானா? இன்னும் இருக் கிறதா?'' என்று கேட்டேன்.

''ஏன் சார்? இந்தக் குழந்தைகளில் எதுவும் பிடிக்க வில்லையா?''

''அப்படியில்லை... இங்கிருக்கும் அத்தனைக் குழந்தை களும் அழகாய் இருக்கின்றன. எல்லோரையும்கூட தத்தெடுக்கலாம்... ஆனால் என் மனைவி முதல் பிரச வத்தில் பிறந்த மகள் நினைவாக சில குறிப்புகள் சொல்லி யிருந்தாள். அந்த மகள் அப்புறம் இறந்து விட்டாள். அதனால் அவள் சாயலில் இருந்தால் நலம் என்று பார்த்தேன்...''



''அந்தக் குறிப்புகளைச் சொல்லுங்கள் சார்... எந்தக் குழந்தைக்குப் பொருத்தமாயிருக்கிறது என்று பார்ப் போம்...''

''இதோ இந்த உயரம் இருக்க வேண்டும். தலைமுடி சுருள் சுருளாக இப்படித் தோள் வரை வழிய வேண்டும். பெரிய கண்கள். செழித்த கன்ன மேடுகள்... இடது கன்னத்தில் உதட்டுக்கு மேலே ஒரு பழுப்பு மச்சம்...''

''நீங்கள் சொல்லும் அத்தனை அடையாளங்களுக்கும் பொருத்தமாயிருப்பவள் சாருமதி என்ற குழந்தைதான்...''

''சாருமதி... சாரு... மதி... பெயர்கூட எனக்குப் பிடித் திருக்கிறது. அந்தக் குழந்தையை நான் பார்க்கலாமா?'' என்றேன், என் பரபரப்பை வெளியே காட்டாமல்.

''முடியாது, சார்... சாருமதியை நீங்கள் பார்க்க முடியாது...''

''ஏன்?'' - என் சாருக்குட்டிக்கு என்ன ஆயிற்று?

''ஏனென்றால், சென்ற வாரம் வேறொரு தம்பதி அந்தக் குழந்தையைத் தத்தெடுத்துச் சென்று விட்டார்கள்...''

இடி இறங்கினாற்போலிருந்தது எனக்கு.

''சென்ற வாரமா? வேறொரு தம்பதியா...? யார்... யாரது என்று சொல்ல முடியுமா?''

ரிஜிஸ்தர் பார்த்துச் சொன்னார்கள்.

கிருஷ்ணகுமார்,

3/42, பராசக்தி நகர்,

சென்னை - 90.

அவர்களுக்கு நன்றி சொன்னேன். என் மனைவியைக் கலந்து ஆலோசித்துவிட்டு, வேறொரு குழந்தையைத் தேர்வு செய்வதாகச் சொல்லி அங்கிருந்து வெளிப்பட்டேன்...

## 6



வெளியே வானை ஒரு மின்னல் கிழித்தது. அந்த அறை சற்று நேரம் அமைதியாக இருந்தது.

கல்யாணிடமிருந்து ஒரு பெருமூச்சு விடுபட்டது.

“இப்போது சொல், நான் குற்றவாளியா, நிரபராதியா?”

“இரண்டும் இல்லை” என்றான், அரவிந்தன். நாற்காலியில் சற்றே அசைந்தான். கைகள் கட்டப்பட்ட நிலையில் அப்படி அசைந்ததும் கூட வலித்தது. “நீ அவசரக்காரன்! அப்படி இல்லாது இருந்தால், நிரபராதி என்று நிரூபித்திருக்கலாம்...” என்றான், அரவிந்தன்.

கல்யாண் சிரித்தான். “செல்வாக்குள்ள மனிதர்கள் கைகளில் நீதி சிக்கியிருக்கிறது. இங்கே நிரபராதி என்று நிரூபிக்க எனக்கு வாய்ப்பு இல்லை. ஆனால், டேவிட் இறந்து போனதை எப்படி என் மீது சுமத்தினார்கள். என்பது தான் ஆச்சரியமாயிருக்கிறது...”



“பஞ்சாப் போலீஸை நீ அவ்வளவு தூரம் முட்டாள்களாக நினைத்திருக்கக்கூடாது, கல்யாண்... நீ டேவிட்டின் ஷூக்களை அணிந்து, தடம் பதித்ததால் மட்டும், டேவிட் அங்கே நடமாடியதாக நினைக்க முடியாது. ஷூக்கள் மிக அழுந்தப் பதிந்திருந்த அடையாளத்தை வைத்து, அது டேவிட்டின் பாரத்தைவிடக் கூடுதலான பாரத்தால் ஏற்படுத்தப்பட்டது என்று புரிந்துகொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை, அவர்களுக்கு. அவன் ஓட்டிவந்த காரையும் அங்கே காணவில்லை... அதையெல்லாம்விட சுலபமான தடயங்கள் அவன் உடலிலேயே கிடைத்தது. இரத்தத்தில் கலந்திருந்த மயக்க மருந்து, ஊசி குத்தப்பட்ட அடையாளம்... டேவிட்டின் மரணத்திற்கு இன்னொரு நபர் காரணம் என்று புரிவது கஷ்டமில்லை... அந்த இன்னொரு நபர் உன்னைத் தவிர வேறு யாருமில்லை...”

“எந்த மனித உயிரையும் நீக்குவதற்கு இன்னொரு உயிருக்கு அதிகாரம் கிடையாது, கல்யாண்...”

“இனிமேல் என்னை கல்யாண் என்று கூப்பிடாதே... நான் சூர்யகுமார். அரபு நாடுகளுக்குப் புறப்பட்டுப் போகும் இளம் விஞ்ஞானி... என் பாஸ்போர்ட்டும், விசாவும் அப்படித்தான் சொல்கின்றன... எனக்கு இப்போது ஒரே ஒரு உதவிதான் தேவை...”

“என்ன?”

“சென்னையில் என் குழந்தையைத் தேடி நான் இன்று மாலை பராசக்தி நகருக்குப் போனேன்... ஆனால் என் குழந்தையைத் தேடி வருவேன் என்று எப்படியோ மோப்பம் பிடித்து அங்கே போலீஸார் நிறுத்தப்பட்டிருந்தார்கள்... மெதுவாகத் திரும்பிவிட்டேன்...”

அரவிந்தன் ஹா... ஹாவென்று வாய்விட்டுச் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"நான்தான் சொன்னேனே... நீ மட்டும் தானாக வந்து உன்னை அறிமுகம் செய்துகொள்ளவில்லை என்றால், உன்னை யாருக்கும் அடையாளமே புரிந்திருக்காது... நீ பராசக்தி நகரில் பார்த்த போலீஸ்காரர்கள் உனக்காகக் காத்திருக்கவில்லை..."

"பின்னே?"

"அந்த பராசக்தி நகர் வீட்டை இன்று போலீஸ் முற்றுகையிட்டிருக்கிறது... அங்கிருக்கும் ஒரு சதிகாரக் கும்பலை வளைத்துப் பிடித்தோம்... அது பற்றித்தான் நீ தொலைக்காட்சி செய்தியில் பார்த்தாய்... சத்யமூர்த்தி, காசி, நிர்மலா என்று ஒரு கூட்டமே அங்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது... பெண்களை ஏமாற்றி நீலப்படம் எடுப்பதும், பெண் குழந்தைகளை தத்து எடுப்பதாகச் சொல்லிக் கூட்டி வந்து வெளிநாடுகளுக்கு விற்பதும் அவர்களுடைய வாடிக்கை. கிருஷ்ணகுமார் தம்பதி என்ற பொய்ப் பெயரில் அவர்கள் வெவ்வேறு மாநிலங்களிலிருந்து பெண் குழந்தைகளைத் தத்தெடுத்திருப்பது எங்களுக்குத் தெரிய வந்துள்ளது. அப்படி மீட்கப்பட்ட குழந்தைகளில் ஒன்று உன் குழந்தை சாருக்குட்டி..." என்றான், அரவிந்தன்.

"ஐயோ!" என்றான், கல்யாண். அவன் உடல், தட தடவென்று நடுங்கியது. "என்னது? என் சாருக்குட்டியை



வெளிநாட்டிற்கு விற்கப் பார்த்தார்களா? என் குழந்தை... என் குழந்தை... இப்போது பத்திரமாக இருக்கிறதா?"

"பத்திரமாக இருக்கிறது. மீட்கப்பட்ட அத்தனைக் குழந்தைகளுமே இங்கு ஒரு குழந்தைகள் இல்லத்தில் தான் விட்டு வைக்கப்பட்டிருக்கிறார்கள்."

"உண்மையில் உன்னையும் உன் மனைவியையும் கடற்கரையில் பார்த்ததும் நான் மகிழ்ந்தேன், அரவிந்த். பராசக்தி நகருக்கு என்னால் போக முடியவில்லையென்றாலும், உங்கள் இருவரையும் தம்பதிகளாகப் போய் என் குழந்தையைத் தத்தெடுப்பதாக எப்படியாவது வாங்கிவரச் சொல்லலாம் என நினைத்தேன்..."

"வாங்கி வந்து?"

"என்னுடன் அரபு நாட்டிற்கு எடுத்துப் போவேன்..."

அரவிந்த் சிரித்தான். "குழந்தைக்கு பாஸ்போர்ட்? விஸா? அப்படியே அடியில் வைத்துக் கட்டிப் போய் விடலாம் என நினைத்தாயா?"

"இதைப்பற்றியெல்லாம் நான் யோசிக்காமல் இல்லை, அரவிந்த். குழந்தையையும் என் பாஸ்போர்ட்டில் சேர்க்க முடியும். அதை சட்ட ரீதியாக என் குழந்தையாக்கிக் கொண்டேன்... போலி பாஸ்போர்ட் தயாராகும் இடத்தில் இதற்கு மட்டும் வசதி இல்லையா என்ன?"

"கல்யாண்... குற்றத்திற்கு மேல் குற்றமாக ஏன் அடுக்குகிறாய்?"

"எனக்கு வேறு வழி என்ன இருக்கிறது, அரவிந்த்? நல்லவனாய் இருந்தவரை எனக்கு என்ன கிடைத்து

விட்டது? என் மனைவியுடனும், என் குழந்தையுடனும் அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்தவனுக்கு இந்தத் துன்பங்கள் ஏன் வரவேண்டும்? பொல்லாதவனாய் இருந்தால்தான் இன்றைய தேதியில் பிழைக்க முடியும்...''

''யமுனாவின் கடத்தலில் உனக்குப் பங்கு இல்லை என்று நம்புகிறேன்... இன்ஸ்பெக்டரை கபூர் கொன்ற போது, அதற்கு எந்த விதத்திலும் நீ உடந்தையில்லை என்பதையும் நம்புகிறேன். ஆனால், டேவிட்டை தண்ணீரில் மூழ்கடித்துக் கொன்றது குற்றமில்லையா? தலைமறைவாய் இருப்பது குற்றமில்லையா? டேவிட் ஓட்டி வந்த காரைத் திருடிப்போய் உதிரி பாகங்களாக விற்றது குற்றமில்லையா?''

''வேண்டாம்... அடுக்காதே... குற்றங்கள் செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை... அது இப்போது என் தொழில் தர்மம்...''

''என்னது?''

''அரவிந்த்... நீ போலீஸ்காரன். உன் நெருங்கிய நண்பனிடமே வேறு வேலை பார்ப்பதாகப் பொய் சொன்னாய். என்னை ஏமாற்றி போலீஸில் பிடித்துக் கொடுக்க சதி செய்தாய். உண்டா, இல்லையா? அது உன் தொழில் தர்மம்... இங்கிருந்து என் குழந்தையுடன் தப்பித்துப் போவது என் தொழில் தர்மம்...''

''தப்பிக்க முடியாது, கல்யாண்... அந்த எண்ணத்தை மாற்றிக்கொள்...''

''முடியாது என்ற எண்ணத்தை நீ மாற்றிக் கொள், அரவிந்த்'' என்று சிரித்தான் கல்யாண். ''இது லைசன்ஸ்



இல்லாத துப்பாக்கி. ஆனால் இந்தத் துப்பாக்கியால் சுட்டாலும் உயிர் போகும் என்பது உனக்குத் தெரியும்... உன் ஆசை மனைவியை நீ இழக்க விரும்பமாட்டாய் என்பது எனக்குத் தெரியும்...''

''என்ன செய்யத் திட்டமிடுகிறாய், கல்யாண்?''

கல்யாண் பதில் சொல்வதற்குள் அவனிடமிருந்த செல்லுலார் போன் ஒலித்தது.

அரவிந்தனின் போன்.

கல்யாண் அதை எடுத்தான். பொத்தானை அழுத்தி எந்த எண்ணிலிருந்து போன் வந்திருக்கிறது என்று பார்த்தான். அது இன்னொரு செல் போன் எண்.

வெளியே பெரிதாக இடி இடித்தது. மழைக்கான ஆயத்தங்களை வானம் உறுமித் தயார் செய்தது.

கல்யாண் அந்த செல்போனுடன் அரவிந்தனை நெருங்கினான்.

''போனில் நீ பேசவே இல்லை என்றால் அவர்களுக்கு சந்தேகம் வரலாம். பேசு... ஆனால் நீ இப்போது பிஸியாக இருப்பதாகச் சொல். உன்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என சொல்... அதிகம் பேசாதே'' என்றான். துப்பாக்கி முனையை அரவிந்தனின் நெற்றியில் பதித்து, போனை அவனே பிடித்தான்.

''ஹலோ, அரவிந்த்'' என்றது மறுமுனை.

''யெஸ்...''

''உன் வீட்டுத் தொலைபேசி வெகு நேரமாக வேலை செய்யவில்லையே...''

குரலை அரவிந்தனுக்கு அடையாளம் புரிந்தது. அவனுடன் பணிபுரியும் சக இன்ஸ்பெக்டர் சம்பத்குமார்.

''ஆம்... தொடர்பு அறுந்து விட்டது.''

''உன் குரலைப் பார்த்தால் நீ ஏதோ ஆபத்தில் சிக்கியிருக்கிறாய் போலிருக்கிறதே...''

''ஆமாம்...'' என்றான், அரவிந்தன். ''இப்போது பேச நேரமில்லை... பிறகு பேசுவோம்...''

கல்யாண் பட்டனை அழுத்தி அந்தத் தொடர்பையும் துண்டித்தான்.

''பேசியது யார்?'' என்றான்.

''கார் மெக்கானிக்... வண்டியை சர்வீஸிற்கு அனுப்ப வேண்டும்... எப்போது வந்து எடுத்துப் போகட்டும் என்று கேட்டான்...''

வெளியே இடி தடதடவென்று இறங்கியது. காற்று ஆவேசமாக வீசியது.

பலத்த மழை பெய்யப் போகிறது என்ற அறிகுறி தெரிந்தது.

அரவிந்தன் யோசித்தான்.

சம்பத்குமார் புத்திசாலி. போனில் கிடைத்த தகவல் வைத்து அவன் அரவிந்தன் ஆபத்தில் இருப்பதைப் புரிந்து கொண்டிருப்பான். ஆனால் அவன் அவசரப்பட்டு ஏதாவது செய்து கல்யாணின் கோபத்தைத் தூண்டி விட்டு விட்டால், அவன் மனைவிக்கு ஆபத்து!

கல்யாண் மறுபடி தன் நாற்காலியில் சென்று அமர்ந்தான். இந்திரா நாற்காலியில் ஒடுங்கி உட்கார்ந்திருந்தாள். ஓரங்குலம் கூட அசையவில்லை.



கல்யாண் துப்பாக்கியால் தன் முகவாயை சொரிந்து கொண்டான்.

''அரவிந்த்... எப்போது என் சாருக்குட்டி எனக்குக் கிடைப்பாள்?''

அரவிந்தன் அவனை ஆழமாகப் பார்த்தான். கல்யாணைப் பார்க்கப் பார்க்க அவனுக்கு பாவமாய் இருந்தது. அவனை யறியாமலேயே ஒரு சுழலில் சிக்கிக் கொண்டு எங்கெங்கோ அலைக்கழிக்கப்பட்டு, உடலும், மனதும் இறுகிப் போய் கடினமானவனாகி...

''கல்யாண்... நான் இன்ஸ்பெக்டராகப் போகாமல், உன் நண்பன் அரவிந்தனாக சில விஷயங்கள் சொன்னால் கேட்டுக் கொள்வாயா?'' என்றான்.

கல்யாண் அவனை நிமிர்ந்து பார்த்தான். ''சொல்'' என்றான்.

## 7



''அரவிந்த்... நன்றாக யோசித்துப் பார்... என் நிலைமையை முழுவதும் புரிந்துகொள்... அப்புறம் சொல்ல வேண்டியதைச் சொல்'' என்றான், கல்யாண்.

''யோசித்துப் பார்க்க வேண்டியவன் நீதான், கல்யாண்'' என்றான், அரவிந்தன்.

''உன்னுடன் அழைத்துப் போவதால் உன் குழந்தையின் எதிர்காலம் என்ன ஆகும் என்று நீதான் யோசித்துப் பார்க்க வேண்டும்.''

''என்ன ஆகும்?''

''வாழ்நாள் முழுவதும் போலீஸிற்கு பயந்து தலைமறை வாய் செயல்படும் ஒரு அப்பனுக்குக் கீழ் ஒரு மகள் எப்படி வளர முடியும்? ஒரு பெண்ணிற்கு அரவணைப்பு இல்லாமல் அந்தப் பெண் குழந்தை எப்படி வளர முடியும்?''

''அதனால் அவள் அநாதை இல்லத்திலேயே இருக் கட்டும் என்கிறாயா?'' கல்யாண் கோபமாகக் கேட்டான்.

''இல்லை... சாருக்குட்டி, என் மிக நெருங்கிய நண்பனின் மகள்... அவளை நான் என் மகளாக, எங்கள் மகளாக ஏற்றுக் கொள்கிறேன்... இந்திராவிற்கும் தத்து எடுத்து ஒரு குழந்தை வளர்க்க வேண்டும் என்று சில நாட்களாகவே ஆசை இருக்கிறது. குழந்தை எங்களிடம் பத்திரமாக வளரட்டும். நீ போலீஸில் சரணடைந்துவிடு. உன் சார்பாக நானே ஒரு வக்கீல் ஏற்பாடு செய்கிறேன். இந்திராவின் தம்பி சுப்ரீம்கோர்ட்டில் வழக்கறிஞராக இருக்கிறான். அவனையே உனக்காக வாதாடச் சொல்கிறேன். நீ செய்யாத குற்றங்களிலிருந்து உன்னை விடுவிக்க அவன் தேவையானதை செய்வான். டேவிட் ஏற்கனவே ஒரு குற்றவாளி. அவன் இறந்தது பற்றி போலீஸிற்குப் பெரிய வருத்தம் இருக்காது. அந்த வழக்கை போலீஸ் தரப்பி லிருந்து மென்மையாக்கச் சொல்லிக் கேட்டுப் பார்க்கிறேன்... சில வருடங்களிலேயே நீ விடுதலையாகி வெளியே வந்துவிடுவாய். உன் மகள் சரியான இடத்தில் வளர்ந்து கொண்டிருப்பாள். நீ வெளிநாடு போயிருப்பதாகவே அவளிடம் சொல்லி வைக்கிறேன். விடுதலையாகி வந்ததும் உன் மகளை நீயே அழைத்துக்கொள்...''



அரவிந்தன் நிறுத்தினான்.

சற்றுநேரம் அங்கே அமைதி நிலவியது.

கல்யாணின் நெற்றியில் சுருக்கங்கள். அவன் யோசிக் கிறான் என்று புலப்பட்டது. ஒரு முடிவுக்கு வந்தவனாக கல்யாண் தன் தலையை நிமிர்த்தினான்.

''நீ சொல்வதெல்லாம் உண்மைதானா? என் மகளை உன் மகள் போல் ஏற்று நடத்துவாயா?''

''ஒரு தாயின் அன்பைவிட அதிகமான அன்பை இந்திரா அவள் மீது பொழிவாள். ஒரு தந்தையைவிட அதிகப் பொறுப்புடன் நான் அவளை வளர்ப்பேன்'' என்றான், அரவிந்தன்.

கல்யாண் மனம் மாறும் நிலையில் இருப்பதே அவ னுக்குப் பெரும் ஆறுதலாய் இருந்தது.

''நீ சொல்வது மிகவும் நியாயமாக இருக்கிறது. அர விந்தன். என் மகள் என் நிழலில் வளர்வதைவிட உன்னைப் போன்ற உத்தமன் நிழலில் வளர்வதுதான் நல்லது. அவளை ஒரே ஒருமுறை பார்த்தால் போதும் எனக்கு. பார்க்க முடியாமல் போனாலும் கவலையில்லை. அவள் மிகச் சிறப்பான குடும்பத்தில் வளரப் போகிறாள் என்ற சேதி ஒன்றே போதும், அவளைப் பற்றி இனி நான் கவலைப் படத் தேவையில்லை...''

அரவிந்தன் நட்புடன் புன்னகைத்தான். ''கல்யாண்... இப்போதுதான் நீ புத்திசாலித்தனமாக முடிவெடுத்திருக் கிறாய்... போலீஸில் இப்போதே சரணடைகிறாயா?''

கல்யாண் சிரித்தான். "நீ சொன்ன இரண்டு கருத்துக் களில் ஒன்றுதான் எனக்குப் பிடித்திருந்தது. அரவிந்த். என் குழந்தை உன்னிடம் வளரட்டும். ஆனால்... நான் போலீஸில் சரணடைவதாகச் சொல்லவில்லையே... சாருக்குட்டியைப் பார்த்து அழைத்துப் போவதற்காகத் தான் நான் சென்னை வரை வந்தேன்... இல்லையென்றால் மும்பையில் இருந்தே தப்பித்திருப்பேன். நான் தமிழ்நாட்டு போலீஸிற்கு எந்த துரோகமும் செய்யவில்லை. பஞ்சாப் போலீஸிற்காக நீ அதிகமாய் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டாம்..."

"எந்த மாநிலமாயிருந்தாலும் போலீஸ் போலீஸ்தான்..."

"நீ பிடிவாதம் பிடித்தால் எனக்கு வேறு வழியில்லை, அரவிந்த். நான் மும்பையிலிருந்து விமானம் ஏறும்வரை உன் மனைவியை - இந்த சகோதரியை - பணயக் கைதியாக வைத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை..."

"மீண்டும் முட்டாள்தனம் செய்கிறாய், கல்யாண்."

அரவிந்த் சொன்னதை ஆமோதிப்பது போல் வானில் இன்னொரு இடிச் சத்தம்.

வானையே கிழித்துவிட்டது போல் பெருமழை பொழிய ஆரம்பித்தது. இரைச்சலான மழை, இருட்டைக் கிழிக்கும் மின்னல், அதிரடிக்கும் இடிகள்...

திடீரென்று மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

சரேல் என்று அங்கே இருட்டு சூழ்ந்தது.

இந்திரா பயத்தில் அலறினாள்.



கல்யாண் துப்பாக்கியோடு ஒரே பாய்ச்சலாக இருட்டில் அவள் இருந்த திசை நோக்கிப் பாய்ந்தான்.

இருட்டை சாதகமாக்கித் தப்பித்துவிட நினைத்து நாற்காலியிலிருந்து அவள் எழுந்திருந்த தருணம் கல் யாண் பாய்ந்து அவள் மீது விழுந்தான்.

இருவருமாகத் தரையில் புரண்டனர்.

கல்யாண் மின்னல் வெளிச்சத்தில் அவள் கழுத்தை வளைத்து கையை நெறித்துப் பிடித்தான். "ஏதாவது முயற்சி செய்தாயோ, இடுப்பு எலும்பை முறித்துவிடு வேன்..." என்று ஆவேசமாக முழங்கினான்.

"இந்து... அவசரப்பட்டு எதுவும் செய்துவிடாதே" என்று அரவிந்த் அலறினான். நாற்காலியிலிருந்து விடு படும் எண்ணத்துடன் அவன் ஆத்திரத்துடன் கைகளை அசைத்தும் கைகளை அசைக்க முடியவில்லை. அவன் மனைவியே அவனை அவ்வளவு அழுத்தமாகக் கட்டி யிருந்தாள்.

ஒரு சில கணங்கள்தான் இருட்டு நீடித்தது.

சடார் என்று மீண்டும் வெளிச்சம் வந்தது.

வெளிச்சத்தின் கூடவே "சரணடைந்து விடு" என்று அதிகாரமான புதிய குரல் ஒன்றும் வந்தது.

இரண்டு கால்களையும் அகட்டி நின்று இரு கைகளிலு மாகத் துப்பாக்கியைப் பிடித்து அங்கே போலீஸ் உடுப் பில் ஒரு நபர் நின்றிருந்தார்.

"சம்பத்" என்று ஆச்சரியமாகக் குரல் வந்தது அரவிந்த னிடமிருந்து.

கல்யாண் எழுந்தான்.

அவன் கை இந்திராவின் கழுத்தில் பூட்டியிருந்தது. அதனால் அவளும் சேர்ந்து அவனுடன் எழுப்பப்பட்டாள்.

''யார் நீ? எப்படி உள்ளே வந்தாய்?'' என்று கல்யாண் சற்றும் அச்சப்படாமல் சிரித்தான்.

## 8



கல்யாண் தன் துப்பாக்கியை இந்திராவின் மீது இன்னும் அதிகமாக அழுத்தினான்.

''சம்பத்... நீ எப்படி?'' என்றான், அரவிந்தன்.

''முதலில் அவன் துப்பாக்கியைக் கீழே போடச் சொல்'' என்று உறுமினான், கல்யாண்.

''சம்பத் - இந்திராவின் உயிரைப் பணயம் வைக்க நான் தயாராய் இல்லை. துப்பாக்கியைக் கீழே போட்டு விடு...'' என்று பதறினான், அரவிந்தன்.

இன்ஸ்பெக்டர் சம்பத்குமார் கல்யாணைப் பார்த்தார். அவன் கையில் சிக்குண்டு வலியில் முகம் சிவந்திருந்த இந்திராவைப் பார்த்தார்.

வேறு வழியின்றி துப்பாக்கியைக் கீழே நழுவ விட்டார்.



''அதை இந்தப் பக்கம் காலால் தள்ளு...'' என்றான், கல்யாண் மிரட்டலாக.

துப்பாக்கி அவன் புறம் வழுக்கி வந்தது.

''சம்பத்... இவன் பெயர் கல்யாண்... என் பழைய நண்பன்... நெருக்கமான நண்பன்... ஆனால் பஞ்சாப் போலீஸால் தேடப்படும் குற்றவாளி என்று தெரிந்ததால் அவனை நான் மடக்கப் பார்த்தேன்... வெகுண்டு போய் என்னைக் கட்டிப் போட்டிருக்கிறான். என் மனைவியைப் பணயக் கைதியாகப் பிடித்து வைத்திருக்கிறான். நீ எப்படி சம்பத் உள்ளே வந்தாய்?''

''போனில் உன்னுடன் பேசியவுடன் ஏதோ அசம்பாவிதம் நடந்திருக்கிறது என்று எனக்குப் புரிந்து விட்டது. எதிர் வீட்டு பால்கனியிலிருந்து பைனாக்குலர் வைத்துப் பார்த்தபோது, நீ நாற்காலியில் கட்டப்பட்டிருந்தது தெரிந்தது. எதிரே இந்த ஆள் துப்பாக்கியுடன் உட்கார்ந்திருப்பதும் தெரிந்தது. மழை பொழியும் சாத்தியம் இருந்ததால், அதைப் பயன்படுத்தி விளக்குகளை அணைத்து உள்ளே நுழைந்து விடத் திட்டமிட்டேன்... இவனை ஆச்சரியப்படுத்தி மடக்கி விடுவதுதான் என் எண்ணம். ஆனால் என்னைவிட இவன் வேகமாய் இருந்து விட்டான்...''

''நான் தப்பித்தாக வேண்டிய புலி...'' என்றான், கல்யாண், ஆக்ரோஷமாக.

''முடியாது... விளக்கை அணைத்துப் போடுவதற்கு எனக்கு உதவி தேவைப்பட்டதால், எங்கள் காவல் நிலையத்திலிருந்து ஆட்களை வரவழைத்தேன். இப்போது

இந்த வீட்டைச் சுற்றி போலீஸ் நிற்கிறது. நீ எங்கேயும் தப்பித்துப் போக முடியாது, கல்யாண்.''

''இந்திராவின் உயிர் என் கைகளில் இருக்கும் வரை என்னைத் தடுக்க யாராலும் முடியாது'' என்றான், கல்யாண்.

''இந்திரா - என்னை மன்னித்துவிடு... எனக்கும், காவல் துறைக்கும் இடையிலான போரில் நீ எப்படியோ குறுக்கே வந்து மாட்டிவிட்டாய்... மும்பை வரை நீ என்னுடன்தான் வரவேண்டும்... முதலில் இங்கிருந்து நாம் புறப்படுவோம். வா... வந்து காரை எடு...''

''கல்யாண் வேண்டாம்...'' என்று அரவிந்தன் பதறினான். ''வெளியே பேய் மழை பெய்கிறது. இந்திரா சமீபத்தில்தான் கார் ஓட்டக் கற்றுக் கொண்டாள். இந்த அடைமழையில் கார் ஓட்டுவது அவளுக்கு இயலாது.''

''இயலும்'' என்றான், கல்யாண், இரக்கமின்றி.

''அவள் உயிர் அவளுக்கு முக்கியம் என்றால், அவளால் கார் ஓட்ட இயலும்... ஹலோ மிஸ்டர் சம்பத்குமார்... நீங்கள் முதலில் வெளியே போய் உங்கள் காவல்துறை நண்பர்களை ஒதுங்கச் சொல்லுங்கள்... யாராவது அவசரப்பட்டால், ஆபத்து எனக்கல்ல இவளுக்குத்தான்...''

சம்பத்குமார் அரவிந்தனைப் பார்த்தார்.

''வேறு வழியில்லை... அவன் சொன்னதைச் செய்'' என்றான், அரவிந்தன்.

கல்யாண் சம்பத்குமாரின் துப்பாக்கியையும் பொறுக்கிக் கொண்டான்.



# 9



மழை சீறி சீறி அடித்தது.

காரின் முன் கண்ணாடிகளை வைப்பர்கள் விடாமல் மெழுகி மெழுகி துடைத்துக் கொண்டேயிருந்தும், மழையின் ஆவேசத்தில் பத்தடி தூரத்திற்கு மேல் சாலையைப் பார்க்க முடியவில்லை.

இந்திரா குளிரில் நடுங்கிக் கொண்டே காரைச் செலுத்தினாள்.

''மும்பை வரை என்னால் கார் செலுத்த முடியாது'' என்று சொல்கையில் அவளுக்கு அழுகை சேர்ந்தது.

கல்யாண் சிரித்தான். ''சகோதரி, நான் அவ்வளவு கொடியவனல்ல... மும்பை வரை காரில் போவது எவ்வளவு முட்டாள்தனம் என்று எனக்கும் தெரியும். சென்னைக்கு ஒதுக்குப்புறமாய் ஒரு இடத்தில் நான் இறங்கிக் கொள்வேன்... கவலைப்படாதே... அப்புறம் என் வழியை நான் பார்த்துக் கொள்வேன். ஆனால் அரவிந்தன் கொடுத்த வாக்குறுதியை மட்டும் மறந்து விடாதே... சாருக்குட்டியை உன் கண்ணில் வைத்துப் பார்த்துக் கொள் - எங்கிருந்தாலும் மாதா மாதம் என் குழந்தையின் பராமரிப்புக்குப் பணம் அனுப்பிவிடுவேன்...''

இரவு வேளை என்பதாலும், அடர்மழையினாலும் சாலையில் போக்குவரத்து மிகக் குறைந்திருந்தது. ஆனாலும், காரை வேகமாக செலுத்த முடியாமல் மழை எதிர்த்தது.

"சாருக்குட்டியை ஒருமுறை பார்க்க வேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன்... ஆனால், இந்த இரவில், இந்த மழையில் அவளைத் தூக்கத்திலிருந்து எழுப்பிப் பார்ப்பது என்பது நடக்காது - பிறிதொரு சமயம் பார்த்துக் கொள்கிறேன்..." கல்யாண் தனக்குத்தானே உரக்க முணுமுணுத்தான்.

கார் நகரத்தின் எல்லையை நெருங்கிக் கொண்டிருந்தது.

குடியிருப்புகளின் அடர்த்தி குறைந்து அங்கொன்றும், இங்கொன்றுமாக வீடுகள் மின்னலில் தென்பட்டன.

சரியாக பராமரிக்கப்படாத சாலைகள் குண்டும், குழியுமாக இருந்தன. குழிகளில் தேங்கிவிட்ட மழைத் தண்ணீர் சேறும், சகதியுமாக இருந்தது.

கார் திடீரென்று குலுங்கியது. திணறியது.

"என்ன ஆயிற்று?" கல்யாண் கோபமுற்றான். அவன் கையில் இருந்த துப்பாக்கி விறைத்தது.

"பெட்ரோல்" என்றாள், இந்திரா. "பெட்ரோல் நிரப்பிக் கொள்ள வேண்டும் என்பதை மறந்து விட்டேன்..." அவள் குரல் நடுங்கியது.

"என்ன ஒரு முட்டாள்தனம்... இன்னும் மூன்று; நான்கு கிலோ மீட்டர் தூரத்திற்கு பெட்ரோல் பங்குகளே கிடையாது... மழையில் இறங்கித் தள்ளவும் முடியாது" என்றான், கல்யாண் வெறுப்புடன்.



"அவசரத்திற்கு டிக்கியில் பத்து லிட்டர் பெட்ரோல் வைத்திருக்கிறோம்..." என்றாள், இந்திரா.

"வெரிகுட்..." கல்யாணின் முகம் மலர்ந்தது. "பத்து லிட்டர் இருந்தால் நூறு கிலோ மீட்டர் வரை தாராளமாகப் போகலாம்... வண்டியை நிறுத்து..."

கார் இருமிவிட்டு சாலையோரத்தில் நின்றது.

இந்திரா தன் பக்கம் இருந்த கதவு திறந்து மழையில் இறங்கினாள். சேலை தலைப்பை இழுத்து தலையில் முக்காடு போட்டுக் கொண்டாள். பிரதேசமே இருட்டாய் இருந்தது.

கல்யாண் வேறு வழியின்றி இறங்கினான்.

காரின் பின்புறம் இருவரும் போனார்கள்.

மழை அடித்து ஊற்றியது. நிமிடமாய் அவர்கள் இருவரும் நனைந்தார்கள்.

இந்திரா டிக்கி திறந்தாள்.

"அதோ அந்த பெட்ரோல் கேனை எடுங்கள்..." என்று இருட்டில் காட்டினாள், இந்திரா.

கல்யாண் சந்தேகப்படாமல் டிக்கிக்குள் குனிந்தான்.

அவன் உடலின் மேற்பகுதி டிக்கியின் திறந்த வாய்க்குள் இருந்தபோது, இந்திரா சட்டென்று செயல்பட்டாள். டிக்கியின் மூடியைத் திறந்து வைத்திருந்த கம்பியைத் தட்டிவிட்டாள்.

டிக்கி சடாரென்று மூடியது.

கிளை நூலகம்
25278.

கனத்த டிக்கி மூடி அவன் நடு முதுகில் மோதியது.

அப்படியே அவனை டிக்கிக்குள் உந்தித் தள்ளியது.

கல்யாண் அந்தத் தாக்குதலை சற்றும் எதிர்பார்த்திருக்க வில்லை. கைகளை பரப்பிக் கொண்டு டிக்கிக்குள் குப்புற விழுந்தான்.

கனத்த இரும்பு நடுமுதுகில் மோதியது. உச்சக்கட்ட வலியை அவன் உடல் முழுதும் அலையடித்தது.

பாதி உடம்பு வெளியே இருந்தது.

கல்யாண் கைகளை ஊன்றி தன் உடலை நிமிர்த் தினான்.

டிக்கியின் மூடி திறந்து அவன் முழுவதுமாக வெளிப் பட்டபோது, இந்திரா அங்கே இல்லை.

மழை ஆவேசமாகப் பெய்து கண்களைக் குருடாக்கியது.

''இந்திரா...'' என்று அவன் அலறினான்.

காரின் முன் விளக்குகள் பீய்ச்சிய வெளிச்சத்தில் தவளை கள் தண்ணீரில் குதித்தன. இந்திராவைக் காணவில்லை. தப்பித்து விட்டாள்!

''இந்திரா!'' இன்னொரு முறை அடிவயிற்றிலிருந்து கூவினான். மழையின் இரைச்சலைத் தாண்டி அவன் குரல் பயணப்படவில்லை.

இனியும் தாமதிப்பது வீண்.

அவன் தப்பித்தாக வேண்டும்.

இருட்டில் அவன் ஓட ஆரம்பித்தான்.



நான்கடி கூட ஓடியிருக்க மாட்டான். அவன் கால்களை எதுவோ தடுத்தது.

அப்படியே குப்புறடித்து விழுந்தான்.

மழைத் தண்ணீரும் சேரும் அவனைச் சுற்றித் தெளித்தன.

''கல்யாண்... துப்பாக்கியைக் கொடு...'' என்றது அரவிந்தனின் குரல்.

கல்யாண் அதிர்ந்தான்.

அவன் இந்திராவுடன் காரில் புறப்பட்டதுமே பின் னால் போலீஸ் அவர்களைத் தொடர்ந்திருக்கிறது என்று புரிந்தது.

கீழே விழுந்தபோதும் துப்பாக்கியை அவன் கை நழுவ விடவில்லை. ஆத்திரத்துடன் விசையை இழுத்தான்.

தோட்டா இருட்டில் எங்கோ பயணப்பட்டது.

அரவிந்தன் அவன் மீது பாய்ந்தான். பாய்ந்த வேகத்தி லேயே கல்யாணின் மணிக்கட்டை அவன் கை வளைத்துப் பிடித்தது. துப்பாக்கியின் திசையை மாற்றியது.

அடுத்தடுத்து இரண்டு தோட்டாக்கள் வீணாயின.

அரவிந்தன் தன் முழங்காலை மடக்கி கல்யாணின் வயிற்றில் கும்க் என்று பாய்ச்சினான்.

கல்யாண் வலியில் அலறினான். அவன் கையிலிருந்து துப்பாக்கி நழுவியது.

ஆனால் ஆவேசத்துடன் அவன் அரவிந்தனை நெம்பித் தள்ளினான்.

நண்பர்கள் இருவரும் இருட்டில் கொட்டும் மழையில் கட்டிப் புரண்டனர்.

சற்றுத் தொலைவில் நின்றிருந்த இன்ஸ்பெக்டர் சம்பத்குமார் தன் துப்பாக்கியைப் பயன்படுத்த முடியாமல் தவித்தார். அரவிந்தனும், கல்யாணும் அவ்வளவு நெருக்க மாகக் கட்டிப் புரண்டனர்.

ஒரு சந்தர்ப்பத்தில் அரவிந்த் கீழேயும், கல்யாண் மேலேயும் அமைந்த நிலை, கல்யாண் தன்னிடமிருந்த இரண்டாவது துப்பாக்கியை எடுத்தான்.

ஆத்திரம் அவன் கண்களை மறைத்தது. ஆவேசம் அவன் புத்தியைக் குலைத்தது. துப்பாக்கி முனையை அரவிந்தனின் வாய்க்குள் நுழைத்தான். தலையில் பொழிந்து நெற்றியில் வழிந்து கண்களை மறைக்கும் தண்ணீரை வழித்து எறிந்தான்.

''அரவிந்த்... நண்பனுக்கு நீ காட்டும் அன்பு இது தானா? என்னைத் தப்பிக்க விடாமல் துரத்திப் பிடித்து ஒப்படைத்து அதற்கு விருது வாங்கி கழுத்தில் மாட்டிக் கொள்வதுதான் உனக்குச் சிறப்பா?''

கல்யாணின் குரலில் கோபமும், வருத்தமும் கலந்து ஒலித்தது.

அரவிந்தனின் கைகள் பூமியில் புரண்டிருந்தன.

அரவிந்தன் இரண்டு கைகளிலும் சேற்றை அள்ளி னான்.

சரேலென கல்யாணின் முகத்தில் சேற்றை அடித்தான்.

சேறு சப்பக் என்று இரு கண்களுக்குள்ளும் போய் அப்பிக் கொள்ள, கல்யாண் பார்வை இழந்தான். அவ



னுடைய கைகள் தன்னிச்சையாகக் கண்களை நோக்கிப் பாய, அரவிந்தன் துள்ளி எழுந்தான். கல்யாணின் துப்பாக் கியைத் தட்டிப் பறித்தான்.

அவன் வாய்க்குள் செருகப்பட்ட துப்பாக்கியில் 'ஸேப்டி காட்ச்' எனப்படும் பகுதி விடுவிக்கப்படாததால், துப்பாக்கி வெடிக்கத் தயாராய் இல்லை என்பதை கவனித்து விட்டு அவன் தைரியமாக செயல்பட்டிருந்தான்.

கல்யாண் இரண்டு கைகளாலும் கண்களில் அப்பி யிருந்த சேறை வழித்தான். இமைகளில் கனத்த சேற்றை விடுவித்துக் கொண்டாலும், கண்ணுக்குள் அப்பிய சேற்றை வழிப்பது கடினமாயிருந்தது.

மழைத் தண்ணீரை வாரி வாரி கண்களுக்குள் அடித்துக் கழுவினான். கண்களை இடுக்கிக் கொண்டு பார்வையை உயிருக்குக் கொண்டுவர முனைந்தான்.

இரு கண்களையும் இடுக்கிக் கொண்டு எதிரே பார்த்த போது, அரவிந்தன் நிழலாய்த் தெரிந்தான். அவனுக்குப் பின்னால் இரண்டு, நான்கு, எட்டு போலீஸ் தலைகள்.

சற்று தள்ளி நின்றிருந்த போலீஸ் ஜீப்பிற்குள் அச்சத் தில் அழுதபடி இந்திரா.

''கல்யாண்... நான் கொடுத்த வாக்குறுதியை மறக்க வில்லை. சாருக்குட்டியை என் பொறுப்பில், என் நிழலில் வளர்ப்பேன்...'' என்றான், அரவிந்தன். ''இனியும் இந்த விளையாட்டு வேண்டாம்... சரணடைந்து விடு...''

கல்யாண் அரவிந்தனை அணைத்துக் கொண்டான்.

அவன் மறுபடி தாக்கப் போகிறான் என்று சம்பத்குமார் விறைத்தார்.

ஆனால் கல்யாணின் முதுகு குலுங்கியது.

அழுகிறான்!

''அரவிந்த்... நான் உன்னிடமும், உன் மனைவியிடமும் மோசமாக நடந்து கொண்டேன்... என்னை மன்னித்து விடு...'' என்றான். ''இனியும் போராட இந்த உடலில் தெம்பு இல்லை... விதியின் வழி என் வாழ்க்கை நடக்கட்டும்...''

அரவிந்தன் கல்யாணின் முதுகைத் தட்டிக் கொடுத்தான். ஈரத் தலையை வருடிக் கொடுத்தான்.

''நான் உன்னைக் கைவிட மாட்டேன் நண்பா...'' என்றான்.

அந்தக் காட்சியை வானம் படம் எடுப்பது போல் மின்னல் ஒன்று ஒளிர்ந்தது. மகிழ்ச்சியோடு மழை தொடர்ந்தது.

# வட்டத்தில் சிக்கியவன்

வட்டத்தில் நுழையும் முன்...

1987

காற்று ஆக்ரோஷமாக இருந்தது. சிறிய ஜன்னல் கதவை அறைந்து படபடத்தது. அறைக்குள் புகுந்து மேஜை மீதிருந்த தாள்களை அள்ளி தரையெங்கும் விசிறியடித்தது.

சுந்தரம் குனிந்து தாள்களைப் பொறுக்கினான். அடுக்கினான். மேஜை மீது வைத்து அதன் மீது எடை ஒன்றை பொருத்தினான். ஜன்னல் கதவின் கொக்கியை அதன் இணையில் மாட்டினான். கட்டுப்படுத்தப்பட்ட கதவு காற்றில் நடுங்கியது.

சுந்தரம் ஜன்னலிலிருந்து விலகித் திரும்பிப் பார்த்தான்.

குணா இன்னமும் அறை மூலையில், சுவரில் தோள் சாய்ந்தபடி நின்றிருந்தான். பார்வை தரையில் இருந்தது. கால் கட்டை விரல் சிமெண்ட் தரையில் சிறு வட்டங்களைத் தேய்த்தது. கைகள் இரண்டும் அரை டிராயரின் பாக்கெட்டுகளில் மறைந்திருந்தன.

எட்டு வயதில் என்ன நெஞ்சழுத்தம் என்று வியந்தான், சுந்தரம். கதவை நிலைப்படுத்தி விட்டாலும் காற்று இன்னமும் ஆக்ரோஷமாகத்தான் அறைக்குள் நுழைந்து சுழன்றது - சுந்தரத்தின் மனதைப் போல.

சுந்தரம் நாற்காலியைத் திருப்பி அதில் உட்கார்ந்தான்.

"குணா... இங்கே வா..." குரலில் கனிவு இருந்தது.

குணா நகரவில்லை.

"ஏய்... உன்னைத்தான்... கிட்ட வாடா சொல்றேன்..." - குரலில் அழுத்தத்தைக் கூட்டினான்.

குணா சுவரிலிருந்து பெயர்ந்து, ஆனால், விறைப்பாகவே நடந்து வந்தான்.

"அம்மா சொன்னது நெசமா?" - குணாவின் தலையைத் தொட்டு நிமிர்த்தப் பார்த்தபோது, விலுக்கென்று அவன் விலகிக் கொண்டான். சுந்தரம் அந்த இளம் கன்றின் கோபத்தை உதாசீனம் செய்து, கை நீட்டி அவன் சட்டையைப் பிடித்து அருகே இழுத்தான். மடியில் அழுத்தி உட்கார வைத்து அணைத்துக் கொண்டான்.

குணா விடுபட விரும்பும் ஸ்ப்ரிங் போல சுந்தரத்தின் கைகளுக்குள் அடங்க மறுத்தான். முகம் இறுகியிருந்தது. உதடுகள் விறைத்திருந்தன. கண்களில் மெலிதான ஈரமும், நிறைய கோபமும் புலப்பட்டன.



"உனக்கு என்ன வயசு... சொல்லுடா... என்ன வயசு?"

"எட்டு..." - குணாவின் பதில் முனகலாக வந்தது.

"சீனு வாத்யாருக்கு என்ன வயசு?"

"தெரியாது..."

"நாப்பதுன்னே வச்சுப்போம். ஒன்னைப்போல அஞ்சு பங்கு வயசு ஆவுதில்லை? அவர் ஒனக்கு குருடா... குருனா யார் மாதிரி? கடவுள் மாதிரி... தெய்வம் மாதிரி.."

"கடவுள் ஒண்ணும் ஸ்கேலால அடிக்காது."

"எதுக்காக ஸ்கேல் எடுத்தாரு? நீ என்ன தப்பு பண்ணினே? பக்கத்துப் பையனைப் பார்த்து காப்பியடிச்சே... அது கரெக்டா? தப்பு தானே? தப்பு பண்ணினா வாத்யார் அடிக்க மாட்டாரா? அதுக்காக அந்த ஸ்கேலைப் பிடுங்கி அவரை நீ அடிக்கறதா?"

"ஸ்கேலால அடிச்சா எப்படி வலிக்கும்னு அவருக்கும் தெரிய வேணாமா?"

"குணா... நீயா இப்படிப் பேசற? பெரியவங்ககிட்ட மரியாதையா நடந்துக்கலைன்னா எனக்குப் பிடிக்காது."

"பிடிக்காதுன்னா வீட்டை விட்டுத் துரத்திடுங்க... அதுக்குதான காத்திட்டிருக்கீங்க?"

"குணா!" - சுந்தரத்தின் உதடுகள் நடுங்கின.

என்ன வார்த்தை சொல்லி விட்டான் இந்தப் பயல்! அதிர்ச்சியில் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. கண்கள் விரிந்து போயின.

"என்னடா பேச்சு இது! உன்னைத் துரத்துவேன்னு என்னிக்குடா சொல்லியிருக்கேன்? யாருடா சொன்னது ஒன்கிட்ட?"

''ராதாகிருஷ்ணன் எல்லாம் என்கிட்ட சொல்லிட்டான்.''

''அவன் சகவாசம் வேணாம்னு உன்கிட்ட எத்தனை தடவை சொல்லியிருக்கேன்? என்னடா சொன்னான் அவன்?''

''நீ என்ன பெத்த புள்ளையா அவங்களுக்கு? அதனால தான் அவங்களுக்கு உன்னைப் பிடிக்காம போயிடுச் சுன்னு சொன்னான்...''

''நீ என்ன சொன்னே?''

''ஒண்ணும் சொல்லலை...''

''மூணு வயசுலே நீ எம் மடிக்கு வந்து சேர்ந்தடா... அஞ்சு வருஷமா இந்த வீட்டுலதான இருக்கே? எப்ப வாவது உன்னையும் தனசேகரையும் பிரிச்சுப் பார்த்திருக் கேனா நான்? அவன் என்னை அப்பான்னு கூப்புடறான். நீயும் என்னை அப்பான்னு கூப்புடறே... அவன் அம்மான்னு கூப்புடறான்... அவளை நீயும் அம்மான்னு கூப்புடறே... அவனை எந்த ஸ்கூலுக்கு அனுப்பறேனோ அதே ஸ்கூலுக்கு அதே பணம் கட்டித்தான உன்னை அனுப்பறேன். அவனுக்கு என்ன டிரெஸ் வாங்கறேனோ அதே டிரஸ் தான உனக்கும் வாங்கறேன்? அவனுக்கு என்ன சோறு அவங்கம்மா போடறாங்களோ அதே சோறு தான உனக்கும் போடறாங்க. குட்டிப் பொண்ணு பொன்னி உன்கிட்டயும் தான அண்ணா அண்ணான்னு ஆசையா ஓடி வருது? தனசேகர் வாத்யார்கிட்டே ஸ்கேலைப் பிடுங்கினா, அவனையும் கூப்பிட்டு நான் கண்டிக்கத் தானே போறேன்?''

குணா பதிலே பேசாமல் சுவரை வெறித்தான்.

''என்னடா பேச மாட்டேங்கறே?''



''ஒண்ணுமில்ல...''

''நாளைக்கு என்னை ஸ்கூலுக்கு வரச் சொல்லியிருக் காங்க, தெரியுமில்ல? ஹெச்.எம்.கிட்ட என்ன சொல்லட் டும்? குணா தெரியாம பண்ணிட்டான், இனிமே வாத் யார்கிட்டே மரியாதையா நடந்துப்பான்னு சொல்லவா?''

''அந்த ஆளு என்னை அடிக்கக் கூடாது...'' என்றான், குணா.

''அப்படியெல்லாம் பேசக் கூடாது குணா... என்ன இருந்தாலும்...'' - சுந்தரம் பேசிக் கொண்டிருக்கும் போதே குணா விருட்டென்று அவன் மடியில் இருந்து எழுந்தான். உதறிக் கொண்டு விலகி படுக்கையறைக்குள் ஓடினான். குப்புறப் படுத்துக் கொண்டான். அவன் முதுகு குலுங்கியது.

சுந்தரம் தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

சின்ன பையன்! ஏற்கெனவே மனசு நொந்திருக்கிறான். மோசமான தோழனின் சுருதியேற்றல் வேறு! இப்போது எதையும் புரிந்து கொள்ளும் நிலையில் இல்லை! தூங்கட்டும். மனசு தெளிவாகும்.

விடியட்டும், விடிந்ததும், இன்னொரு முறை அன் பாகப் பேசிப் பார்க்கலாம். இப்போது தூங்கட்டும்.

சுந்தரம் மகத்தான தவறு செய்தது தெரியாமல் சாப்பிடப் போனான்.

* * *

குணா தூங்கவில்லை. ராத்திரி பூராவும் தூங்கவில்லை. கடிகாரத்தின் ஒவ்வொரு டிக்கையும் எண்ணிக் கொண் டிருந்தான்.

என்னை இவர்களுக்குப் பிடிக்கவில்லை.

என்னைப் பிடிக்கவில்லை.

வாத்யாரிடம் சொல்லி என்னை அடிக்கச் சொன்னது இவர்கள்தான். ஏன் அப்பா, ஏன் அம்மா, ஏன் இரண்டு பேரும் ஒரே சமயத்தில் செத்துத் தொலைத்தீர்கள்? என்னை ஏன் இந்த வீட்டில் ஏற்றுக் கொண்டார்கள். தனாவுக்கும் எனக்கும் ஒரே மாதிரி சட்டை வாங்கிக் கொடுத்தால் மட்டும் நான் அவர்களுடைய சொந்த மகன் ஆகிவிடுவேனா? இரண்டு பேரும் ஒரே பள்ளிக் கூடத்தில் படிப்பதால் மட்டும் அவர்கள் என் சொந்த அப்பா அம்மா ஆகி விடுவார்களா? நேரம் பார்த்திருந்து என்னைத் துரத்தத்தான் போகிறார்கள்.

எனக்கு அப்பா இல்லை. அம்மா இல்லை என்பதால் தானே வாத்தியார் அடிக்கிறார்? அதனால் தானே எனக்கு கம்மியாக மார்க் போடுகிறார்கள்? இன்றைக்கு அப்பா - அப்பாவா அவர்? அப்பா மாதிரி - அவர் ஏன் திடீரென்று என்னைக் கூப்பிட்டு கண்டிக்கிறார்? கொஞ்சம் கொஞ்சமாக என் மேல் வெறுப்பு காட்டுகிறார்கள் தானே?

ராதாகிருஷ்ணன் கரெக்டாக சொன்னான்.

வேண்டாம். சொந்தமில்லாத இந்த வீடு வேண்டாம். இந்த மனிதர்கள் வேண்டாம். நான் சுதந்திரமாக எங் கேயோ போய் வாழ்கிறேன்.

ராத்திரி மூன்று மணிக்கு எழுந்தான். சத்தமில்லாமல் ஸ்கூல் பையைத் திறந்தான். ஒரு நோட் புத்தகத்தி லிருந்து காகிதம் கிழித்து நான்கு வரி கடிதம் எழுதினான்.

ஹேங்கரில் தொங்கிய சுந்தரத்தின் சட்டைப் பையி லிருந்து ரூபாய் நோட்டுகளைப் பொறுக்கிக் கொண்டான்.



மூன்று நாற்பதற்கு சென்னை போகிற பாஸஞ்சர் அகாலத்தில் வந்து குரல் கொடுக்கும். அதைப் பிடித்து விட வேண்டும்.

ரயில்வே நிலையம் நோக்கி நிலா வெளிச்சத்தில் வேகமாக நடந்தான்.

* * *

## 2007

குடும்பமே வாசல் படியில் காத்திருந்தது.

அம்பாஸிடர் கார் வந்து பிரேக் அடித்ததும், மூன்று பேரும் பதைப்புடன் எழுந்தனர்.

கதவு திறந்து காரிலிருந்து அவர் இறங்கினார்.

''ஐயையோ... என்னங்க ஆச்சு?''

கலைந்த தலையும், வியர்த்து அழுக்கு தீற்றிய சட்டை யும், கசங்கிய முகமும், கூன் விழுந்த முதுகுமாக கால்கள் இடறிவிட அவர் தொய்ந்ததும், மகன் பாய்ந்து தாங் கினான். ''என்னப்பா ஆச்சு உங்களுக்கு. ஏன்ப்பா அடிச்சுப் போட்ட மாதிரி இருக்கீங்க?''

கார் சற்று தயங்கியது. டிரைவர் இருக்கைக்கு பக்கத்தில் உட்கார்ந்திருந்த இளைஞன் ஜர்தா பானை உமிழ்ந்து விட்டு, ''அடம் பிடிக்காதய்யா... விடியறதுக்குள்ளாற உண்மையை ஒத்துக்க. மொதலாளி அப்புறம் மனசு மாறிடுவாரு... அவர் கையை காமிச்சா உன் குடும்பம் என்னாகும்னு யோசி...'' என்றான்.

டீஸல் புகையை கறுப்பாகக் கக்கிவிட்டு கார் விருட் டென்று புறப்பட்டுப் போனது.

''தனா... வாசல்ல நிக்க வச்சு எதுவும் கேக்காத. உள்ள வந்தப்புறம் பேசலாம்'' மகள் அப்பாவின் கையை அழுத்திக் கொடுத்தாள்.

அக்கம் பக்கத்து ஜன்னல்கள் சத்தமின்றி மூடிக் கொண்டன.

படியேறி வீட்டிற்குள் வந்து கதவு சாத்தியதும், அவர் மிதியடியிலேயே சரிந்து உட்கார்ந்தார். பொத்தலிட்ட பலூன் போல அழுகை வெடித்துக்கொண்டு கிளம்பியது.

''அப்பா - அப்பா...''

''என்னங்க... ஐயோ... இத்தனை வருஷத்துல நீங்க கண் கலங்கி பாத்ததேயில்லியே... இப்படி அழறீங் களே...''

''எல்லாம் போச்சு... எல்லாம் போச்சு...''

''என்னப்பா உளர்றீங்க? எதுவும் போகலை... எழுந் திருங்க... மூஞ்சை அலம்பிட்டு வாங்க... மொதல்ல சாப்பிடலாம்...''

''சாப்பாட்டுல கொஞ்சம் வெஷத்தைக் கலந்து கொடு பொன்னி.''

''அப்பா...''

''இப்ப எங்கேர்ந்து வரேன், தெரியுமா? போலீஸ் லாக்கப்லேர்ந்து...''

''தெரியும்ப்பா... போலீஸ் இங்கேயும் வந்திருந்தது...''

''ஐயோ இங்கியும் வந்துட்டாங்களா? அக்கம் பக்கத்துல எல்லாம் பாத்தாங்களா?''

''பாத்தா பாத்துட்டுப் போறாங்க... நீங்க எழுந்திருங்க...''

''என்னை திருடன்னு சொல்லிட்டாங்கடி... இத்தனை வருஷ சர்வீஸ்ல காபிக்காகக்கூட எடுத்ததில்லடி நான்... ஆபீஸ்லேர்ந்து ஒரு பென்சில், ஒரு ரப்பர், ஒரு குண்டூசி



எடுத்திருப்பேனா? ஆறு லட்சத்தை கையாடிட்டேன்னு கூசாம சொல்லிட்டாங்கடி...''

''என்னதான் நடந்தது? ஒழுங்காச் சொல்லுங்களேன்ப்பா... அம்மா, அப்பாவுக்கு சூடா ஒரு டம்ளர் காபி கொண்டு வாம்மா...''

காபி வேண்டாமென்று தலையசைத்து மறுத்தார்.

''வழக்கம் போல பாங்க்ல பணம் எடுத்தேன். ஆறு லட்சத்து பத்தாயிரம் ரூபா. சூட்கேஸ்ல பணத்தை வச்சு மூடினேன். கார்ல ஏறினேன். காரை ரெண்டு தெரு திருப்பியிருப்பேன். சினிமாலல்லாம் வர்ற மாதிரி பின் சீட்லேர்ந்து ரெண்டு பேரு தடக்குன்னு எழுந்தாங்க... திடுக்கிட்டுப் போனேன். கத்தியைக் கழுத்துல வச்சாங்க. காரை ஓரமா நிறுத்தச் சொன்னாங்க. நிறுத்தினேன். ரியர்வியூ கண்ணாடியைப் பார்த்தேன்... ரெண்டு பேர் மூஞ்சியையும் துணி போட்டு மூடியிருந்தாங்க... ஒருத்தன் என் மூக்குல எதையோ வச்சு அழுத்தினான். அவ்வளவு தான் தெரியும். அரை மணி நேரம் கழிச்சு முழிச்சிப் பார்த்தப்ப பெட்டியைக் காணும்... உடனே மொதலாளிக்கு போன் பண்ணேன். போலீஸ் வந்தது. ரெண்டு மூணு கேள்வி கேட்டுட்டு போலீஸ் திடீர்னு என்னைப் பிடித்து பணத்தை எங்கே ஒளிச்சு வச்சிருக்கேன்னு கேட்டது... நடுங்கிப் போயிட்டேன். நான் சொன்னதெல்லாம் அவங்க நம்பலைன்னு தெரிஞ்சது... என்னையே சந்தேகப்பட் டாங்க... பொன்னி கல்யாணம் வருதில்ல, அதுக்காக ஆபீஸ்லே லோன் கேட்டிருந்தேன். ஸாங்ஷன் ஆகலை... அந்த கோபத்துல கல்யாண செலவுக்கு இந்த பணத்தை எடுத்திட்டேன்னு முடிவு பண்ணிட்டாங்க. போலீஸ் ஸ்டேஷன்ல வச்சு கன்னா பின்னான்னு விசாரிச்சாங்க.

தடியால அடிக்கலியே தவிர மத்த அவமானமெல்லாம் ஆச்சு... வீட்டுல போய் பாப்போம்னாங்க... சாயந்திரம் வரைக்கும் ஸ்டேஷன்ல தான் வச்சிருந்தாங்க. என்னென்ன கேள்வி கேட்டாங்க தெரியுமா? சின்ன வீடு இருக்கா. அந்த வீட்டுல கொண்டு போய் பணத்தை பதுக்கியிருக்கேன்னான்னு கூட கூசாம கேட்டாங்க. முதல்ல என் பேச்சை நம்பின மொதலாளி மன்சுலயும் போலீஸ் விசாரிக்க விசாரிக்க சந்தேகம் வந்துருச்சு. லோனைத் தரச் சொல்றேன். பணம் எங்க இருக்குன்னு சொல்லிடுங்கன்னுட்டார். நாளைக் காலை வரைக்கும் டயமாம். நான் ஒத்துக்கலைன்னா வீட்டுக்குள்ள போலீஸ் ரெய்டு வருமாம். ஊருக்கு முன்னால கைல காப்பு போட்டு என்னை தெருத் தெருவா இழுத்திட்டுப் போவாங்களாம்.''

போன் மணி அடித்தது.

''யாரு யாரு... பணம் கெடைச்சிடுச்சா... கேளு...''

''இருங்கப்பா... பதறாதீங்கப்பா... ஹலோ...''

''யாரு. தனசேகரா? யப்பா... உன் தங்கையை பொண்ணு எடுக்கறோம்னு நிச்சயம் பண்ணின முட்டாள் பேசறேன். கொள்ளையடிச்ச பணத்துல சீர் வரிசை வச்சு கல்யாணம் நடத்த நீங்க தயாரா இருக்கலாம். எங்க குடும்பத்துக்கு ஏதோ இன்னும் கொஞ்சம் கௌரவம் பாக்கி இருக்கு. ஆளை விட்டுருங்கப்பா... டிரெஸ் எடுக்க நீங்க கொடுத்த அட்வான்ஸ் பணம் ரெண்டாயிரத்தை நாளைக்கு டிரைவர்கிட்ட கொடுத்து அனுப்பறேன். கல்யாண ஒப்பந்தம் எழுதுன காயிதத்தை நான் கிழிச் சிட்டேன். நீங்களும் கிழிச்சிடுங்க.''



''சார்... நீங்க அவசரப்பட்டு...''

''இதபாரு... இனிமே சாமியே எறங்கி வந்து சாட்சி சொன்னா கூட எங்களுக்கு இந்த சம்பந்தம் வேண்டாம். உன் தங்கைக்கு இதைவிட வசதியான எடத்துல பையன் தேடு... அதான் ஆறு லட்சம் இருக்கில்ல...''

''யோவ்... வைய்யா போனை...''

''யாருடா தனா?''

''சொல்றேம்மா...'' - சொல்லும்போதே அழுகை வெடித்தது.

''யாரும் நம்ப மாட்டாங்க தனா... ஐயோ என்னால என் பொண்ணு வாழ்க்கையும் நாசமாய்டிச்சா... என்னை மன்னிச்சிரும்மா பொன்னி... இந்த பாவிக்கு மகளா பொறந்ததைவிட ஏதாச்சும் குப்பை மேட்டுல பொறந் திருக்கலாம் நீ...''

கதவில் தொப் தொப் என்று முட்டிக் கொள்ள ஆரம்பித்தார் அவர். அப்படியே மயங்கிச் சரிந்தார்.

தனா - அம்மாவைப் பாரு... அம்மா - உனக்கென்னம்மா ஆச்சு? நீ ஏம்மா இப்படி வெறிச்சுப் பாக்கறே? பேசும்மா. அம்மா பேசும்மா...'' - பொன்னி நொறுங்கி அழுதாள்.

* * *

திடீரென்று திடுக்கிட்டு தனா எழுந்தபோது எல்லாம் முடிந்திருந்தது. தூரத்தில் வானத்தின் விளிம்பில் சூரியன் உதயமாகிற நேரத்தில், இங்கே குடும்பம் அஸ்தமித் திருந்தது.

''அம்மா... அம்மா... அப்பா... அப்பா... பொன்னீ... ஏய் பொன்னீ...''

உலுக்கினான். மூன்று பேரும் எழுந்திருக்கவில்லை.

அப்பாவின் தூக்க மாத்திரை பாட்டில் காலியாக உருண்டிருந்தது.

தனாவுக்கு உண்மை மண்டையில் இடிபோல இறங்கியது.

மூன்று பேருடைய நாசிகளிலும் நிசப்தம்.

வாசலில் க்ரீய்ச்சென்று டயர்கள் தேயும் சப்தம்.

பதறி ஜன்னல் வழியே பார்த்தான்.

அப்பாவின் முதலாளி வீட்டு மகனும், இரண்டு கான்ஸ்டபிள்களும்.

யாரும் நம்பப் போவதில்லை. பணத்தை மோசடி செய்து விட்டு, மாட்டிக் கொண்டதும் தற்கொலை செய்ததாகப் பேசுவார்கள். உயிரோடு இருக்கும் இவனை சந்தேக வாள் கொண்டு கூறு போடுவார்கள். இவர்களுக்கெல்லாம் விஷம் வைத்து விட்டு நீ மட்டும் உயிரோடு இருக்கும் காரணம் எங்களுக்குத் தெரியும். அந்தப் பணம் எங்கேடா என்று பூட்ஸ்களால் மிதிப்பார்கள்.

தனா தீர்மானித்தான். இதற்கெல்லாம் ஒரு முடிவு கட்ட வேண்டும்!

வீட்டின் படிகளை அவர்கள் ஏறி வந்து கதவைத் தட்ட ஆரம்பித்தபோது, வீட்டின் பின் வாசல் வழியே தெருவில் பாய்ந்து, சந்து சந்தாக புகுந்து ஓட ஆரம்பித்தான்.

* * *





# 1

அவன் உயரமாயிருந்தான். சிவந்த இமைகள். துளைக்கும் பார்வை. வெளுத்த உதடுகள். கோணலான புன்னகை. கூர்மையான மூக்கு. ரசிக்காத சுளிப்பு. நங்கூரக் கயிறுகளை முறுக்கியது போல் வலிய கைகள், தாலாட்டப்படும் குட்டைத் துப்பாக்கி.

அறையில் இன்னும் இருவர் தயாரான துப்பாக்கிகளுடன் சுவரை உரசி நின்றிருந்தார்கள். இரைச்சலான மூச்சுடன் நின்றிருந்தவன் இடுப்பு பெல்ட்டில் ஒரு விரல் நுழைத்திருந்தான். கால்களை அகட்டி, வளர்ந்த பையன் போலிருந்த அடுத்தவன் கையிலிருந்த பெட்டியைக் கீழே வைத்தான்.

நாற்காலியில் உட்கார்ந்திருந்த இருவர் இந்த மூவரையும் விழி விலக்காமல் பார்த்தனர். தூய்மையான வெள்ளைக் கதர் வேட்டியும், வெள்ளைச் சட்டையும் உடுத்தியிருந்தவன் கதிரவன். பட்டு ஜிப்பாவும், பட்டு பைஜாமாவும், விளிம்பில்லாத கண்ணாடியும் உடுத்தியவன் பங்கஜ்.

''எண்ணிப் பார்த்தாயா?'' என்றான், கதிரவன். கதர்ச் சட்டையில் துருத்தியிருந்த ஒற்றை நூலை கிள்ளியபடி.

''இல்லை...'' என்றவன் பெட்டியைக் கொண்டு வந்த ஈஷ்வர்.

''திற... எண்ணு'' - கதிரவன்.

பெட்டி திறக்கப்பட்டது. கட்டுக் கட்டாக பழைய நூறு ரூபாய், ஐம்பது ரூபாய்கள்.

ஈஷ்வர் எண்ணினான். "ஐந்து லட்சம்."

"நாம் கேட்ட தொகை."

"ஆம்..."

"போலீஸ்?"

"எந்த தொந்தரவும் வரவில்லை. நாம் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் பணத்தோடு தனியாக வந்து சந்தித்தார். போலீஸிடமோ, துப்பறியும் நிறுவனத் திடமோ போகவில்லை என்று சத்தியம் செய்தார். மகனை முழுசாகப் பார்க்க வேண்டும் என்று அவருக்கு பயம்..."

கதிரவன் சிரித்தான்.

"ஈஷ்வர், பெட்டியை மூடி பங்கஜிடம் கொடு... அந்தப் பையனின் கண்களைக் கட்டி அழைத்துப் போ... பீச் இருட்டில் இறக்கி விட்டு விட்டு வா..."

பங்கஜ் பெட்டியை வாங்கிக் கொண்டான். இரண்டு விரல்களால் கஞ்சாத் துகளை நசுக்கி வாய்க்குள் எறிந்தான்.

"பங்கஜ், இன்று இரவு பத்து மணிக்கு கிளப்பில் மீட்டிங் இருக்கிறது - பெங்களூர் ஹோட்டலை வாங்கு வதா வேண்டாமா என்று இன்று முடிவு செய்கிறோம்..."

"டாக்குமெண்ட்ஸ்?"

"தயார்."

"அட்வகேட்?"

"கிச்சா வருகிறான்... நேரே கிளப்புக்கு வந்து விடு..." என்று கதிரவன் எழுந்தான்.



அவனை நிழலாகத் தொடர்ந்தான், துப்பாக்கி ஏந்திய நெட்டையன்.

* * *

பணம் இருந்த பெட்டியை பக்கத்து இருக்கையில் படுக்க வைத்து மாருதியை ஓட்டினான், பங்கஜ். காரின் வேகத்தில் தார் சாலையிலும் புழுதி எழுந்தது. ஸ்டீரியோவில் - தம் - ததம்தம் - தம் - ததம்தம் - தம் - ததம்தம் என்ற ரிதம் அதிர்ந்தது. பங்கஜின் விரல்கள் ஸ்டியரிங்கில் தாளமிட்டன. கால் விரல்கள் ஷூவுக்குள் கட்டுப்பாடாக தாளமிட்டன.

மிக அகலமான சாலை போக்குவரத்து மெலிந்திருந்தது. எப்போதாவது ஒரு வாகனத்தின் சீற்றம்.

மாருதி வளைவில் சற்றே வேகம் குறைத்து, பங்கஜ் வெகு அலட்சியமாக ஸ்டியரிங்கைத் திருப்பியபோது, கார் வெடித்தது.

ஆயிரம் பட்டாசுகளை ஒன்றாக வெடித்தது போல் ஒரு சத்தம். காரின் சக்கரங்கள் தனியே கழன்று சாலையில் தாறு மாறாக ஓடின. இரும்பு உடம்பு, கனத்த பாட்டரி, திறமைமிக்க இன்ஜின் எல்லாம் காற்றில் தெறிக்கப் பட்டன. ஐம்பது மீட்டர் வட்டத்திற்கு காரின் துண்டங்கள் விசிறியடிக்கப்பட்டன.

பங்கஜின் தலை சாலையோர இளநீர்க் குவியலில் போய் இறங்கியது. கைகள் லாண்டரிக் கடை வாசலிலும், கால்கள் போலீஸ் சிக்னல் விளக்குகளுக்கு அடியிலும் அப்புறம் கிடைத்தன. உடம்பின் மற்ற பாகங்களை ஸ்பூன் ஸ்பூனாக அன்று இரவு வரை போலீஸ் திரட்டிக் கொண் டிருந்தது.



## 2

வெளியே இரைச்சல். அடர்த்தியான கண்ணாடி சுவர்களுக்கு உள்ளே வெவ்வேறு மேஜைகள். வட்டம் வட்டமான தேக்கு மேஜைகள். பொருந்தாத நாற்காலிகள். மேஜையில் பணமும், சீட்டுக் கட்டுகளும் மல்லாந்திருந்தன.

காற்றில் பீர் வாசம், கனத்த சிகரெட் புகை, சப்தத்துடன் நகர்த்தப்படும் நாற்காலிகள். தொடர்பில்லாமல் பின்னணியில் சிட்டி பாபுவின் டொய், டொடய்ங்...

கதிரவன், கிச்சா, ரஞ்சன், கிருபா நான்கு பேரும் ஒருவர் பின் ஒருவராக வேகமாக அந்த ஹாலை சுவர் ஓரமாக நடந்து கடந்தனர். மரப்படிகளில் மளமளவென்று ஏறினர்.

மேஜைகளில் ஆட்டங்கள் தொடர்ந்தன. யாரோ ஒரு பரதேசி மட்டும் பீர் ஏப்பத்துடன் நிமிர்ந்து கதிரவனுக்கு கை வீசினான். கதிரவன் பொருட்படுத்தவில்லை.

மாடியில் சின்ன வராண்டா. கடந்ததும் லூவர் அமைப்பில் பழைய தேக்கு கதவு. கதவுக்கு வெளியே துப்பாக்கியுடன் காவல் நிற்கும் நெட்டையன்.

கதிரவன் கதர் வேட்டியின் நுனியை இரு விரல்களால் பற்றித் தூக்கி நடந்தான். லூவர் கதவைத் தள்ளித் திறந்தான்.

உள்ளே பழைய அமைப்பில் தேக்கு உத்திரங்களுடன் பெரிய ஹால். ஏர்கண்டிஷனரின் ரீங்காரம். மின் விசிறிகளின் ஆர்ப்பாட்டமற்ற ஸ்ஸ்ஸ்.



குஷன் நாற்காலிகள். குட்டை மேஜைகள். மேஜைகளில், பீர், வேக்குவம் கன்டெய்னரில் நொறுக்ஸ் தீனி. தம்ஸ் அப், கோகோ கோலா...

கதிரவன் உட்கார்ந்தான். மற்றவர்களை உட்கார சைகை செய்தான். அவரவர் தத்தம் நாற்காலிகளை நிரப்பினர்.

''நம்முடன் டிஸ்கஷனில் இருக்க வேண்டிய முக்கியமான ஆள் இன்று இல்லை'' என்றான், கதிரவன் குரல் தேய்ந்திருந்தது. ''பங்கஜ் பயணம் செய்த கார் வெடித்து விட்டது...''

''அடையாளம் தெரியாத நபர் என்று டீ.வி. நியூஸில் பார்த்தேன்'' என்றான், கிச்சா.

''நாம் இன்னும் அடையாளம் கொடுக்கவில்லை. தொழிலதிபர் மகனை கடத்தியதோ, அவரிடமிருந்து பணயப் பணம் பெற்றதோ பெரிதில்லை. கார் வெடித்த போது, காரில் இருந்த பணப் பெட்டியும் வெடித்ததா? பணம் ஒரே இடத்தில் விழுந்து கிடந்ததா, நாலா பக்கமும் சிதறி விட்டதா - எதுவும் நமக்குத் தெரியாது. பணம் சிதறியிருந்து போலீஸ் கையில் கிடைத்தால், நாம் கட்டாயம் கவனமாக இருக்க வேண்டும். பணத்தில் எண்களை முன் ஜாக்கிரதையாக குறித்து வைத்திருந்தார்கள் என்றால், அடையாளம் சொல்வது ஆபத்தாக முடிந்து விடும்...''

''கார் எப்படி வெடித்திருக்க முடியும், கதிர்?'' ரஞ்சன் கேட்டான்.

''ஏற்கெனவே நமக்கு ஒரு மிரட்டல் போன் வந்தது. ரஞ்சன்... உங்கள் குரூப்பில் ஒரு முக்கியத் தலை உருளப் போகிறது என்று. அலட்சியப்படுத்தி விட்டேன்...''

''மதியழகன் குரூப்பின் வேலையாக இருக்கலாமோ?''

''கிச்சா, நம் குரூப்பைப் பற்றி சற்று யோசி. நம்மிடம் பெரும்பாலான கிளப்கள் இருக்கின்றன. சாராயக் கடைகள் பன்னிரண்டு நமக்குக் கீழ் இயங்குகின்றன. துறைமுகத்தில் தொழிலாளர்கள் நம் கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள். அமைச்சர்களோ, பெரிய மனிதர்களோ கூலிக்குக் கொலையாளிகள் வேண்டும் என்றால், நம்மைத்தான் தொடர்பு கொள்வார்கள். மதியழகன் குரூப் இன்னும் நம் அளவிற்கு வளரவில்லை. சொல்லப் போனால், போன தலைமுறையிலேயே என் அப்பா இருந்த காலத்திலேயே தொழிலை ஆரம்பித்த குரூப் நம்முடைய குரூப்தான். சமுதாயத்தின் எல்லா மட்டங்களிலும் நாம் கிளை பரப்பியிருக்கிறோம்... மதியழகனிடம் இவ்வளவு திட்டமிட்ட குரூப் கிடையாது.''

கதிரவன் பேசுவதை அனைவரும் உன்னிப்பாகக் கேட்டார்கள்.

''மதியழகன் மேலே வர வேண்டும் என்பதற்காக நம் குரூப்பில் குழப்பம் உண்டாக்க முயற்சிக்கலாம். அதை மறுத்துவிட முடியாது... பண விவகாரம் பூராவையும் பார்த்துக் கொண்டிருந்த பங்கஜை நாம் இழந்து விட்டோம். உடனடியாக அடுத்த ட்ரெஷரர் யார் என்று நாம் தீர்மானிக்க வேண்டும். அன்றாட வசூலை கணக்கு வைத்துக் கொள்ள, பணத்தை கெட்டிக்காரத்தனமாகக் கையாள பங்கஜின் உதவியாளராக இருந்த ராமசுப்புவை நியமிக்கலாம் என்று நான் நினைக்கிறேன்'' என்றான், கதிரவன்.

அனைவரும் ஒப்புக் கொண்டார்கள்.

''இன்றைக்கு மறுபடியும் நாம் சபதமெடுப்போம்...''



அனைவரும் எழுந்து நின்றனர்.

''சூரிய வம்சத்துத் தலைவனாகிய நான், கதிரவன், எனது உடல், உயிர் அனைத்தையும் இந்த இயக்கத்திற்காக அர்ப்பணிக்கிறேன். என் கடைசி மூச்சு உள்ள வரை இந்த இயக்கத்திற்கு நன்றி உள்ளவனாக, துரோகம் செய்யாதவனாகவே இருப்பேன் என்று உறுதி கூறுகிறேன்.''

''சூரிய வம்சத்து வக்கீலான,'' என்று ஆரம்பித்தான், கிச்சா. ''கிச்சாவாகிய நான் இந்த இயக்கத்தை சட்ட ரீதியாக நிர்வகித்து வழக்குகளில் உதவியாய் இருந்து, இதன் உறுப்பினர்கள் யாவரையும் பாதுகாத்து, என் இறுதி மூச்சு உள்ளவரை துரோக செயல்களில் ஈடுபடாமல் உழைப்பேன் என்று உறுதி கூறுகிறேன்.''

அடுத்து ரஞ்சன் தொண்டையை செருமிக் கொண்டான். ''சூரிய வம்சத்து தளபதியான ரஞ்சனாகிய நான் இந்த இயக்கத்தின் செயல்களுக்கு உயிரூட்டுவேன். எனக்குக் கீழ் இயங்கும் படையினரின் உதவியுடன் சூரிய வம்சத்திற்கு வரும் எல்லா எதிர்ப்புகளையும் முறியடிப்பேன். என் இறுதி மூச்சு வரை சூரிய வம்சத்து தலைவர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் போதிய பாதுகாப்பு கொடுத்து, துரோக செயல்கள் எதிலும் ஈடுபடாமல் பணியாற்றுவேன் என்று உறுதி கூறுகிறேன்...''

அடுத்தது கிருபா.

''சூரிய வம்சத்து இளவலான நான், எனது அண்ணன் கதிரவன், மற்றும் இயக்கத்தைச் சேர்ந்த அனைவருக்கும் உண்மையானவனாக, உப தலைவனாக இருந்து என் இறுதி மூச்சு வரை துரோக செயல்களில் ஈடுபடாமல் பணியாற்றுவேன்.''

அமர்ந்தார்கள். அனைவர் முகத்திலும் ஒரு மின்சார அதிர்வு.

''உடனடியாக நம் அடுத்த நடவடிக்கை என்ன?'' என்றான் கதிரவன்.

''ஒருவேளை மதியழகன் குரூப் பங்கஜைத் தாக்கியிருந்தால், அவர்கள் அந்தத் தவறை மறுபடி செய்யாமல் இருக்க வேண்டும்... அதற்கு அவர்கள் வயிற்றில் கொஞ்சம் பயத்தை ஏற்ற வேண்டும்,'' என்றான், ரஞ்சன். ''அந்தப் பொறுப்பை நான் எடுத்துக் கொள்கிறேன்.''



## 3

அந்த அறைக்கு இரண்டு ஜன்னல்கள் இருந்தன.

இரண்டிலும் இருந்த திரைகள் காற்றில் படபடத்தன.

ரஞ்சன் சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் புதைத்தான்.

ரஞ்சன் ஆறடி உயரம். ஆர்மி கிராப். அடர்ந்த மீசை. உருண்ட முகத்தில் பெரிய கண்கள். செழிப்பான கன்னங்கள். சற்றே முன் தள்ளிய தாடை. அடர்ந்த மீசை. வலிமையான தோள்கள். தொடையைத் தாண்டும் நீளமான கைகள். நிமிர்ந்த நெஞ்சம்.

அரைக்கை சட்டை. அதை பாண்டிற்குள் தள்ளி இடுப்பில் பெல்ட்.



கண் சிமிட்டும் நேரத்தில் துப்பாக்கி கைக்கு வரும். மூடிய இமை திறக்குமுன் எதிராளியை தோட்டா வீழ்த்திவிடும். கடும் பயிற்சி தந்த திறமை அது. கதிரவனின் குழுவில் ஒரு சிப்பாயாக இருந்து பின் படை பொறுப்பாளனாகி, உபதளபதியாய் உருமாறி, இப்போது முக்கிய தளபதி.

அவனுக்குக் கீழ் இருபது சிப்பாய்கள். துப்பாக்கியில் தேர்ந்தவர்கள். இப்போது அவனுடைய அறையில் இரண்டு சிப்பாய்கள் அவன் வாயிலிருந்து உதிரும் வார்த்தைகளுக்காகக் காத்திருந்தார்கள்.

ரஞ்சன் கனத்த குரலில் பேசினான்.

''மதியழகன் குரூப்பில் இரண்டாவது வரிசையில் இருக்கும் முக்கியத் தலைவன் யார்?''

''ஆகாஷ்...'' என்றான் ஒரு சிப்பாய். ''லாரி டிரைவர்களை கட்டுப்பாட்டில் வைத்திருப்பவன். நெடுஞ்சாலையில் இருக்கும் பார் அவன் பொறுப்பில்தான் இருக்கிறது. அவனுக்கு துணைக்கு ஒரே ஒரு செக்யூரிட்டி.''

''ஆகாஷை இன்று ஆகாசத்திற்கு அனுப்புகிறோம்'' என்றான், ரஞ்சன். ''இன்னும் அரை மணி நேரத்தில் புறப்படுகிறோம். இயற்கை நமக்கு சாதகமாக இருக்கிறது.''

* * *

காற்று சீறிக் கொண்டிருந்தது. வானம் கறுத்திருந்தது. பன்னீர்த் துளிகள் போல மழைத் தூறல் அங்கொன்றும் இங்கொன்றும் உதிர்ந்தன.

அந்த மாருதி வேன் நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து இறங்கியது. உயரமான மரங்கள் அணிவகுத்த காம்ப

வுண்ட்டுக்குப் பின்னால் இருந்த அந்த ஹோட்டல் - கம் - பார் அலங்கார விளக்குகளால் வெளிச்சமூட்டப்பட்டிருந்தது. அதன் கார் பார்க்கிங்கில் மாருதி வேன் போய் நின்றது.

மூவரும் இறங்கினார்கள். ரஞ்சன், இரண்டு சிப்பாய்கள்.

ரஞ்சன் சிகப்பு நிற துணித் தொப்பி அணிந்திருந்தான். சற்று பெரிதான சபாரி உடுத்தியிருந்தான். வயிற்றுப் பகுதியில் பேண்ட்டிற்குள் இடுக்கியிருந்த துப்பாக்கி வெளியே தெரியவில்லை.

மூவரும் பாருக்குள் நுழைந்தார்கள்.

கும்மென்று ஆல்கஹால் வாசம் தாக்கியது. சிகரெட் புகை ஏர்கண்டிஷன்ட் அறையில் சுருண்டு கொண்டிருந்தது. கண்ணாடிகளால் ஆன ஒரு பகுதி சுவர் பாரை இரட்டிப்பாக்கிக் காட்டியது. கனத்த சங்கீதம் ஸ்பீக்கர்களில் ததும்பிக் கொண்டிருந்தது. மேஜைகள் பரப்பப்பட்டு அந்த அறையின் மையப்பகுதி நடனத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. சில ஜோடிகள் அங்கே இடுப்பை இடித்துக் கொண்டிருந்தனர். விஸ்கி, சிகரெட், ஆம்லெட்டைத் தவிர வாடிக்கையாளர்களுக்கு வேறு விஷயங்களும் அங்கு வழங்கப்படுவதை அறிய முடிந்தது. மாடியில் குதூகல அறைகள் இருந்தன. அந்தக் குதூகல அறைகளுக்கு அழைத்துப் போகும் பெண்கள் பாரின் உயர்ந்த ஸ்டூல்களில் உட்கார்ந்திருந்தார்கள். காது ஜிமிக்கிகள் குலுங்கக் குலுங்க அவசியமில்லாமலேயே சிரித்துக் கொண்டிருந்தார்கள். பெண்களை நெருங்குபவர்களைத் தனியே அழைத்து வியாபாரத்தை முடித்துத் தரும் தரகர்கள் ஒரு புறம் தங்கள் கனத்த சரீரங்களுடன் காத்



திருந்தார்கள். நடனமாடும் பெண்கள் கூட அவர்களுடைய தரகர்களின் விழிப்பான பார்வையிலிருந்து விலகாமல் நடனமாடினர். இரவைக் கடந்து நான்கு மணி வரை இந்த பார் திறந்திருக்கும் என்று ரஞ்சனுக்கு சொல்லப்பட்டிருந்தது.

ரஞ்சனைப் பார்த்ததும், லிப்ஸ்டிக் பூசிய ஒரு பெண் காற்றில் முத்தத்தைப் பறக்க விட்டாள்.

ரஞ்சன் மையமான ஒரு நாற்காலியில் அமர்ந்தான். தன் சகாக்களையும் உட்காரச் சொன்னான். கண்களை மூடி இசைக்கு மேஜையில் விரல்களால் நடனமாடினான்.

மெனுகார்டு வந்தது. கொண்டு வந்த சீருடைப் பணியாளனைக் குனியச் சொன்னான். ''நான் வந்தது ஆகாஷை சந்திக்க'' என்றான்.

பணியாள் மிரண்டு நிமிர்ந்தான்.

''ரஞ்சன் வந்திருக்கிறான் என்று சொல்...''

பணியாள் பரபரப்பாக அந்த இடத்தை விட்டு நகர, சில விநாடிகளுக்குள் வேறொருத்தன் ரஞ்சனின் அருகே வந்து சேர்ந்தான்.

ஆகாஷின் காவலாளாக இருக்க வேண்டும். முகத்தில் நட்பு இல்லை.

''யார் நீ? எதற்காக திரு ஆகாஷைச் சந்திக்க வேண்டும்?''

''கதிரவனின் தளபதி ரஞ்சன் என்று சொல்... எதற்காக என்பதை மற்றவர்களிடம் நான் பேச விரும்பவில்லை...''

அவன் திரும்பிப் போனான். சில நொடிகளிலேயே திரும்பி வந்தான்.

''வா'' என்றான்.

நடன தளத்தைத் தாண்டி, ஆல்கஹால் பாட்டில்களை அடுக்கியிருந்த அலமாரிகள் தாண்டி, பின்புறம் சதுரமான ஒரு அறை. அதன் வாசலில் ரஞ்சன் நிறுத்தப்பட்டான்.

''உன்னிடம் ஆயுதங்கள் இருந்தால் கொடுத்துவிடு.''

ரஞ்சன் இடுப்பிலிருந்து துப்பாக்கியை எடுத்து நீட்டினான். காவலாள் வாங்கிக் கொண்டான். கதவு திறக்கப்பட்டு ரஞ்சன் உள்ளே அனுமதிக்கப்பட்டான். அங்கே இன்னொரு ஆள் நின்றிருந்தான். அவன் ரஞ்சனின் உடம்பு எங்கும் கைகளை ஓட்டினான். எந்த ஆயுதமும் இல்லை என தீர்மானித்தான். ரஞ்சனின் தொப்பியைக் கூட அவிழ்க்கச் சொல்லி குட்டையான முடிகளில் கைகளை ஓட்டி திருப்தியுற்றான். போ என்று சைகை செய்தான்.

ரஞ்சன் அறைக்குள் நுழைந்தான்.

ஆகாஷ், ஜன்னலோரம் அமர்ந்திருந்தான். மேஜை மீது பரப்பப் பட்டிருந்த நீளமான ரிஜிஸ்தர்களில் குறிப்புகளை சரி பார்த்துக் கொண்டிருந்தான்.

ரஞ்சனைப் பார்த்ததும் அவன் கண்களில் வியப்பு. எதிர் நாற்காலியைக் காட்டினான். ''உட்கார்'' என்றான். ''என்ன வேண்டும் உனக்கு? கதிரவனின் தளபதிக்கு இங்கு என்ன வேலை இருக்க முடியும்?''

ரஞ்சன் மேஜையின் இந்தப் பக்கம் இருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

''எனக்கு ஒரு சந்தேகம்'' என்றான்.

''என்ன?''



''எங்கள் தரப்பில் பங்கஜ் சென்ற கார் திடீரென்று வெடித்தது. பங்கஜைக் கொலை செய்தது உங்கள் குரூப்பாக இருந்தால், எச்சரித்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்...''

''பங்கஜை நாங்கள் ஏன் கொல்ல வேண்டும்? முட்டாள்தனமான சந்தேகம். அப்படியே சந்தேகப்பட்டாலும் எங்கள் கோட்டைக்குள்ளேயே வந்து என்னை எச்சரித்து விட்டுப் போவதற்கு உனக்கு என்ன ஒரு தைரியம்!''

''நாங்கள் யாருக்கும் அஞ்சுவதில்லை! எங்கள் எச்சரிக்கையை உன் தலைவனிடம் சொல்... எங்களுடன் மோதுவது என்பது நெருப்புடன் மோதுவது போல... விஷ நெருப்புடன்!''

ரஞ்சன் எழுந்தான். ''பங்கஜ் மரணத்திற்கும் உங்களுக்கும் தொடர்பில்லையென்றால் எனக்கு சந்தோஷம்...''

வெளியே வந்தான். ஆகாஷ் திகைத்த பார்வையுடன் அவனை முறைத்தபடி இருக்க, கதவு தாண்டி வெளியில் நின்ற காவலாளியிடம் தன் துப்பாக்கியைத் திரும்பப் பெற்று, நடன ஹாலில் நுழைந்து தன் சகாக்களை சைகை செய்து கூப்பிட்டு, - எண்பது விநாடிகளுக்குள் அவர்களுடைய மாருதி வேனில் அவர்கள் இருந்தார்கள்.

''ஆகாஷ்?'' என்றான் சிப்பாய், ரஞ்சன் முகத்தை கேள்வியாகப் பார்த்து. மாருதி சீறிக் கிளம்பியது.

''இந்த விநாடி வரை உயிருடன் இருக்கிறான். ஆனால், இன்னும் பத்து நொடிகளில் ஆள் காலி.''

''என்ன சொல்கிறீர்கள், ரஞ்சன் சார்? உங்களுக்கு பதிலாக யாரையாவது அங்கே விட்டு வந்திருக்கிறீர்களா, ரஞ்சனை தீர்த்துக் கட்ட?''

ரஞ்சன் புன்னகைத்தான். ''என் கால்களைப் பார்'' என்றான். ''ஆகாஷின் ரூமுக்குள் நுழைந்தபோது இரண்டு கால்களிலும் ஷூக்கள் இருந்தன. வெளியே வரும்போது வெறும் சாக்ஸ் கால்களோடுதான் வந்தேன் என்பதை யாரும் கவனிக்கவில்லை. ஆகாஷுடன் பேசிக் கொண்டிருந்தபோது இரண்டு ஷூக்களையும் அங்கேயே நெம்பிக் கழற்றி மேஜைக்கடியிலேயே விட்டு விட்டேன்.''

''அதனால்?''

**'தொபேர்'**

என்று கட்டிடத்திலிருந்து பெரும் சத்தம் எழுந்தது. ஆகாஷின் அறை ஜன்னல் நொறுங்கி ஒரு சுவர் வெடித்துச் சிதறி -

''இரண்டு ஷூக்களிலும் மிக சக்தி வாய்ந்த பிளாஸ்டிக் வெடிகுண்டுகள் இருந்தன, பிரதர். நான் புறப்படும் முன் கால் விரலால் ஸ்விட்சைத் தட்டிவிட்டு வந்தேன். மிகச் சரியாக இரண்டு நிமிடங்களில் வெடித்து விட்டது...'' என்றான், ரஞ்சன், சிரிப்பு மாறாமல்.

ஹோட்டலின் ஏதோ ஒரு ஜன்னல் திறந்து மெஷின் துப்பாக்கி படபடத்தபோது, மாருதி பல நூறு மீட்டர்களைக் கடந்து விட்டது.



# 4

''சப்பாஷ், ரஞ்சன்.''



கதிரவன் கட்டை விரல் உயர்த்திக் காட்டி தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தான்.

''இதில் ஒளிவு மறைவு இல்லை. நேரடியாகப் போனேன். ரஞ்சன் என்றே அறிமுகம் செய்து கொண்டேன். வெடி வைத்துவிட்டு வந்தேன். ஸோ, ஆகாஷ் மரணத்திற்குக் காரணம் யாரென்று இந்நேரம் மதியழகனுக்குத் தகவல் போயிருக்கும்...'' என்றான், ரஞ்சன், மீசையை வருடியபடி.

ஙண ஙண வென்று போன் ஒலித்தது.

பொத்தானை அழுத்தினான் கதிரவன்.

''கதிரவன்!'' - சற்று மிரட்டலாகக் குரல் வந்தது. ''என்ன நினைத்திருக்கிறாய், உன் மனதில்? எதற்காக எங்கள் தரப்பில் ஆகாஷை உன் ஆள் வந்து கொலை செய்தான்?''

''பங்கஜை நீங்கள் வெடித்ததற்கு பதிலுக்கு பதில்...''

''பங்கஜின் மரணத்திற்கும் எங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அநாவசியமாக எங்கள் ஆளைக் கொலை செய்திருக்கிறீர்கள். இன்னொரு தடவை இது நடந்தால், மதியழகன் சும்மாயிருக்க மாட்டான்...''

தொடர்பு அறுந்தது.

''என்ன இப்படி மிரட்டுகிறான்?'' என்றான், கதிரவன்.

''பயம்... நம்மைப் பார்த்து மிரண்டிருக்கிறான். அவன் ஒளிந்திருந்து வெடி வைத்தான். நாம் நேரிலேயே போய் வெடி வைத்து வந்தோம். நம் துணிச்சலைப் பார்த்து பயந்து விட்டான். அந்த பயத்தை மறைத்து மிரட்டிப் பார்க்கிறான்'' என்றான், ரஞ்சன். வாயோரம் சிகரெட் நகர்த்தி.

மறுபடி போன் ஒலித்தது.

"இந்த முறை மதியழகனாய் இருக்கட்டும். வறுத்து விடுகிறேன்" என்றான் கதிரவன், பொத்தானை கோபமாக அழுத்தி.

"கதிரவனுக்கு மாலை வணக்கம். துரோகியை உன் கூடாரத்திலேயே வைத்துக் கொண்டு எதிராளியை மிரட்டுகிறாய், முட்டாள்... அடுத்த பலி - உனக்கு நெருக்கமான இன்னொரு நபர்..." - சற்றே எள்ளலான தொனியில் கரகரப்பான குரல்.

கதிரவனும், ரஞ்சனும் நிமிர்ந்தார்கள்.

போன் தொடர்பு அறுந்து விட்டது.

ரஞ்சன். இந்தக் குரலை நான் எங்கேயோ கேட்டிருக் கிறேன்..."

"நானும்" என்றான், ரஞ்சன். நெற்றியைச் சுருக்கி.

"அப்படி ஒரு வேளை மதியழகனுக்கும் நமக்கும் பாதாளப் போர் துவங்கினால், நமது வாய்ப்பு எப்படி, ரஞ்சன்?"

"பிரகாசம்... வெகு பிரகாசம். மதியழகன் குரூப்பிற்கு அனுபவம், பற்றாது. தாக்குதல்களுக்கான படையும் இல்லை, நாம் தாக்கினால் தப்பிப்பதற்கான பாதுகாப்பும் போதாது... ஆகாஷை அவன் அறையிலேயே போய் நான் வீழ்த்தி விட்டு வந்ததிலேயே புரிந்திருக்குமே! அவன் தாக்க மாட்டான்... தாக்கினால் தவிடு பொடியாகி விடுவான்..."

ரஞ்சன் அழுத்தம் திருத்தமாகச் சொன்னான்.

* * *



ரஞ்சன் ஒற்றை விரலை அவள் உதடுகளில் ஒட்டி னான். அவள் முகத்தைப் பற்றி தன் மடியில் அழுத்திக் கொண்டு பின் கழுத்தில் முத்தமிட்டான்.

அவள் சிலிர்த்தாள்.

அந்த அறையின் மெல்லிய வெளிச்சத்தில் அவள் கட்டிலில் சற்றே புரண்டு அவனோடு இன்னமும் அழுத்திக் கொண்டாள்.

"மது" என்றான், ரஞ்சன். கிசுகிசுப்பான குரலில் "நாம் இனிமேல் சந்திக்காமல் இருப்பது நல்லது."

அவள் திடுக்கிட்டு நிமிர்ந்தாள். "ஏன் ரஞ்சன்? கதிர் ஏதாவது சொல்கிறாரா?

ரஞ்சன் இடதும் வலதுமாக தலையை அசைத்தான். "கதிரவன் தலைவனாயிருக்கிறானே தவிர, அந்த உரி மையை உபயோகப்படுத்தி என் தனிப்பட்ட வாழ்க் கையில் அவன் தலையிடுவதே இல்லை. மதுவந்தியும், நானும் நெருக்கமாய் இருக்கிறோம் என்று அவனிடம் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்."

"அப்புறம் என்ன?"

"இப்போது நிலைமை சரியில்லை, மது... திடீரென பங்கஜின் கார் வெடித்து விட்டது. மதியழகன் குரூப்பின் வேலையாகத்தான் இருக்கும் என்று நினைத்து அவர் களின் ஆளை ஆட்டத்திலிருந்து நான் விலக்கினேன். இப்போது அந்த குரூப்பும் சூடாக இருக்கிறது. ஒருத்தரை ஒருத்தர் கடித்துக் குதறிக் கொள்கிற நிலைமை. நம் குரூப்பிலேயே யாரோ துரோகி இருப்பதாக போன் வந்தது. கதிருக்கு நெருக்கமான ஒரு தலை உருளப் போகிறது என்று எச்சரித்தது. அது நானாகக்கூட இருக்கலாம்.

எப்போது எங்கிருந்து வெடிகுண்டு வீசப்படும் என்பது புரியாமல் இருக்கிறோம். என்னை சூழ்ந்திருக்கும் ஆபத்து உன்னையும் தாக்குவதை நான் அனுமதிக்க விரும்ப வில்லை. நீ பத்திரமாய் இருப்பது நல்லது. என்னோடு சேராதே. இந்த ரகளையெல்லாம் அடங்கும் வரை, கொஞ்ச நாட்களுக்காவது நாம் பிரிந்திருப்பது நல்லது...''

மதுவந்தி அவனை சோகமாகப் பார்த்தாள். ''இவ்வளவு ஆபத்துக்கள் தேவையா ரஞ்சன்? இந்த வேலையில் அப்படி என்ன கவர்ச்சி இருக்கிறது உங்களுக்கு? பேசா மல் இதிலிருந்து விலகி விட்டால் என்ன ரஞ்சன்?''

''வட்டத்திற்குள் வந்து விட்டால் வாசல் கிடையாது. மீது. ஒரு முடிவு கிடையாது. சுற்றிச் சுற்றி வந்தாலும், வெளியே போக வழி கிடையாது. போக வேண்டும் என்று எண்ணமும் எனக்குக் கிடையாது...''

''ஏன்?'' அவள் கெஞ்சலாக, கொஞ்சலாக அவன் மார்பு முடியை விரல் நுனியில் சுருட்டினாள்.

''எனக்கு இந்த விளையாட்டு பிடித்திருக்கிறது. ஐ லைக் தி கேம்...'' என்றான், ரஞ்சன், அவள் தலையை வருடியபடி.

* * *

கதிரவன் கைகளை வீசி வீசி தண்ணீரில் நீந்தினான். அவனுடைய பிரத்யேக நீச்சல் குளத்தில் பூரண சுதந்திரத் துடன் அவன் திளைத்து எழுந்தான். நீச்சல் குளத்தின் நான்கு மூலைகளிலும் சிறு சிறு கண்காணிப்பு கோபு ரங்கள். அந்த கோபுரங்களில் கண்காணிப்பு மனிதர்கள். ஒவ்வொருவர் கையிலும் ஒரு இயந்திரத் துப்பாக்கி.



இவ்வளவு காவலுடன் குளிக்கும்போது, அதை சுதந் திரம் என்று எப்படி அழைப்பது என்ற எதிர்க்கேள்விக்கு பதில் இல்லை.

கதிரவன் நீச்சல் குளத்தின் கரைக்கு வந்தபோது, டவலால் ஒற்றி ஒரு செல்லுலார் போன் அவனிடம் நீட்டப்பட்டது.

''ஹலோ...''

''கதிர், கிச்சா பேசுகிறேன்..''

''சொல்லுங்கள் வக்கீல் சார்...''

''மரியாதைகூடத் தெரியுமா, உனக்கு?''

''கிச்சா, சொல்... என்ன விஷயம்?''

''பெங்களூர் ஹோட்டலின் டாக்குமென்ட்களைப் பார்த்துவிட்டேன்... எல்லாம் பக்காவாக இருக்கிறது. கார்டன்ஸிற்காகப் போட்டிருக்கும் தொகைதான் ரொம்ப அதிகம். கார்டன்ஸ் வேண்டாமென்று சொல். தோட்டமில் லாமல் ஹோட்டலைத் தர முடியாது என்பதால் எப்படியும் கார்டன்ஸையும் சேர்த்துதான் தருவார்கள் விலை குறையும்.''

''அப்புறம்?''

''எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது, கதிர்... ஆனால், போனில் சொல்லலாமா என்று தெரியவில்லை...''

''ஸெல்லுலார் தானே? சொல், கிச்சா.''

''நம் குரூப்பிலேயே ஒரு துரோகி இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது...''

''யார்?''

''சொன்னால் நீ வருத்தப்படுவாய், கதிர், கோபப் படுவாய்...''

''இல்லை... சொல்...''

மறுமுனை தயங்கியது.

''சொல். கிச்சா...''

''அடுத்த வாரிசு...'' தொடர்பு அறுந்தது.

கதிர் ஸெல்லுலாரை அணைத்தான்.

அவனுடைய அடி மனதிலும் அந்த சந்தேக விதை விழுந்திருந்தது. கதிரவனுக்கு அடுத்தபடி தலைவனாகும் வாய்ப்பு கிருபாவிற்குத்தான் இருந்தது. என்ன இருந் தாலும் கிருபா சொந்த சகோதரன் இல்லை. பெரியப்பா மகன். அண்ணா அண்ணா என்று கதிரவனிடம் உருகி னாலும் உள் மனதில் என்ன திட்டம் வைத்திருக்கிறானோ? மதியழகன் குரூப்புடன் சேர்ந்து கொண்டு கிருபாவே பங்கஜத்தைத் தீர்த்துக் கட்டியிருப்பானோ?

கதிரவனுக்குத் தோன்றிய அதே சந்தேகம் கிச்சாவிற் கும் தோன்றியிருக்கிறது! அதனால் தான் அவன் அடுத்த வாரிசு என்ற வார்த்தையை பயன்படுத்தியிருக்கிறான்!

கதிரவன் சிமெண்ட் தளத்திற்கு ஏறினான். டவலால் உடம்பை ஒற்றிக் கொண்டான். ஒரு பருத்தி உடையை உடம்பில் சுற்றிக் கொண்டான். ஸெல்லுலாரில் ஒரு நம்பர் தட்டினான்.

மறுமுனை எடுக்கப்பட்டது.

''ரஞ்சன்!''

''யெஸ், பாஸ்?''



''ரஞ்சன், உன்னுடன் நான் கொஞ்சம் அவசரமாகப் போக வேண்டும். நாம் எப்போது சந்திக்கலாம்?''

''இன்னும் அரை மணி நேரத்தில்?''

''இன்னும் அரை மணி நேரத்தில் என் கெஸ்ட் ஹவு ஸிற்கு வந்துவிடு...!''

கதிரவன் ஸெல்லுலாரை அணைத்துவிட்டு, உடை கள் வைத்திருந்த அறைக்குள் நுழைந்தான்.

* * *

கிச்சா தன் கண்ணாடியைக் கழற்றி ஃஃபூ என்று ஊதி னான். அதைத் தலைகீழாகத் திருப்பி அதன் வழியே பார்த் தான். கழற்றி அணிந்தான்.

ரப்பர் பந்தை எடுத்து பட்பட் என்று தரையில் தட்டி னான்.

வாசலில் செருப்புச் சத்தம் கேட்டது.

ஜன்னல் கதவைச் சற்றே திறந்து வெளியே பார்த்தான்.

யாரும் இல்லை!

செருப்புச் சத்தம் கேட்டதே, அதற்கு என்ன அர்த்தம்?

மரக் கதவில் காதை வைத்துக் கேட்டான்.

சொர சொர என்று கதவை யாரோ சுரண்டுவது போன்ற ஒலி கிச்சாவின் மயிர்க்கால்கள் சிலிர்த்தன. சரேலென்று துப்பாக்கியை உருவினான்.

வெளியே யார் இருந்தாலும் அவன் க்ளோஸ் என்று தீர்மானித்தான்.

உருவிய துப்பாக்கியுடன், மின்னல் வேகத்தில் கதவை சரேலெனத் திறந்தான்.

தொபேர் என்று கதவு வெடித்தது.

கிச்சாவை அப்படியே அள்ளிக் கெந்தி பின்னால் எறிந்தது. கடைசிக் கடைசியாக கதவுக்கு வெளியே சுரண்டியிருக்கக் கூடிய நகங்கள் ஒரு பூனையுடையவை என்று அவன் மனதில் உறைத்தபோது, அவனும், பூனையும் சுக்கு நூறாகி சுற்றுப் பிரதேசத்தில் சிதறியிருந்தார்கள்.



5

அந்த அறைக் காற்றில் மின்சாரம் ததும்பியது.

முகங்கள் இறுக்கமாய் இருந்தன.

கதிரவன் பிரத்யட்சமாகக் கோபமாக இருந்தான். அவன் பேசியபோது குரல் அதிர்ந்து ஒலித்தது. கையால் மேஜையைக் குத்தியபோது, மேஜைப் பலகை நடுங்கியது.

''மூன்று நாட்களுக்குள் இரண்டாவது மரணம்! அதுவும் யார்? கிச்சா! நம்மை எத்தனையோ வழக்குகளிலிருந்து மீட்டவன். அவனுடைய வீட்டுக் கதவிலேயே வெடிகுண்டு வைத்து வெடிக்கும் அளவிற்கு எதிரிக்கு தைரியம் இருக்கிறது. எதிரியா அல்லது துரோகியா என்பது புரியவில்லை...''

கடைசி வார்த்தையைச் சொன்னபோது, அவனுடைய பார்வை இமைகளுக்குக் கீழிருந்து கிருபாவைச் சீண்டியது.



கிருபா அதை கவனித்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை.

ரஞ்சன் தொண்டையைச் செருமினான்.

''எனக்கென்னமோ இது மதியழகனின் வேலையாக இருக்கும் என்றுதான் தோன்றுகிறது.''

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?''

''ஆகாஷை நாம் வீழ்த்தியவுடன் அவன் கோபமாக நம் ஆள் ஒருத்தரைத் தீர்த்துக் கட்ட முடிவு செய்திருக்கலாம். பங்கஜைப் போலவே மேல் மட்டத்தில் இருந்து கிச்சாவைத் தாக்கியிருப்பார்.

''வெடி வைக்கப்பட்டிருக்கிறது, ரஞ்சன். கிச்சாவிற்கு பாதுகாப்பு போதாமல் போய்விட்டது. எப்படியோ அவன் வீட்டுக் கதவு வரை எதிரியால் வர முடிந்திருக்கிறது.''

''நாம் சும்மா இருந்தால் முட்டாள்களாகி விடுவோம், கதிர்...''

''என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?''

''மதியழகனின் தம்பி ராம்சந்த். அவன்தான் லாட்டரிச் சீட்டு பிஸினஸை நடத்திக் கொண்டிருக்கிறான். அவனை ஒரு தட்டு தட்டினால், மதியழகன் மிரண்டு விடுவான்.''

''அவசரம் வேண்டாம், ரஞ்சன். இது உண்மையிலேயே மதியழகன் தாக்குதலா அல்லது நம் குரூப்பின் துரோகி செய்த ஏற்பாடா என்று முதலில் கண்டு பிடிப்போம்.

''துரோகி துரோகி என்று இதுவரை பத்து தடவை யாவது சொல்லிவிட்டாய். யாரை மனதில் வைத்துக்

கொண்டு பேசுகிறாய் கதிர்?'' - கிருபாவின் மூக்கு கோபத்தில் சிவந்து விட்டது. ''இருப்பது நாம் மூவர்தான். நான் துரோகியா, நீ துரோகியா, ரஞ்சன் துரோகியா?''

''துரோகி யாரென்பது அந்த துரோகிக்கே தெரியும். நீ ஏன் கோபப்படுகிறாய், கிருபா?'' - கதிரவன் தன் பங்குக்குக் கத்தினான்.

ரஞ்சன் கைகளைத் தூக்கி சமாதானம் செய்தான்.

''எல்லோரும் டென்ஷனாக இருக்கிறோம். கோபத்தில் அவசரப்பட்டு வார்த்தைகளை எறிந்து விட்டால், அப்புறம் அள்ளுவது கஷ்டம்... நம்மை நாமே தூற்றிக் கொண்டு, ஒருத்தரை ஒருத்தர் சந்தேகப் பட்டோம் என்றால், நம் குரூப்தான் பலவீனமாகிப் போகும்... வேண்டாம், சண்டை வேண்டாம்...''

''கிச்சாவுக்கு இணையாக நமக்கு ஒரு லாயர் கிடைக்க மாட்டான், ரஞ்சன்...'' - கதிரவன் ஆத்திரம் குறையாமல் பேசினான்.

''உண்மைதான்... ஆனால், நாம் என்ன சண்டை போட்டாலும் செத்தவன் உயிர் பிழைக்கப் போவதில்லை. அடுத்து ஆக வேண்டியதைப் பார்ப்போம்...''

''ரைட்... அடுத்து என்ன ஆக வேண்டும்?'' என்று கதிரவன் தலையை அசைத்த போது போன் மணி ஒலித்தது.

''கதிர்!'' என்றது மறுமுனைக் கரகரப்பு. ''பார்த்தாயா, உங்கள் சூரிய வம்சத்தில் இன்னொரு தலை உருண்டு விட்டதை! அடுத்த குறி உனக்குத்தான்...''

''ஏய்!''



''நீ தப்பினால் உன் தளபதி... அவன் தப்பினால் உன் தம்பி... ஒரு வேளை எனக்கு வசதி அமைந்தால்...''

''யாருடா பேசுவது?''

''மூன்று பேருமே கூட ஒரே சமயத்தில் என்னால் கணக்கு தீர்க்கப்படலாம். எதிரியுடன் மோதுமுன், அவன் பலத்தை அறிந்து கொள்வது புத்திசாலித்தனம்...''

''ராஸ்க்...''

மறுமுனை தொடர்பு அறுந்தது.

''யார்?'' என்றான், ரஞ்சன்.

''எதிரியின் பலம் தெரியாமல் மோதுகிறோமாம்...''

''நான் சொல்லவில்லை? இது மதியழகன் வேலைதான்.''

''அவன் தம்பி ராம்சந்த்... இன்னும் இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் அவனுக்கு பூமியில் இடம் ஒதுக்க வேண்டும். ரஞ்சன்... சூரிய வம்சத்தின் பலம் அவர்களுக்குத் தெரிய வேண்டும்!

* * *

எடை பார்க்கும் இயந்திரத்தின் அருகில் ராம்சந்த் நின்றிருந்தான். அவனுடைய இருபுறமும் இரண்டு உதவியாளர்கள் பாக்கெட்டுகளில் நுழைத்த கைகளுடன் நின்றிருந்தார்கள். ராம்சந்தின் கையில் ஒரு சிறு பெட்டி இருந்தது.

நெருக்கமாக வெட்டப்பட்ட தலைமுடி, அடர்ந்த மீசை, பெரிய சிவந்த கண்கள், ஆறடி உயரம், அகலமான

உடம்பு, ஆஜானுபாகுவாக அவன் நின்றிருந்தான். பெட்டியில் அந்த ஏரியாவின் வசூல் இருந்தது.

அவனை நெருங்கி இருபுறமும் நின்றிருந்த இரண்டு பேரும் அவனுக்கு துணையாக வரும் துப்பாக்கி மனிதர்கள். சாதாரணமாக எந்த பிரச்னையும் வந்ததில்லை என்ற போதிலும் எப்போதும் ஆயுதத் துணையுடனேயே பயணம் செய்யச் சொல்லி அவனுடைய அண்ணன் மதியழகன் சொல்லியிருந்தான்.

ராம்சந்த் பார்வையை மேய விட்டான். அந்த ரயில்வே பிளாட்பாரத்தில் ஆங்காங்கே முடிச்சு முடிச்சாக பயணிகள் மின்சார ரயிலுக்காகக் காத்திருந்தார்கள். கூடையில் காய்ந்து போன ஆரஞ்சுகளுடன் வியாபாரக் கிழவி. ரயிலை எதிர்பார்த்து சிகரெட்டை அவனும் அவசரமாக இழுத்துக் கொண்டிருந்த ஆபீசர். நரைத்த தாடியும் தலையில் வட்டத் தொப்பியுமாக முஸ்லீம் கிழவர்.

இரவு மணி ஒன்பதை நெருங்கிக் கொண்டிருந்ததால், ரயில்கள் குறைந்து விட்டன. பிளாட்பாரத்தில் பயணிகள் அதிகம் இல்லை.

ராம்சந்த் ஒற்றைக் கையால் பாக்கெட்டிலிருந்து பாலிதீன் கவரை எடுத்து பல்லாலேயே கிழித்து பீடாவை வாய்க்குள் திணித்துக் கொண்டான்.

தூரத்தில் ரயில் என்ஜினின் வெளிச்ச நெற்றிப் பொட்டு.

பிளாட்பாரத்தில் இருந்தவர்கள் சரசரவென்று உயிர் பெற்றார்கள். பரபரவென்று காற்றால் வருடப்பட்ட துணி போல அசைவுகள்.

பிரகாசமாக நுழைந்து ரயில் நிறுத்தத்திற்கு வந்தது.



ராம்சந்தும் அவன் ஆட்களும் எதிரே இருந்த ரயில் பெட்டியில் ஏறினார்கள். முஸ்லீம் பெரியவர் மட்டும் சற்று தயங்கிவிட்டு ரயில் கிளம்பும் நேரம் அதே பெட்டியில் ஏறினார். மற்றவர்கள் வெவ்வேறு பெட்டிகளில் ஏறியிருந்தார்கள்.

ராம்சந்த் ஏறியவுடன் ரயில் பெட்டிக்குள் பார்த்தான். மொத்தம் எட்டு பயணிகள்தான் இருந்தார்கள். வெவ்வேறு இருக்கைகளில் அவர்கள் பரவியிருந்தார்கள். சிலர் களைத்திருந்தார்கள். சிலர் வாய் பிளந்து தூக்கிக் கொண்டிருந்தார்கள். சிலர் ஜன்னலுக்கு வெளியே விரையும் வெளிச்சங்களை வெறித்துக் கொண்டிருந்தார்கள்.

ராம்சந்த் கடைசியில் இருந்த ஆறு இருக்கை வரிசைக்கு நடந்தான். இருபுறமும் துணைவர்கள் அமர, மத்தியில் அமர்ந்தான். பெட்டியை மடியில் இருத்தி, முழங்கையை அதில் ஊன்றினான்.

முஸ்லீம் கிழவர் தட்டுத் தடுமாறி அத்தனை இருக்கைகளையும் தவிர்த்து அவன் எதிரே வந்து அமர்ந்தார். நீளமான ஷெர்வானியின் பாக்கெட்டிலிருந்து ஒரு மூக்குப் பொடி டப்பா எடுத்து விரலால் தட்டி, சிட்டிகை பொடி எடுத்து சர்ர்ர் என்று உறிஞ்சினார். "ஏய் தாத்தா உனக்கு வேறு இடமா இல்லை?"

முஸ்லீம் பெரியவர் காதில் விழாதவர் போல ஜன்னலுக்கு வெளியே பார்த்தார்.

ராம்சந்த் அவர் முழங்காலைத் தட்டிக் கூப்பிட்டான்.

''அவ்வளவு சீட் காலியிருக்கிறதே... இங்கே ஏன் வந்து உட்கார்ந்தாய், தாத்தா?''

''நானா? கோடம்பாக்கம் வரைக்கும் போகிறேன்'' என்றார், பெரியவர். ''ஸ்டேஷன் வந்ததும் கொஞ்சம் சொல்லுப்பா...''

ராம்சந்த் நெற்றியில் பட்பட் என்று அடித்துக் கொண்டான்.

''செவிட்டுப் பிணம்...''

முஸ்லீம் பெரியவர் அதற்குப் புன்னகைத்து, ''பொடி போடுவாயா?'' என்று பாக்கெட்டில் கை விட்டார்.

''அந்த கண்றாவியெல்லாம் வேண்டாம்...'' என்று ராம்சந்த் சொல்லி முடித்ததும் ப்ளப் என்று சத்தம் கேட்டது.

பெரியவரின் ஷெர்வானி பாக்கெட்டிலிருந்து மெல்லிய புகை.

ராம்சந்தின் மார்பின் நடு மையத்தில் திடீரென்று சிகப்புப் பொட்டு.

அவனுடைய துணைவர்களுக்கு நிலைமை புரிந்து அவர்கள் திடுக்கிட்டு தயாராவதற்குள் ப்ளப் ப்ளப் என்று இன்னும் இரண்டு ஒலித் துணுக்குகள். இரண்டு துணைவர்களின் மார்புகளிலும் பொத்தல்கள், சிகப்பு ஊற்றுகள்.

துப்பாக்கியை பாதி வெளியே எடுத்த நிலையில் ஒருத்தனும், எடுக்கத் துவங்கிய நிலையில் மற்றவனுமாக இருவரும் நடுவில் இருந்த ராம்சந்தின் மீது சரிந்தார்கள்.



முஸ்லீம் பெரியவர் எழுந்தார்.

சைலன்ஸர் பொருத்திய துப்பாக்கியின் ப்ளப் ப்ளப் ரயில் ஓட்டத்தின் சத்தத்தில் கலந்து விட்டிருந்தது. பயணிகள் யாரும் அந்தப் பக்கத்தில் பார்க்கவில்லை.

ரயில் வேகம் குறைந்து அடுத்த ஸ்டேஷனில் நிறுத்தத்திற்கு வந்தது. பெரியவர் லாவகமாக ரயிலிலிருந்து உதிர்ந்தார். பரபரவென்று ஸ்டேஷனை விட்டு வெளியே நடந்தார்.



## 6

''நீயேவா போனாய்?'' என்றான், சுதிரவன். கண்களை அகல விரித்து.

''ஆமாம். நானே தான்...'' என்றான், ரஞ்சன்.

''தனியாகவா?''

''இதற்கு எதற்கு கூட்டாளிகள்?''

''அவ்வளவு சுலபமாக அவர்களைத் தாக்க முடிந்ததா, ரஞ்சன்?''

''முஸ்லீம் பெரியவர் வேஷத்தில் இருந்தேன். நீண்ட ஷெர்வானியில் என் துப்பாக்கி அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. ரயிலில் பயணம் செய்வார்கள்

என்று தெரியும். எந்தப் பெட்டியில் ஏறுகிறார்கள் என்று காத்திருந்து பிடித்தேன்...''

''ஆனாலும் - நீ எடுத்தது பெரிய ரிஸ்க், ரஞ்சன்...''

''இல்லை, கதிர். ஏற்கெனவே உன்னிடம் சொன்னேனே... மதியழகன் குரூப்பில் நம்மைப் போல் தேர்ச்சி பெற்ற வர்கள் இல்லை; அவர்கள் இன்னும் அமெச்சூர்த்தன மாகவே நடந்து கொள்கிறார்கள். பத்திரமாக பயணம் செய்வது எப்படி என்று இன்னமும் அவர்கள் கற்க வில்லை...'' ரஞ்சன் எழுந்து கைகளை உயரத்தி சோம்பல் நெறித்தான்.

கிருபா அவனைத் தோளில் தட்டினான். ''குட் ஜாப்'' என்றான். ஆனால், முகத்தில் புன்னகை இல்லை.

''மதியழகனின் அடுத்த மூவ் என்னவாக இருக்கும், ரஞ்சன்?''

''நம் குரூப்பில் அடுத்தது யாரைத் தட்டலாம் என்று திட்டமிடுவார்கள்... பங்கஜ் விஷயத்திலும், கிச்சா விஷயத்திலும் கோட்டை விட்டது போல இனிமேல் அலட் சியமாக இருக்கக் கூடாது. நாம் அனைவரும் சேர்ந்தே கொஞ்ச நாட்களுக்கு இருக்கலாம் என்று தோன்றுகிறது...''

மேஜையிலிருந்த டெலிபோன் கிணுகிணுத்தது.

''இன்டர்காம்'' என்றான், கதிரவன். ரிசீவர் பட்டனை அழுத்தி மைக்கில் பேசினான்: ''என்ன?''

''கொரியர் சர்வீஸில் ஒரு ஆடியோ காஸெட் வந்திருக் கிறது. சார்...'' என்றது ஸ்ப்பீக்கர்.



''யாரிடமிருந்து?''

''மதியழகனிடமிருந்து...''

கதிரவன் விறைப்பானான். ''அதை நன்றாக திறந்து பார்த்து செக் செய்து விடுங்கள். குண்டு ஏதாவது வெடித்து வைக்கப் போகிறது. வெறும் ஆடியோ காஸெட் தான் என்று உறுதி செய்து கொண்டு உள்ளே அனுப்பு...''

''மதியழகனிடமிருந்து காஸெட்டா? அடுத்த எச் சரிக்கையா'' என்றான், ரஞ்சன்.

''வெற்று மிரட்டலுக்கெல்லாம் என்ன பதில் என்று அவன் தான் பார்த்து விட்டானே'' என்றான், கதிரவன். சற்றே அலட்சியமாக.

ஐந்து நிமிடம் கழித்து காஸெட் உள்ளே வந்து சேர்ந்தது.

ரிக்கார்டரில் போட்டு ஆன் செய்தான் கதிரவன்.

சிறிய, இடைவெளிக்குப் பிறகு மதியழகனின் குரல் ஒலித்தது.

''கதிரவனுக்கும், நண்பர்களுக்கும் வணக்கம்'' என்றது பணிவான குரல். ''நாம் பேசியே ஆக வேண்டிய கட்டம் வந்து விட்டது. கதிரவன். நீங்களும், உங்கள் அணி யினரும் எங்களுக்கு மிகவும் சீனியர்கள். இந்த விவகாரங் களில் நாங்கள் மிகவும் ஜூனியர்கள். எங்களுடைய பலம் எவ்வளவு என்று எங்களுக்குத் தெரியும். உங்களைப் போன்ற பெரிய முதலைகளுடன் மோதி காணாமல் போக நாங்கள் விரும்புவதில்லை. சொல்லப் போனால், உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் எந்தப் பிரதேசத்திலும் நாங்கள் காலடி எடுத்து வைக்கக்கூடத் தயங்குபவர்கள்.

"ஆனால் சமீப காலமாக துரதிர்ஷ்டவசமாக, நமக்குள் அநாவசியமாக ஒரு குழப்பம் வந்து விட்டது. உங்களுடைய ஆட்களில் பங்கஜ் சென்ற கார் வெடித்தது. நான் செய்யும் தொழிலின் மீது சத்தியமாகச் சொல்கிறேன்... பங்கஜின் மரணத்திற்கும் எங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஆனால் மதியழகன்தான் காரணம் என்று எப்படியோ ஒரு தவறான எண்ணம் உங்களுக்குள் பரவி விட்டது. அந்த கோபத்தில் தீர விசாரிக்காமல் எங்களுடைய முக்கியமான நபர் ஆகாஷைத் தீர்த்துக் கட்டினீர்கள்.

"உண்மையில் எனக்கு உங்கள் பேரில் கோபமும், பகை உணர்ச்சியும் முதன் முதலாகத் தோன்றியது. அப்போதுதான். ஆத்திரத்துடன் போனில் பேசினேன். ஆனால் நிதானமாக யோசித்துப் பார்த்த போது நீங்கள் சந்தேகப்பட்டது உங்கள் தரப்பில் நியாயம் என்று புரிந்தது. உங்களுடன் மோதி காயப்பட நாங்கள் யாரும் விரும்பவில்லை. ஆனால் அடுத்ததாக அட்வகேட் கிச்சா வெடித்து இறந்ததைக் கேள்விப்பட்ட போது மிகவும் பயந்து போனேன்.

"கிச்சா இறந்ததற்கும் எங்களுக்கும் எந்த விதத்திலும் தொடர்பு இல்லை. ஆனால் அநாவசியமாக நீங்கள் எங்களைத்தான் சந்தேகப்படுவீர்கள் என்று கவலை எனக்கு இருந்தது. உங்களுடன் நேரில் பேச வேண்டும். பேசி எல்லாவற்றையும் தெளிவு படுத்த வேண்டும் என்று நான் நினைத்திருக்க, அதற்குள் நீங்கள் மறுபடியும் அவசரப்பட்டு விட்டீர்கள். எந்த வம்புக்கும் போகாத



கிளை நூலகம் சங்கனூர் கோவை

எங்கள் ஆட்கள் மூவரை ரயிலில் தீர்த்து விட்டீர்கள். அதில் என் தம்பி ராம்சந்தும் ஒருவன்.

"எனக்கு மிகவும் உதவியாக என் வலது கரமாக இருந்தவன் ராம்சந்த். அவனை உங்கள் ஆட்கள் கொலை செய்தது எனக்கு மிகுந்த அதிர்ச்சியாய் இருக்கிறது. ஒரு அணுகுண்டு எடுத்து உங்கள் எல்லோர் மீதும் எறிந்து விடலாமா என்று ஆத்திரம் கூட வந்தது. ஆனால் யோசித்துப் பார்த்தால், இரண்டு பேருமே இப்படி முட்டாள் தனமாக அடித்துக் கொள்ள ஆரம்பித்தால், நஷ்டம் நமக்குத்தான். இரண்டு தரப்பிலும் அத்தனை தலைகளும் உருண்டு விட்டால், அப்புறம் நம் அணிகளை நடத்திச் செல்ல தகுதியான ஆட்களே இருக்க மாட்டார்கள். அப்படியொரு நிலைமை உருவாவதற்கு முன் நாம் சந்தித்தே ஆக வேண்டும் என்று நினைக்கிறேன்.

"உங்கள் ஆட்கள் ஒவ்வொருத்தராக இறப்பதற்கும் எனக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்பதை மறுபடியும் வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்... உண்மையான பகைவர்கள் யார் என்று நீங்கள் கண்டு பிடிப்பது உங்களுக்கு நல்லது.

"நாம் சந்தித்தே ஆக வேண்டிய கட்டாயத்தில் இருப்பதை நீங்களும் ஒத்துக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். நாம் சந்தித்துப் பேசுவோம். சமரசமான முடிவுகளுக்கு வருவோம். என்னுடைய ஆட்களில் முக்கியமான இரண்டு பேர் இப்போது இல்லை. அதனால் அவர்கள் மூலம் நான் கவனித்து வந்த வியாபாரங்களைக் கூட உங்களுக்கு விட்டுக் கொடுக்கலாம் என்று முடிவு செய்திருக்

25278.

கிறேன். இது பற்றியும் உங்களுடன் விரிவாகப் பேச ஆசைப்படுகிறேன்.

''தயவு செய்து என் உண்மையான நோக்கத்தைப் புரிந்து கொண்டு, நம் சந்திப்பிற்கு உங்களுக்கு சௌகரிய மான ஒரு நேரத்தை ஒதுக்கித் தாருங்கள்... என்றுமே உங்கள் நட்பையும் ஆதரவையும் வேண்டி நிற்பவன் நான்...''

டேப் நின்றது.

கதிரவன் மற்ற இருவரின் முகங்களையும் மாறி மாறிப் பார்த்தான்.

''பயந்து விட்டான்'' என்று வாய் விட்டுச் சிரித்தான், ரஞ்சன். ''சொந்தத் தம்பியே இல்லாமல் போனதும் மிரண்டு விட்டான்.''

''சமரசம் என்கிறான்'' என்றான், கதிரவன். ''விட்டுக் கொடுக்கத் தயாராய் இருக்கிறான். இது வியாபார விஷ யம்... ஆனால் ஒரு சந்திப்பிற்கு சரி என்று சொல்லலாம் என்றுதான் தோன்றுகிறது...''

''வேண்டாம் அண்ணா'' என்றான் கிருபா. ''இதில் ஏதாவது சதி இருக்குமோ என்று எனக்குக் கவலையாய் இருக்கிறது.''

''என்ன சதி செய்து விட முடியும்? அவனை நம் இடத் திற்கு வரச் சொல்வோம்'' என்றான், ரஞ்சன்.

''ஏற்பாடு செய், ரஞ்சன்'' என்றான் கதிரவன்.





# 7

கதிரவனின் கெஸ்ட் ஹவுஸ். ஒன்றரை ஆள் உயர காம்பவுண்டு சுவர்கள் சூழ்ந்த தோட்டப்பகுதி. நீச்சல் குளத்தில் தத்தி வந்த காற்று குளிராக இருந்தது.

தோட்டத்தில் நாற்காலிகள் வட்டமாகப் போடப்பட் டிருந்தன. உயரமான கண்காணிப்பு கோபுரங்களில் துப்பாக்கி ஏந்தியவர்கள் நின்றிருந்தார்கள். நேரம் பின் மதியம் நான்கு மணி.

கெஸ்ட் ஹவுஸின் கேட்டிற்கு நூறடி முன்பாக அந்த தனியார் பாதையின் குறுக்கே சங்கிலிக் கம்பி கட்டப்பட் டிருந்தது. ரஞ்சனும், துப்பாக்கி ஏந்திய நான்கு வீரர்களும் அங்கே காத்து நின்றார்கள்.

ரஞ்சன் சிகரெட்டை எடுத்து ஷூவுக்கடியில் போட் டான். வாட்சைப் பார்த்தான்.

''எந்த நிமிடமும் வந்து விடலாம். 'உஷாராய் இருங்கள்.'' என்றான். அந்த நேர்பாதையில் ஒரு காரின் இரண்டு முன் விளக்குகள் தூரத்தில் தெரிந்தன. நெருங்கி வந்தன. நின்றன.

காண்டெஸா காரிலிருந்து டிரைவர் இறங்கி கதவு திறக்க, மதியழகனும், அவனுடன் இரண்டு பாதுகாப்பாளர் களும் இறங்கினர்.

''குட் ஈவினிங்'' என்றான். ரஞ்சன்.

''குட் ஈவினிங்'' என்றான் மதியழகன்.

கம்பீரமான தோற்றம். கதர்ச் சட்டை, கதர் வேட்டி அணிந்தால் காந்தியின் பக்தன் என்று யாரும் ஒப்புக் கொள்ளக்கூடிய அமைதியான முகம்.

''செக்யூரிட்டி காரணங்களால் உங்களை தர்ரோவாக செக் பண்ண வேண்டியிருக்கிறது. மன்னியுங்கள்'' என்றான், ரஞ்சன்.

''தட்ஸ் ஆல் ரைட்'' - மதியழகன் கைகளை உயர்த்தி உடம்பெங்கும் தட்டிப் பார்க்க அனுமதி தந்தான்.

''இன்னொரு விஷயம் சொன்னால், உங்களுக்குக் கோபம் வரலாம்'' என்று தயங்கி இழுத்தான், ரஞ்சன்.

''எதுவாய் இருந்தாலும் தயங்காமல் சொல்.''

''அதாவது வந்து...''

''சொல்லப்பா.''

''இப்போது உள்ள சூழ்நிலையில் நாங்கள் அதிக கவனமாக இருக்க வேண்டியிருக்கிறது. அதனால் உங்கள் உடைகளைக் கூட அனுமதிக்க வேண்டாம் என்று உத்தரவு.''

மதியழகனின் முகம் இறுகியது.

''வாட் டூ யூ மீன்? நான் என்ன அம்மணமாக உள்ளே போக வேண்டுமா?''

''அவசரப்பட்டு கோபப்படாதீர்கள். ஆஸ்பத்திரியில் இருப்பது போல இங்கேயும் உங்களுக்கு ஒரு செட்



உடைகள் வைத்திருக்கிறோம். அதே போன்ற உடைதான் எங்கள் தலைவர் கதிரவனும் அணிந்திருக்கிறார். ஷூவிலிருந்து சட்டை காலர் வரை இப்போது எதையுமே நம்ப முடியவில்லை'' என்றான், ரஞ்சன்.

மதியழகனின் முகம் முதலில் இறுகியது. சில நொடி களுக்குப் பின் அதில் மெல்ல ஒரு புன்னகை மலர்ந்தது.

''உங்கள் பயம் புரிகிறது. எங்கே நான் உடை மாற்ற வேண்டும்?''

''இதோ அந்த அறையில்.''

சுட்டிக் காட்டப்பட்ட அறைக்குள் மதியழகன் நுழைந் தான். வெளியே வந்தபோது வெளிர் சாம்பல் நிறத்தில் சபாரி போன்ற உடை தரித்திருந்தான். அவனுடைய காவலர்களும் தத்தம் ஆயுதங்களை சமர்ப்பித்து விட்டு உடை மாற்ற வேண்டும் என்றபோது மதியழகனின் முகம் மீண்டும் இறுகியது.

''நிராயுதபாணியாக கதிரவன் முன்னால் நான் நிற்க வேண்டுமா? உங்கள் ஆட்கள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு என்னைத் தீர்த்துக் கட்ட மாட் டார்கள் என்று என்ன நிச்சயம்?''

''நியாயமான கேள்வி'' என்றான், ரஞ்சன். ''ஆனால் யோசித்துப் பாருங்கள். இந்த சந்திப்பு வேண்டும் என்று ஆசைப்பட்டது நீங்கள். நாங்கள் அல்ல. சந்திக்க வரும் போது எங்களுடைய கோட்பாடுகளுக்கு தலை வணங் கித்தான் ஆக வேண்டும். இரண்டாவது அப்படியே நிராயுதபாணியாக்கி உங்களை இங்கே தீர்த்துக் கட்டினால் எங்கள் நிலைமை என்ன ஆகும் என்று யோசியுங்கள். நாம்

செய்வது ஒப்பந்தமில்லாத ஒரு வியாபாரம். இதில் பரஸ்பர நம்பிக்கைதான் வெகு முக்கியம். உங்களை சாமர்த்தியமாக நிராயுதபாணியாக்கி தீர்த்துக் கட்டினால், மற்ற குருப்புகள் எங்களுடன் பேச்சு வார்த்தை நடத்த வருவார்களா, யோசியுங்கள். மார்க்கெட்டில் எங்கள் பெயர் என்ன ஆகும்? யோசியுங்கள்.''

மதியழகன் தோள்களைக் குலுக்கினான். ''மீட்டிங் எங்கே?''

''அதோ அங்கே தோட்டப் பகுதியில். இங்கே இருக்கும் வரை தைரியமாய் இருக்கலாம் நீங்கள்.''

மதியழகனும் அவனுடைய இரு காவலர்களும் கேட் தாண்டி தோட்டப் பகுதியில் நுழைந்தனர்.

தோட்டத்தில் மரங்களின் நீளமான நிழல்கள் படுத்திருந்தன. பெயர் தெரியாத பட்சிகள் க்ரீச் க்ரீச் என்று சப்தம் எழுப்பின. இரண்டு அணில்கள் ஒன்றை ஒன்று துரத்தின.

வட்டமாய் போட்ட நாற்காலிகளில் ஒன்றில் மதியழகன் வந்து உட்கார்ந்தான். அவனுடைய இருபுறமும் இரண்டு துணைவர்களும் நின்று கொண்டார்கள்.

திடீரென்று கதிரவனும், கிருபாவும் பிரசன்னமானார்கள். கதிரவன் சைகை செய்து ரஞ்சனையும் வந்து பேச்சில் கலந்து கொள்ளச் சொன்னான்.

''உங்கள் கேசட் கேட்டேன், மதி... சந்திப்பது அவசியம் என்று எனக்குப் பட்டது. அதனால் தான் கூப்பிட்டேன்..'' என்றான் கதிரவன்.



ரஞ்சன் உட்காராமல் பார்வையை நான்கு பக்கமும் மேய விட்டபடி நின்றிருந்தான்.

''அநாவசிய சந்தேகங்களால் நான் என் தம்பியையே இழந்து விட்டேன்'' என்றான் மதியழகன். ''உங்கள் தரப்பில் நிகழும் எந்த மரணத்திற்கும் நான் பொறுப்பு இல்லை.''

''அப்படியானால் போனில் மிரட்டியது?'' என்றான் கிருபா.

''ஆகாஷ் இறந்தபோது ஆவேசப்பட்டு நான் போன் செய்தது உண்மை. ஆனால் என் தம்பி கொல்லப்பட்ட போது நான் போன் செய்து பேசுவதை விட காஸெட்டை அனுப்புவது மேல் என்று முடிவு செய்து விட்டேன்.''

''ராம்சந்த் இறந்த பிறகும் ஒரு மிரட்டல் போன் வந்ததே.''

''சத்தியமாக நான் போன் செய்யவில்லை.'' மதியழகன் அழுத்தந்திருத்தமான குரலில் சொன்னான்.

''சரி நடந்து போனதை விட்டு விடுவோம். இனி நமக்குள் ஒரு தெளிவு வந்து விட்டால் பிரச்னை இல்லை'' என்றான் கதிரவன். ''இரண்டு குருப்களும் கலந்து பேசி, எந்தெந்த எல்லை வரை இயங்கலாம் என்பதை இப்போது முடிவு செய்வோம்.''

தமிழ்நாட்டின் விவரமான ஒரு வரை படம் மேஜையின் மீது பிரிக்கப்பட்டது.

கலர் பென்சில்களை வைத்து அவர்கள் கோடுகள் இழுத்து பேசிக் கொண்டிருக்கையில் திடீரென்று ரஞ்சன்

விரைந்தான். ஒரே பாய்ச்சலாக கதிரவன் மீது பாய்ந்து அவனைக் கீழே தள்ளினான்.

மேஜை மீதிருந்த கண்ணாடி டம்ளர் சிலீர் என்று நொறுங்கி பறந்தது.

''டௌன்'' என்று ரஞ்சன் கத்தியதும், கிருபாவும், மதியழகனும், தொபேல் என்று நாற்காலிகளைத் தள்ளி விட்டு தரையில் படுத்தார்கள்.

ரஞ்சன் கதிரவனை விடுத்து, தன் துப்பாக்கியை உருவி ஒரு மரக்கிளையைப் பார்த்து சுட்டான்.

அந்த மரம் காம்பவுண்டிற்கு வெளியே இருந்தது.

ரஞ்சன் சுட்டதும் மரக்கிளைகள் சலசலத்தன. அசைவுகள் புலப்பட்டன. ரஞ்சன் அந்த திசை நோக்கி ஓட ஆரம்பித்தான்.

நடந்தது எதுவும் புரிவதற்கு கதிரவனுக்கு சில நொடிகள் பிடித்தன.

டிஷ்யூம் என்ற சத்தம் காற்றைக் கிழித்தது. மரத்தை நோக்கி ஓடிக் கொண்டிருந்த ரஞ்சன் ''ஹம்மா'' என்று கத்தினான். துள்ளி விழுந்தான்.

கண்காணிப்பு கோபுரத்தில் இருந்த காவலர்கள் தத்தம் இயந்திரத் துப்பாக்கிகளை அந்த சலசலத்த மரம் நோக்கித் திரும்பினர். தபதப என்று சுட்டனர்.

சில விநாடிகளில் எங்கும் நிசப்தம்.

கதிரவன் விழுந்த இடத்திலிருந்து எழுந்தான்.

ரஞ்சனை நோக்கி பரபரப்பாக ஓடி வந்தான். ரஞ்சன் சுருண்டிருந்தான். தோளிலிருந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது.



''ரஞ்சன் என்னாயிற்று?''

ரஞ்சன் தோளை அழுத்திப் பிடித்தபடி எழுந்தான். ''நத்திங்'' என்றான். ''ஒரு குண்டு பாய்ந்து விட்டது.''

தோளை அழுத்திப் பிடித்தபடி ரஞ்சன் காம்பவுண்டு தாண்டி அந்த மரத்தை நோக்கி ஓடினான்.

கதிரவனின் ஆட்கள் சிலரும் அவன் பின்னாலேயே ஓடினார்கள். மதியழகனும், கிருபாவும் நாற்காலிகளுக்குப் பின்னிருந்து மெல்ல எழுந்தார்கள்.

மரத்தடிக்கு ஓடிப் போனார்கள். திரும்பி வந்தார்கள்.

''தப்பித்து விட்டான்'' என்றார்கள்.

மதியழகனின் முகம் இறுகியிருந்தது.

''ரஞ்சன் மட்டும் என்னை சரியான சமயத்தில் கீழே தள்ளவில்லை என்றால், கண்ணாடி டம்ளரில் பாய்ந்த தோட்டா என் மண்டையில் பாய்ந்திருக்கும்'' என்றான் கதிரவன்.

''அந்த மரத்தில் வட்டமாக ஏதோ ஒரு கண்ணாடி மின்னியது. உடனடியாக உஷாராகி கதிரவனை கீழே தள்ளினேன்'' என்றான் ரஞ்சன். ''டெலஸ்கோபிக் துப்பாக்கி வைத்து கதிரவனை யாரோ குறி பார்த்திருக்கிறார்கள்.''

மதியழகன் உடனடியாக கதிரவனின் கையைப் பற்றினான். ''இப்போதும் சொல்கிறேன். எனக்கும் அந்த ஆளுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. நமக்குக் குழப்பம் உண்டாக்க யாரோ முயற்சி செய்கிறார்கள்.

''கதிர் இனிமேலும் இங்கே திறந்த வெளியில் பேச வேண்டாம். உள்ளே போய் விடுங்கள்'' என்றான். ரஞ்சன்.

கதிரவன் கிருபாவைத் தோளில் தட்டினான். "கிருபா ரஞ்சனை முதலில் டாக்டரிடம் அழைத்துப் போ க்விக்."

"கதிர் மீட்டிங் முடியும் வரை நான் விரும்பவில்லை" என்றான் ரஞ்சன்.

"நோ ரஞ்சன்.. ரத்தம் வீணாகிக் கொண்டிருக்கிறது. நீ உடனே டாக்டரிடம் போ.. இங்கே நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றான் கதிரவன் அழுத்தமாக.

* * *

"நல்ல வேளை" என்றார் டாக்டர், "தோட்டா தோளை அழுத்தமாக உரசியிருக்கிறது. சதையைக் கொஞ்சம் வெட்டியிருக்கிறது. அவ்வளவுதான். இரண்டு தையல் போட்டிருக்கிறேன். போதும் சர்ஜரியெல்லாம் தேவையில்லை. நான்கு நாளில் தையலைப் பிரித்து விடலாம்."

"ஆனாலும் இது எனக்கு அவமானம் தான் டாக்டர்." என்றான் ரஞ்சன். "நான் இன்னும் ஷார்ப்பாக இருந்திருக்க வேண்டும்.

"நீ இவ்வளவு அலர்ட்டாக இருந்ததால்தான் அண்ணன் தப்பித்தான். நீ மட்டும் இல்லையென்றால்" கிருபாவின் உடல் உதறியது. யார் ரஞ்சன் அங்கிருந்து சுட்டிருக்க முடியும்?

"தோட்டத்தில் மதியழகனுடன் சந்திப்பு இருக்கிறது என்பது பற்றி தெரிந்த யாரோ தான்..." என்றான் ரஞ்சன் கிருபாவை கீழ்க் கண்ணால் பார்த்துக் கொண்டே.

கிருபா திடுக்கிட்டு நிமிர்ந்தான். "நாம் யாரிடமும் டிஸ்கஸ் பண்ணவில்லை, ரஞ்சன்."



"உன்னைச் சொல்லவில்லை கிருபா. செக்யூரிடி ஏற்பாடுகளுக்காக எவ்வளவோ பேரிடம் பேசத் தானே வேண்டியிருக்கிறது. யார் வேண்டுமானாலும் முயற்சி செய்திருக்கலாம்."

"மதியழகன்?"

"எனக்கென்னவோ இந்த முறை அவன் பேரில் எந்த சந்தேகமும் வரவில்லை. அவனும் அந்த ஸ்பாட்டில் இருக்கும்போது அப்படியொரு ரிஸ்க் எடுக்க மாட்டான்." என்றான் ரஞ்சன்.

"மீட்டிங் நமக்கு சாதகமாகத் தான் முடிந்திருக்கும். வா போய்ப் பார்க்கலாம்" என்று டாக்டருக்கு நன்றி சொல்லி விட்டு, கிருபாவை அழைத்துக் கொண்டு புறப்பட்டான், ரஞ்சன்.



# 8

கிருபா படுக்கையில் புரண்டான். கை நீட்டி ஜன்னல் திரையை விலக்கினான். சூரிய வெளிச்சம் பட்டை பட்டையாக அறைக்குள் பிரவேசம் செய்தது. எழுந்தான்.

கட்டிலிலிருந்து இறங்கியவுடன் உடல் எங்கும் சுறுசுறுப்பு மாறியது. தோப்புக்கரணம் போடுவது போல் கால்களை மடக்கி கீழே உட்கார்ந்து எழுந்தான். பாத்ரூமில் நுழைந்தான்.

பல் தேய்த்து வெளியே வந்து விளையாட்டு உடைக்கு மாறினான். வீட்டின் கீழ்த் தளத்தில் இருந்த ஜிம் அறைக்குச் செய்தித்தாளுடன் போனான். தினம் தவறாமல் செய்யும் உடற்பயிற்சிகளை மும்முரமாகச் செய்தான். உடல் எங்கும் வியர்த்து பனியனும் ட்ராக் சூட்டும் நனைந்தன.

கடைசி பயிற்சி முடிந்ததும், சாய்வு நாற்காலியில் சரிந்து உட்கார்ந்தான்.

அவனுடைய புஜமும், மார்புகளும் வலுவாகியிருப்பதை அவனாலேயே உணர முடிந்தது.

கதிரவனுக்குப் பிறகு இந்த சாம்ராஜ்யத்தை ஆள வேண்டிய பொறுப்பு இருந்தது. கதிரவன் உயிருடன் இருக்கையில், அவனுக்கு வெகு உதவியாக அத்தனை நொடிகளிலும் கூர்மையாக இருக்க வேண்டும்.

கதிரவனை நினைத்தால் அவனுக்குப் பெருமையாய் இருந்தது. எவ்வளவு சிறிய வயதில் என்ன ஒரு மேன்மை!

நெருக்கடியான கட்டங்களில் கூட மூளை மக்கர் செய்வதில்லை. உடனடியாக யோசித்து, உடனடியாக முடிவு எடுக்க கதிரவனால் மட்டும் முடிகிறது. நேரம் கடத்தாத முடிவுகளால் அவர்கள் அணிக்கு எவ்வளவு லாபம் வந்திருக்கிறது.

கதிரவனுடன் நெருக்கத்தில் இருக்க வேண்டும். அவன் பிரச்னைகளைக் கையாளும் விதத்தை உடனிருந்து கற்க வேண்டும். வாரிசு முறையில் அடுத்த தலைவனாவது பெரிதில்லை. தோளில் சுமக்கும் பாரத்தை தொய்வில்லாமல் சுமக்கத் தெரிய வேண்டும்.



கிருபா அன்றைய செய்தித்தாளை திறந்தான்.

இதுவும் அன்றாடப் பழக்கம் தான். செய்திகளைகூட முதல் பக்கத்திலிருந்து கடைசி பக்கம் வரை அலசி ஆராய்வதில் அவனுக்கு எப்போதுமே ஒரு அவசியம் இருந்திருக்கிறது.

அவனுடைய இந்த பிரத்யேக ஜிம்னாஸியத்தில் சுத்தம் செய்பவர்களைத் தவிர வேறு யாருக்கும் அனுமதி இல்லை. அவனை யாரும் இங்கே தொந்தரவு செய்வதில்லை.

மூன்றாவது பக்கத்தில் செய்திகளை அவன் மேய்ந்து கொண்டிருக்கும்போது சின்னதாக ஒரு உலோகச் சத்தம் கேட்டது.

க்ளிங்!

கிருபா விரைத்தான்.

செய்தித்தாளை அவசரமாக மூடினான்.

அவனுடைய பிரத்யேக ஜிம்னாஸியத்திற்குள் யாராவது நுழைந்து விட்டார்களா என்ன?

செய்தித் தாளைக் கீழே வைத்து விட்டு பரபரப்பாக எழுந்தான். காதுகளை கூர்மையாக்கிக் கொண்டான்.

உலோக சத்தம் மறுபடி வருகிறதா? கவனமாய்க் கேட்டான். இல்லை. ஆனால் ஷூக்கள் இரண்டு அந்த மொஸைக் தரையில் முத்தமிட்டு நகர்வது புரிந்தது.

அருகில் இருந்த இரும்புத் தடி ஒன்றை உருவினான்.

"யாரது?" என்று குரல் கொடுத்தான்.

அவனுடைய குரல் மூடப்பட்ட அந்த அறையின் சுவர்களில் மோதி அவன் மீதே எதிரொலித்தது.

குபீர் என்று அடிவயிற்றில் அவனை பயம் கவ்வியது. தனியாக இருப்பது ஆபத்து. ரஞ்சனை உடனே துணைக்குக் கூப்பிடுவது தான் புத்திசாலித்தனம். செல்லுலார் போனை வைத்திருந்த இடத்திற்கு நகர்ந்தான். இடுப்புப் பயிற்சி செய்யும் கருவிகள் அருகில் சிறிய ஸ்டூலின் மீது வைத்திருந்த செல்லுலாரை நோக்கி அவன் உடற் பயிற்சி இயந்திரங்களினூடே நகர்ந்தான்.

எதிராக கூட முயற்சித்தால் அவனுக்கு அனுகூலமாய் இருக்கக் கூடாது என்று தலையை நிமிராமல் உடலைக் குனிந்தபடி நகர்ந்தான். செல்லுலாரிலிருந்து நான்கடி தூரத்தில் இருந்தபோது ஒரு இரும்புத் தடி சுழன்று வந்து செல்லுலார் போனைத் தாக்கியது. செல்லுலார் எகிறிப் போய் விழுந்தது. இரண்டாகப் பிளந்தது.

கிருபா திடுக்கிட்டான். அவனுடைய அசைவுகளை எதிரி கவனித்துக் கொண்டிருக்கிறான் என்ற உண்மை அவனை நிலைகுலையச் செய்தது.

அப்படியே உறைந்தான். அசையாமல் உட்கார்ந்து சப்தங்களுக்காகக் காத்திருந்தான். இப்போது ஷூ சத்தமும் இல்லை.

யாரது? என்று உறக்க கேட்க வேண்டும் போல் எழுந்த ஆவலை அடக்கினான். அவனே குரல் கொடுத்து அவன் இருக்கும் இடத்தை துல்லியமாகக் காட்டிக் கொடுக்கக் கூடாது.

இப்போது மட்டும் ரஞ்சன் உடனிருந்தால் எவ்வளவு தைரியமாய் இருக்கும்!

வெகு திடீரென்று அவன் ஒளிந்திருந்த இயந்திரத்தின் பின்னே மிக மெல்லிய அசைவு.



திடுக்கிட்டுத் திரும்பினான். கனமான ஏதோ ஒன்று அவன் தலையின் மீது இறங்குவதை காற்று சொன்னது. ஆனால் அதைத் தவிர்க்கும் முன்...

மண்டையில் ஒரு இடி. ஆகாயம் பிளப்பதை அவன் உணர்ந்தான். மல்லார்ந்தான்.

இயந்திரத்திற்குப் பின்னிலிருந்து தாக்கியவனின் முகம் உயர்ந்தது.

'நீ நீயா?' என்ற கேள்வி கிருபாவின் உதடுகளில் உரைந்தது. அதிர்ச்சிப் பார்வை கண்களில் உறைந்தது. உயிர் உடலுக்கு வெளியே உறைந்தது.



## 9

''இன்க்ரெடிபில்... கொயட் இன்க்ரெடிபில்...'' - நம்ப முடியாமல் தலையை இடதும் வலதுமாக அசைத்து உதறினான், கதிரவன்.

''உன் இங்கிலீஷ் எனக்குப் புரியலையே'' என்றான், ரஞ்சன்.

''இது எப்படி சாத்தியம் ரஞ்சன்? கிருபாவின் வீட்டிற்குள் அவனுடைய ஜிம்னாஸியத்திற்குள் ஒருத்தனால் நுழைய முடிந்திருக்கிறது!''

ரஞ்சன் உடைத்து திறக்கப்பட்ட ஜன்னலை சுட்டிக் காட்டினான் ''ஜிம் பூமி மட்டத்திற்குக் கீழே இருக்கிறது.

ஜன்னல் பூமி மட்டத்தை ஒட்டி இருக்கிறது. யாரோ ஏற்கனவே உடைத்து உள்ளே நுழைந்து காத்திருக் கிறார்கள்.''

''யார் இப்படி வர முடியும், ரஞ்சன்?''

''ஃமன்!'' ரஞ்சன் தோள்களை குலுக்கினான். ''போலீஸைக் கூப்பிட்டால் கைரேகை பார்த்துக் கண்டு பிடிப்பார் களாயிருக்கும்...''

''போலீஸை நம் காம்பவுண்டிற்குள் அனுமதிப்பதே யில்லையே ரஞ்சன். ராம்சந்த் மதியழகனின் தம்பி. அவனை நாம் தீர்த்தவுடன் அவன் பழிக்குப் பழியாக என் தம்பியை...''

''இருக்கலாம். சமரசம் என்று நாடகமாடி விட்டு, முது கில் கத்தியைக் கொண்டு வந்து இறக்கியிருக்கலாம்...''

''நாம் சும்மா கை கட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பதா ரஞ்சன்?''

''என்ன செய்ய வேண்டும், சொல், கதிர். கிருபாவைப் பார்த்த காட்சி என் அடிவயிற்றையே கலக்கி விட்டது.''

''அந்த குரூப்பின் முக்கிய துருப்புச் சீட்டே வேண் டாம். ரஞ்சன் மதியழகனுக்கும் முடிவு கட்டலாம்...''

கதிரவனின் உடல் ஆத்திரத்தில் நடுங்கியது. அவன் கையூன்றிய உடற்பயிற்சி இயந்திரம் அந்த இயக்கத்தில் இடதும் வலதுமாக சுழன்றது.

''மதியழகனையா?'' - ரஞ்சன் சரேலென்று திரும்பிக் கேட்டான்.

''ஆமாம்...''



''அப்படியானால் கிருபா இறந்தது வெளியே யாருக்கும் தெரியக்கூடாது. கதிர் முக்கியமாய் மதியழகன் குரூப் பிற்கு...''

''என்ன சொல்கிறாய், ரஞ்சன்?''

''கிருபா இறந்தது தெரிந்தால் மதியழகன் உஷாராகி விடுவான். தலைமறைவாகி விடுவான்.''

''என்ன பேத்துகிறாய்? கிருபாவைத் தீர்த்து மதியழகன் குரூப்பாக இருந்தால், அவர்களுக்கு இந்நேரம் இது தெரிந்திருக்காதா?''

ரஞ்சனைக் கூர்மையாகப் பார்த்துக் கேட்டான், கதிரவன்.

ரஞ்சன் பார்வையை விலக்கினான். ''ஆனால் கதிர், கிருபா இறந்தது நமக்கே தெரியாதது போல் நடந்து கொண்டால்?''

''எப்படி?''

''ஏற்கனவே உங்களுக்குள் ஒரு சுற்று பேச்சு முடிந் திருக்கிறது. அது பற்றி இன்னும் கொஞ்சம் பேச வேண் டும் என்று மதியழகனிடம் சொல். சில விவரங்களைத் தெளிவாக்கிக் கொள்ள இன்னொரு சந்திப்பு வேண்டும் என்று சொல். இன்றிரவு சந்திப்பை வைத்துக் கொள்ளலாம் என்று சொல்... வேண்டுமென்றால் மதியழகன் சொல்லும் இடத்தில் சந்திப்பை வைத்துக் கொள்ளத் தயார் என்று சொல்...''

''அவனுடைய இடத்திற்குப் போனால், நமக்கு ஆபத்து இல்லையா, ரஞ்சன்?''

''பொதுவான இடத்தில் சந்திக்கலாம்...'' என்றான், ரஞ்சன்.

''கிருபா இறந்தது இப்போது எனக்கும், உனக்கும், கிருபா வீட்டில் இருந்த வேலைக்காரன் மூவருக்கு மட்டும் தான் தெரியும். இந்த மூன்று பேரைத் தவிர நம் குரூப்பிலேயே வேறு யாருக்கும் தெரிய வேண்டாம்'' என்றான், கதிரவன். ''நான் மதியழகனுடன் பேசிப் பார்க் கிறேன்...''

''எந்தத் தோட்டாவும் துளைக்க முடியாத ஒரு புல்லட் புரூப் கோட் உனக்குத் தயார் செய்கிறேன்...'' என்றான், ரஞ்சன்.

* * *

மாலை ஏழு மணி. சூரியன் விலகி இருள் சூழ்ந்த நேரம். தெரு விளக்குகள் கண் சிமிட்டி விட்டு விழித்தன.

ரஞ்சன் தன் வீட்டின் முன்னறையில் இருந்தான்.

கதிரவன் அணிவதற்கான கோட்டை தயார் செய்திருந் தான். அதன் இறுதித் தையல்களை முடித்தான். தொட்டுப் பார்த்தான். மிருதுவான பஞ்சுப் பகுதிகள் கூடுதலாய் இருந்ததால் அது வெளிப்பார்வைக்கு ஒரு சாதாரண கோட் போலத் தான் தோற்றமளித்தது.

தன்னுடைய வேலையை தானே ரசித்துக் கொண் டிருந்தபோது வாசல் மணி அழைத்தது.

அவசரமாக கோட்டை இரண்டாக குறுக்கில் மடித்து ஒரு பாலிதீன் கவரில் வைத்தான்.

கதவில் இருந்த மேஜிக் ஐ மூலம் பார்த்தான்.

மதுவந்தி!

இவள் எங்கே இந்நேரம்?

கதவை சற்றே திறந்து, ''மது, நீயா?'' என்றான்.



''ஏன் உள்ளே வரக் கூடாதா?'' மதுவந்தி கொஞ்சலாகக் கேட்டாள்.

ரஞ்சன் கதவை முற்றிலும் திறந்தான்.

மதுவந்தி அவனை உரசிக் கொண்டு உள்ளே நுழைந் தாள்.

''மது... கொஞ்ச நாட்களுக்கு நாம் சந்திக்க வேண்டாம் என்று சொல்லியிருந்தேனே...''

மதுவந்தி பட்டீர் என்று கைகளை அடித்துக் கும் பிட்டாள்.

''யப்பா உங்களை கடித்துத் தின்ன நான் வரவில்லை. கொஞ்ச நேரம் பேசக் கூடத் தடையா?''

''பேசு. என்ன வேண்டுமோ, பேசு.''

மதுவந்தி கதவைச் சாத்தினாள். உள்ளே வந்து கட் டிலில் உட்கார்ந்தாள்.

''ஏன் ரஞ்சன் ரொம்ப டென்ஷனாக இருக்கிறீர்கள்? எப்போதும் ஜாலியாக சிரித்த மூடில் இருக்கும் நீங்கள் ஏன் இப்படி மின்சாரத்தை முழுங்கியவர் போல் இருக்கிறீர்கள்?''

''என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது உனக்குத் தெரியுமா, மது?''

''தெரியும்... பரபரப்பாக எல்லாரும் நம் குரூப் ஹோட் டல்களில் பேசிக் கொண்டு தானே இருக்கிறார்கள். அடுத்த குறி கிருபாவா, ரஞ்சனா என்று தெரியவில்லை என்று கூடப் பேசினார்கள். அதையெல்லாம் கேள்விப் பட்டால் உடனே ரஞ்சனைப் பார்க்க வேண்டும் என்று தான் தோன்றுகிறது. கடைசி நாட்களை ரஞ்சனுடன் செலவு செய்யலாமே என்று தான் தோன்றுகிறது...

கமான்... ஏன் விறைப்பாக அங்கேயே நிற்கிறீர்கள்? இப்படி வந்து உட்காருங்களேன்.''

''மது இப்போது எனக்கு கொஞ்சுவதற்கு மூடு இல்லை... எனக்கு வேலைகள் இருக்கின்றன... அவசர வேலைகள்...''

''உங்கள் நேரத்தை வீணடிக்க மாட்டேன்... ஒகே? உண்மையில் நான் வந்ததே உங்களுக்கு ஒரு விஷயம் காட்டுவதற்காகத்தான்...''

''என்ன?''

''போன தடவை வந்திருந்தேனே. கிளம்பும் போது பார்த்தால் செருப்பு அறுந்திருந்தது. இங்கேயிருந்து பேப்பர் எடுத்து அப்படியே செருப்பை சுற்றி எடுத்துக் கொண்டு போய் விட்டேன்...''

''அதனால் என்ன?''

''அந்த பேப்பர் உங்களுக்கு வேண்டுமென்று எனக்கு தோன்றியது எடுத்து வந்தேன்...''

''என்ன மது, பேத்துகிறாய்? செருப்பைச் சுற்றி எடுத்துப் போன பழைய பேப்பர் வேண்டுமென்று நான் கேட்பேன் என்று எடுத்து வந்தாயா?''

''ஆமாம். இந்த பேப்பரில் ஒரு குறிப்பிட்ட நியூஸை சிகப்புப் பேனாவால் வட்டமிட்டு வைத்திருக்கிறாய்...''

ரஞ்சன் திடுக்கிட்டான். ''எங்கே பேப்பரைக் காட்டு...''

மதுவந்தி தன் ஹேண்ட் பேகிலிருந்து நான்காய் மடித்த பேப்பரை வெளியே எடுத்தாள். நீட்டினாள்.

**கம்பெனி பணம் மோசடி!**

**குடும்பத்தோடு தற்கொலை!!**



அந்தத் தலைப்புச் செய்திகளைப் பார்த்ததும் ரஞ்சனின் உடம்பு நடுங்கியது.

பேப்பரை கையில் வாங்கினான். பொத்தென்று நாற்காலியில் உட்கார்ந்து விட்டான்.

''இந்த... இந்த... நியூஸைப் படித்தாயா, மது?''

''இது போல் தினமும் தான் நூறு நியூஸ் வருகிறது. இதற்கு என்ன சிறப்பு, ரஞ்சன்?''

ரஞ்சன் பேப்பரை மடியில் பிரித்தான்.

அவன் கண்களில் நீர்த்திரை, அதனூடே அந்தப் பக்கத்தில் வெளியாகியிருந்த புகைப்படங்களைக் காட்டினான்.

''இவர்கள் எல்லாம் யார் தெரியுமா, மது?''

''எனக்கு எப்படித் தெரியும்?''

''நியூஸை சத்தமாகப் படி...'' என்றான்.

மதுவந்தி படித்தாள்.

''நேற்று சென்னையில் ஒரு குடும்பமே பரிதாபமாக விஷம் குடித்துத் தற்கொலை செய்து கொண்டது. ஒரு தனியார் கம்பெனியில் வேலை பார்ப்பவர் சுந்தரம். ஐம்பது வயதான சுந்தரத்திற்கு தனசேகரன் என்று ஒரு மகனும், பொன்னி என்று ஒரு மகளும் உள்ளனர். மகளின் திருமணம் நிச்சயிக்கப்பட்டு இன்னும் இருபது நாட்களில் நடைபெற இருக்கிறது.

''மகள் திருமணத்திற்காக மாப்பிள்ளை வீட்டார் கேட்ட சீர்வரிசைப் பணத்தை ஏற்பாடு செய்ய முடியாத நிலையில் சுந்தரம் கம்பெனியில் கடன் கேட்டிருந்தார்.

கடன் அனுமதிக்கப்படவில்லை. இந்த நிலையில் நேற்று வங்கியில் பணம் எடுக்கப் போயிருந்தாரே. அவரே கம்பெனி காரை ஓட்டிப் போய் பணம் எடுத்து வருவது வழக்கம். நேற்று ரூபாய் ஆறு லட்சத்துப் பத்தாயிரம் வங்கியிலிருந்து எடுத்தவர், பாங்கியிலிருந்து கிளம்பி நாற்பது நிமிடங்களுக்குப் பிறகு கம்பெனிக்குப் போன் செய்து அந்தப் பணம் அவரிடமிருந்து கொள்ளையடிக்கப் பட்டு விட்டதாகச் சொன்னார். காருக்குள் இரண்டு ஆட்கள் இருந்து மிரட்டியதாக அவர் சொன்னதை நம்பாத போலீஸ் அவரையே சந்தேகப்பட்டது.

''இந்த நிலையில் போலீஸும் கம்பெனி முதலாளியும் சந்தேகப்பட்டதால் இனி உயிர் வாழ விருப்பமில்லை என்று சொல்லி சுந்தரம், அவர் மனைவி, மகள் பொன்னி ஆகியோர் உணவில் விஷம் கலந்து சாப்பிட்டனர். காலையில் பிணங்களாக அவர்கள் கண்டெடுக்கப்பட்டார்கள்.

''சுந்தரத்தின் கைப்பட இது குறித்து ஒரு கடிதம் எழுதப்பட்டுள்ளது. மகளின் திருமணம் தடைப்பட்டதால் அவளும் அவமானம் தாங்காமல் இறப்பதாக அக்கடிதம் சொல்லியது...''

''சுந்தரத்தின் மகன் தனசேகர் இந்த விஷத்தால் இறக்கவில்லை. தனசேகர் வீட்டிலும் இல்லை. வீட்டின் பின் கதவு திறந்த நிலையில் காணப்பட்டதால், தனசேகர் வீட்டை விட்டு ஓடியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.''

மதுவந்தி நிறுத்திவிட்டு நிமிர்ந்தாள்.

ரஞ்சனின் கண்களில் கண்ணீரைப் பார்த்துத் திகைத்தாள்.

''ரஞ்சன், என்ன ஆயிற்று உங்களுக்கு?''



''அந்த போட்டோக்களை பார்த்தாயா மது? சுந்தரம், அவர் மனைவி, மகள் பொன்னி... அந்த முகங்களைப் பார்... திருடக் கூடிய குடும்பம் போலா இருக்கிறது?''

''அதற்காக நீங்கள் ஏன் உணர்ச்சி வசப்படுகிறீர்கள், ரஞ்சன்?''

''அந்த ஆறு லட்சம் தட்டிப் பறித்தது யார் தெரியுமா? நம் ஆட்கள். சொல்லப் போனால், எனக்கு நேர் கீழே இருக்கும் ஆட்கள். அவப்பெயர் தாங்காமல் தற்கொலை செய்து கொண்ட சுந்தரமும், அவர் பொண்டாட்டியும் யார் தெரியுமா? என்னுடைய வளர்ப்பு அப்பா, அம்மா..''

''என்னது?''

''சின்ன வயதில் என் அப்பாவும், அம்மாவும் செத்த போது, பக்கத்து வீட்டில் இருந்த சுந்தரம் அன்க்கிள்தான் என்னை அவர் குடும்பத்தில் ஒருவராக ஏற்றுக் கொண்டார். அவருடைய மகன் தனசேகரையும், என்னையும், எந்த வித்தியாசமும் இல்லாமல் வளர்த்தார். ஆனால் புத்தி கெட்டு நான் வீட்டை விட்டு ஓடினேன். அப்போது என் பெயர் ரஞ்சன் இல்லை. என் பெயர் குணசேகர், குணமே இல்லாதவனுக்கு பெயர் குணசேகர். மெட்ராஸ் வந்து இறங்கினேன். ரயில் நிலையத்தில் என்னை ஒருத்தன் கவர்ந்து கொண்டான்.

''சர்க்கரை தடவிய வார்த்தைகள் எனக்குப் பிடித்திருந்தது. பள்ளிக்கூடம் போக வேண்டாம் என்பது பிடித்திருந்தது. அவனுடைய சகவாசத்தில் பிக்பாக்கெட் அடிப்பது. சின்னத் திருட்டுகள் செய்வது எனக்குப் பழக்கமானது. அந்தக் கலையில் கொஞ்சம் தேர்ந்தவனானதும்,

கதிரவன் குரூப்பில் சேர்ந்தேன். திருட்டிலிருந்து பிர மோஷன் வாங்கி கொலை செய்வதில் ராஜாவானேன். கதிரவனின் பாதுகாப்புப் படையின் தலைவனானேன்.

"பேப்பரில் இந்த செய்தியும், இந்த போட்டோக்களும் என்னை உலுக்கி விட்டன.

"ஐயையோ, என்னை தெருவிலிருந்து எடுத்துக் காப்பாற்றிய குடும்பத்திற்கு நான் செய்த நன்றிக் கடன் இது தானா. ராத்திரிகளில் என்னால் தூங்கவே முடிய வில்லை. யோசிக்க யோசிக்க மண்டை வெடித்து விடும் போல் இருந்தது. எல்லாம் எதனால்? எல்லாம் இருந்த குரூப்பால். எல்லாம் இந்த நடவடிக்கைகளால்..."

"இதே பேப்பரில் மூன்றாம் பக்கத்தில் ஒரு நியூஸ் வந்திருக்கிறது பார்" - ரஞ்சன் பரபரப்பாகப் பிரித்துக் காட்டினான்.

**இளைஞன் ரயிலில் விழுந்து சாவு!**

"இது யார் தெரியுமா? தனா... தனசேகர். சுந்தரத்தின் மகன்! போலீஸ் துரத்துவதாக அவன் பயந்து ஓடி, ரயிலில் அடிபட்டு செத்து விட்டான். என் குடும்பமே அழிந்து விட்டது மது. உடனே எனக்கு ஒரு வெறி. இந்த அழிவிற்குக் காரணமாய் இருந்த கதிரவன் குரூப்பையும், அதே போல் உருவாகிக் கொண்டிருக்கும் மதியழகன் குரூப்பையும் நிர்மூலமாக்கத் திட்டமிட்டேன்..."

"ரஞ்சன்... நீ.. நீங்களா இதற்கெல்லாம் காரணம்?"

"நானே தான். பங்கஜ், அப்புறம் கிச்சா, கடைசியாக கிருபா எல்லோரும் என் கையால் தான் முடிவிற்கு வந்தார்கள்..."



"ரஞ்சன்..." - மதுவந்தி பதறி எழுந்தாள். "அப்படி யானால் கதிரவன்?"

"கதிரவன், மதியழகன்... இரண்டு பேருக்கும் இன்றைக்கு ராத்திரி முடிவுரை..."

மதுவந்தி பதட்டத்துடன் நகரத்துவங்க, ரஞ்சன் அவளை சரேலென தோள்களைப் பிடித்து அழுத்தி கட்டிலில் உட்கார வைத்தான். "இப்போது நீ வெளியில் போக முடியாது, மது... வெளியில் போய் கதிரவனையோ, மதியழகனையோ எச்சரிக்கக்கூடாது... என் காரியம் முடியும் மட்டும் இந்த இடத்தை விட்டு அசைய முடியாது."

"ரஞ்சன் விடுங்கள் என்னை! உங்கள் துரோகத்திற்கு நானும் துணையாக இருக்க முடியாது."

"நான் மட்டும் இல்லை, மது. என் பேச்சை எந்த நிமிடத்திலும் தட்டாத என் சிப்பாய் ஒருத்தன் - கேசவ் என்று பெயர் - அவனுடைய உதவியுடன்தான் எல்லாம் நடந்து வந்திருக்கிறது. என் மேல் சந்தேகம் வராமல் இருக்க, கதிரவனுடன் நான் இருக்கும்போது சுட்டதெல் லாம் கேசவ்தான். என்னையே சுட்டுவிட்டது போல் செட்டப் செய்து லேசான காயம் வரவழைத்தது கேசவ் தான்... துப்பாக்கியில் என்னைவிடத் தேர்ந்தவன்..."

"கேசவ் துணை வரலாம். நான் துரோகத்திற்கு சம்மதிக்க மாட்டேன்."

"ஸாரி டியர். இந்த உடம்பை எத்தனையோ தடவை மிருதுவாகக் கையாண்டிருக்கிறேன்... ஆனால் இப்போது?"

பளீர் என்று ஒரு அறை கொடுத்தான். தடுமாறி விழுந்த மதுவந்தியின் கைகளையும், கால்களையும் கட்டிலின் கம்பிகளுடன் சேர்த்துக் கட்டினான்.

''உன்னிடம் ஒரு முறை சொன்னேனே, நினைவிருக்கிறதா? வட்டத்தில் சிக்கியவன் நான் என்று. வட்டத்தை விட்டு வெளியே வர முடியவில்லை. வட்டத்தையே அழித்து விடுதலையாகப் போகிறேன்.''

கதிரவனுக்கு தயார் செய்த கோட்டை எடுத்துக் கொண்டு, கதவைச் சாத்தி விட்டு, ரஞ்சன் வெளியேறினான்.



# 10

''இது புல்லட் ப்ரூஃபா?'' என்றான், கதிரவன், அந்தக் கோட்டைக் கையில் வாங்கி.

''ஆமாம், கதிர். தோட்டாவால் துளைக்க முடியாத மெட்டீரியலை உள்ளே வைத்து தைத்திருக்கிறேன்...'' என்றான், ரஞ்சன்.

''வெரிகுட்...'' கதிரவன் கோட்டை அணிந்து கொண்டான். ''மதியழகனிடம் பேசிவிட்டேன். இருவருக்குப் பொதுவான இடத்தில் சந்திக்க அவனும் ஒத்துக் கொண்டுள்ளான். வேளச்சேரி தாண்டி ராஜீவ் நகரில் தனியான ஒரு ஹோட்டல் வளாகத்தில் சந்திக்க முடிவாகியிருக்கிறது. நம்முடன் துப்பாக்கி ஏந்திய காவலர்களும் உண்டு. அவன் பக்கத்திலும் அழைத்து வரலாம் என்பது பேச்சு...''



''போவோமா?''

காவலர்கள் மாருதி ஜிப்ஸியில் பின் தொடர, ரஞ்சனும், கதிரவனும் எஸ்டீமில் ஏறினார்கள்.

* * *

ரஞ்சனின் படுக்கை எத்தனையோ இரவுகளில் மதுவந்திக்கு இனித்திருக்கிறது. ஆனால் கைகளும், கால்களும் கட்டப்பட்ட நிலையில் இப்போது முள் மீது படுத்தது போல் இருந்தது.

கைகளையும், கால்களையும் இடைவிடாமல் உதறிக் கொண்டே இருந்தாள்.

சரேலென்று வலது கையைக் கட்டியிருந்த கயிற்றில் ஒரு வட்டம் கழன்றது.

மதுவந்தி வேகத்தை அதிகரித்தாள். முழு முயற்சியுடன் கட்டுகளை அவிழ்ப்பதில் முனைந்தாள்.

* * *

வேளச்சேரி தாண்டியதும் நெடுஞ்சாலையில் ஒரு ஒதுக்குப் புறமான இடத்தில் ராஜீவ் நகர்.

ராஜீவ் நகர் என்று அறிவிக்கும் போர்டுக்குப் பின்னே அந்த தனியார் ஹோட்டல்.

மாபெரும் ஏக்கர்களில் மிகச் சிறிய ஹோட்டல். எதிர்காலத்தில் பெரிய ஹோட்டலாக உருமாறுவதற்கு முன்னோடியாக இப்போதே நவீன அமைப்பு.

வாகனங்கள் அங்கங்கே பார்க் செய்யப்பட்டிருந்தன.

மற்றவர்களிலிருந்து ஒதுங்கி, காம்பவுண்டு சுவரை ஒட்டி பின்புறம் இருந்த பகுதியில் போய் நின்றது எஸ்டீம்.

காவலர்கள் ஜீப்பிலிருந்து கொண்டே தயாராய் இருக்க, கதிரவன் இறங்கினான்.

* * *

'ம்ம்மாஹ்...'

பட்டென்று கயிற்று வளையங்களிலிருந்து மதுவந்தியின் வலது கை முற்றிலும் விடுபட்டது.

பரபரப்பாக இடது கைக் கட்டையும் அவிழ்த்தாள்.

எழுந்து உட்கார்ந்து கால்களைக் கட்டியிருந்த கயிற்றையும் அவிழ்த்தாள்.

ரஞ்சன் இந்த அடாவடி வேலைகளில் ஈடுபடுவது பிடிக்கவில்லை என்று அவனை அவளே விலகச் சொன்னது உண்மைதான். ஆனால் சட்டத்தை அவனே கையில் எடுத்துக் கொண்டு நினைத்த போதெல்லாம் உயிர்களை நசுக்குவது அவளுக்கு சம்மதமில்லை. அதுவும் கதிரவன் போட்ட சோற்றை உண்டு. அவனுடைய பராமரிப்பில் வளர்ந்து விட்டு, இப்போது அவனையே... நோ... இதை அனுமதிக்கக் கூடாது.

கதிரவனை கூப்பிட்டு எச்சரித்தாக வேண்டும்.

கதிரவனின் செல்லுலார் நம்பர் என்ன?



அவளுக்குத் தெரியாது. ரஞ்சன் எங்கேயாவது குறித்து வைத்திருக்க மாட்டானா என்ன?

ரஞ்சனின் பொருட்களைக் கலைத்து அந்த நம்பரைத் தேட ஆரம்பித்தாள்.

* * *

டாடா சியாராவிலிருந்து இறங்கினான், மதியழகன்.

கதிரவனின் இரண்டு கைகளையும் பற்றிக் குலுக்கினான்.

"எங்கே உங்கள் பிரதர்? கிருபா?" என்றார்.

ராஸ்க்கல், என் தம்பியைத் தீர்த்து விட்டு, என்னிடமே தைரியமாக அவனைப் பற்றிக் கேட்கிறாயா? - கதிரவன் உள்ளுக்குள் புகைந்தான். ஆனால் வெளியில் புன்னகை காட்டினான்.

"கிருபாவால் வர முடியவில்லை" என்றான்.

* * *

இதோ! இதோ கிடைத்து விட்டது. கதிரவனின் செல்லுலார் நம்பர்.

மதுவந்தி அவசரம் அவசரமாக டயல் செய்ய ஆரம்பித்தாள்.

* * *

"என்னோடு என்ன பேச வேண்டுமென்கிறீர்கள், கதிர்?"

கதிரவன் பதில் சொல்லுமுன் அவன் பாக்கெட்டில் இருந்த செல்லுலார் போன் கிணுகிணுத்தது.

எடுத்தான். காதில் வைத்தான்.

''ஹலோ... நான் மது பேசுகிறேன்... மதுவந்தி'' என்றது மறுமுனைக் குரல் பரபரப்பாக.

உடன் கதிரவன் போனை ரஞ்சனிடம் நீட்டினான். ''உங்க ஆளுப்பா...'' என்றான், புன்னகையுடன்.

ரஞ்சன் ரிசீவரை காதில் வைத்தான்.

''கதிர் ரஞ்சன் உங்களைக் கொலை செய்யப் போகிறான்... ஜாக்கிரதை'' மதுவந்தியின் குரல் மறுமுனையில் க்ரீச்சிட்டது.

ரஞ்சன் ரிசீவரில் புன்னகைத்தான். உணர்ச்சிகளை வெளியில் காட்டாமல், ''நான் கவனித்து கொள்கிறேன் டியர்'' என்றான். போனை அணைத்தான்.

''என்னவாம்?'' கதிரவன்.

''காரியத்தை சீக்கிரம் முடித்து விட்டு வா என்கிறாள்'' என்றான், ரஞ்சன்.

''அப்புறம் எதற்காக காத்திருக்கிறாய்? காரியத்தை சீக்கிரம் முடியேன்'' என்று கிண்டலடித்தான், கதிரவன்.

ஜோக் புரியாமல் புன்னகை செய்தான், மதியழகன்.

செல்லுலார் மறுபடி ஙண ஙண வென்றது.

''நான் தள்ளி எடுத்துப் போய்ப் பேசுகிறேன்'' - அவர்களிடமிருந்து விலகும் முன், ரஞ்சன் குனிந்து கதிரவனின் கால்களைத் தொட்டான். ''எல்லாவற்றுக்கும் தாங்க்ஸ் கதிர்... என்னை மன்னித்து விடு...'' என்றான்.



''மன்னிப்பா... வாட் டூ யூ மீன்?''

ரஞ்சன் பதில் சொல்லாமல் விலகி ஓடினான். காரில் ஏறி அதை பரபரப்பாகக் கிளப்பினான்.

''ரஞ்சன். என்ன ஆயிற்று?'' - கதிரவன் கத்தினான்.

ரஞ்சன் பாக்கெட்டிலிருந்து ரிமோட் எடுத்தான். பொத்தானை அழுத்தினான்.

கதிரவன் அணிந்திருந்த கோட்டுக்குள் வைத்துத் தைக்கப்பட்ட பல்வேறு வெடிகுண்டுகள் ஒரே சமயத்தில் வெடிக்க -

கதிரவன், மதியழகன் அவனைச் சுற்றி வட்டத்தில் இருந்தவர்கள் அத்தனை பேரும் ஒரு கணம் நெருப்புப் பொறிகளாய்க் காட்சியளித்தனர். குபுகுபுவென்ற புகையாய் மாறினர். துகள் துகளாய் திசையெங்கும் தெறித்தனர்.

ரஞ்சன் செல்லுலாரில் போலீஸ் கண்ட்ரோல் ரூமைக் கூப்பிட்டான்.

''என் பெயர் ரஞ்சன். உங்களிடம் சில வாக்குமூலம் கொடுக்க விரும்புகிறேன் என்றான், ஸ்டியரிங்கை வளைத்து.